எனவே, மனை உரிமையாளர் Mr. M. Ramakrishnan அவர்கள் Old Door No.110, New Door No.146, Swamy Naicken Street, Chintadripet, Chennai - 600002 comprised in S.No.1117/5, Block No.15 of Chintadripet Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 22.75 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.009/2023, நாள்.24.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

******

ப.து.ந.க.எண்.டி.1/0084/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 13.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:019/2023 **பொருள் எண்.19**

தானப்பத்திரம்

மண்டலம்-8ல் Dr. Kathija Mahmood அவர்கள் Old Door No.21 & 1/13, New No.472-B/1 & 2, Kilpauk Garden Road, Kilpauk, Chennai, Old S.No.70, New S.No.77/3, T.S.No.77/97 of Block No.6, Egmore Villageல் உள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8ல் PPA/WDCN08/10369/2022 Date.30.10.2022ன்படி விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பதாரர் சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மனையின் மொத்த பரப்பளவு 254.00 சதுர மீட்டர் ஆகும். விண்ணப்பதாரர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக 14.90 மீ அகல Kilpauk Garden Road அமையபெற்றுள்ளது. Kilpauk Garden Road சென்னை பெருநகர முழுமை வளர்ச்சித் திட்டம் //ன் படி 18.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.65 ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே, மனை உரிமையாளர் Dr. Kathija Mahmood அவர்கள் Old Door No.21 & 1/13, New No.472-B/1 & 2, Kilpauk Garden Road, Kilpauk, Chennai, Old S.No.70, New S.No.77/3, T.S.No.77/97 of Block No.6, Egmore Villageல் அமைந்துள்ள நிலத்தில் சாலை விரிவாக்கம் செய்ய மனையின் மொத்தப் பரப்பளவில் 4.65ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக எடுத்துக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.005/2023, நாள்.24.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

****

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN15/00873/2022*

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *10.01.2023* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:020/2023 **பொருள் எண்.20**

தானப்பத்திரம்

மண்டலம்-15ல் M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr. G. Syed Jaffar அவர்கள் Sivasamy Avenue, Neelankarai, Chennai – 600115, As per patta number 8256 New S.No.74/133 of Neelangarai Villageல் அமைந்துள்ள நிலத்திற்கு குடியிருப்பிற்கான மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி D1/SD/WDCN15/00873/2022, நாள்:12.11.2022ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை G.O.Ms.No.181 வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.09.12.2020-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரான M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr. G. Syed Jaffar மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்கள்.

இது தொடர்பாக கீழ்கண்டவாறு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது:

(அ) M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr. G. Syed Jaffar என்பவர் மனைஉட்பிரிவு அனுமதி வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி நிலத்தின் மொத்தப் பரப்பளவு 6595.00 சதுர மீட்டர் ஆகும். அவற்றில் சாலைக்கென 1132.89 சதுர மீட்டர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr.G. Syed Jaffar என்பவர் மனையினை அபிவிருத்தி செய்ய உரிமையுள்ளவராக அறியப்படுகிறார். மனை உரிமையாளர் பட்டாவினை, வட்டாட்சியர், சோழிங்கநல்லூர் வட்டம் அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார்கள்.

(இ) விண்ணப்பதாரர் சமர்ப்பித்த வரைபடம் Tamil Nadu Combined Development & Building Rules, 2019 க்கு ஏற்ப உள்ளது. மனைக்கு அணுகு சாலையாக 7.32 மீட்டர் அகல சாலை அமைந்துள்ளது.

(ஈ) Tamil Nadu Combined Development & Building Rules, 2019ன் படி 10,000 ச.மீ கீழே நிலத்தின் பரப்பளவு இருந்தால் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கு நிலமாகவோ அல்லது அதற்கு ஈடான தொகையாகவோ செலுத்தலாம். மனைஉட்பிரிவு 10,000 சதுர மீட்டருக்குள் இருப்பதால் விண்ணப்பதாரர் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலத்திற்கு ஈடாக தொகையை செலுத்த இசைவு தெரிவித்துள்ளார்.

(உ(*i*) மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலையினை மேம்படுத்த மற்றும் தெரு விளக்குகள் அமைக்க விண்ணப்பதாரரே முன்வந்துள்ளதால் அரசாணை எண்.141, Housing and Urban Development [UD4(1)] Department dated 16.07.2022 ன்படி அனுமதிக்கப்பட்டு கட்டணங்கள் வசூலிக்கப்படவில்லை.

(உ(*ii*) மனைப்பிரிவில் மேற்கொள்ளப்படும் சாலைப்பணிகள் மற்றும் தெருவிளக்கு அமைத்தல் ஆகியவை பெருநகர சென்னை மாநகராட்சி, பேருந்து சாலை துறை மற்றும் மின் துறை பரிந்துரைக்கும் விவரக்குறிப்புகளுக்கு ஏற்ப முறையே அமைக்கப்பட வேண்டும். இந்த விவரக்குறிப்புகளை கொண்டுதான் சாலைப் பணிகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்கப்பட வேண்டும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்படும்.

(ஊ) மனைஉட்பிரிவு வரைபடம் விதிமுறைக்கு உட்பட்டு உள்ளதாலும், விண்ணப்பதாரர் M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr. G. Syed Jaffar அம்மனையினை மேம்படுத்துவதற்கு உரிமை உள்ளவராக கருதுவதாலும் சாலைக்கென 1132.89 சதுர மீட்டர் நிலம் தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, Sivasamy Avenue, Neelankarai, Chennai – 600115, As per patta number 8256, New S.No.74/133 of Neelangarai Village ல் அமைந்துள்ள நிலத்திற்கு மனைஉட்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் சாலைக்கென 1132.89 சதுர மீட்டர் நிலத்தை M/s. Iyra Developers Private Limited represented by its Authorized Signatory Mr. G. Syed Jaffar அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி தானமாக பெற்றுக் கொள்வதற்கு, நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.006/2023, நாள்.24.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

திக.மேநக.எண்.அ5/3356 /2020

முதன்மைச்செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.12.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:021/2023 **பொருள் எண்.21**

பெருநகர சென்னை மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை துறை - திரு.சி.முரளி செயற்பொறியாளர், மண்டலம்-1 ஓய்வு நாள்.30.06.2012 - தணிக்கை தடை பத்தியை சிறப்பினமாக கருதி நீக்கம் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-1ல் திரு.சி.முரளி, செயற்பொறியாளராக பணிபுரிந்து வயது முதிர்வு காரணமாக 30.06.2012 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றவருக்கு ஓய்வூதிய பயன்கள் வழங்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் ஆணை W.P.No.12372/2016 நாள்.01.04.2016 மற்றும் உயர் நீதிமன்ற வழக்கு எண்.Contempt Petition No.1760/2017 in W.P.No.12372/2016ல் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள வழக்கின்படி, தனியருக்கு பெருநகர சென்னை மாநகராட்சி, துணை ஆணையர் (வ(ம)நிதி) அவர்களின் 15.11.2017 நாளிட்ட செயல்முறை ஆணை பொ.து.ந.க. எண்.பி1/031697/2017ன்படி, ஓய்வூதியம் மற்றும் தொகுப்பு தொகை மட்டும் அனுமதிக்கப்பட்டு தணிக்கை தடை நிலுவையில் உள்ளதால் பணிக்கொடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

திரு.சி.முரளி, செயற்பொறியாளர் அவர்கள் திடக்கழிவு மேலாண்மை துறையில் பணிபுரிந்த காலத்திற்கான 2009-10ல் பத்தி எண் 27 தணிக்கை தடை நீக்கம் செய்ய விளக்கம் கோரி கடிதம் அனுப்பப்பட்டது.

திரு.சி.முரளி செயற்பொறியாளர் அவர்களின் 04.11.2018 நாளிட்ட கடிதத்தில், இந்த பணி 2010ம் ஆண்டிலேயே முடிவடைந்து விட்டது எனவும் இதற்கான தணிக்கை அறிக்கை 25.07.2012 நாளிட்ட கடிதம் மூலம் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு அளிக்கப்பட்டுள்ளது எனவும் தணிக்கை 2012ம் ஆண்டில் தான் நடைபெற்றிருக்க வேண்டும் எனவும் அப்போது தான் 19.10.2010 அன்று திடக்கழிவு மேலாண்மை துறையில் இருந்து விடுவிக்கப்பட்டு செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-4க்கு மாற்றப்பட்டேன் என்றும், 05.01.2012 முதல் 24.04.2012 வரை மழைநீர் வடிகால் துறையில் செயற்பொறியாளராக பணிபுரிந்துள்ளேன் என்றும் 24.04.2012 முதல் மண்டலம்-1ல் (திருவொற்றியூர்) செயற்பொறியாளராக பணியாற்றி 30.06.2012ல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றும், இதே போல் மற்ற மூன்று மண்டலங்களிலும் (மண்டலம் 2, மண்டலம் 5 மற்றும் மண்டலம் 7) கட்டப்பட்ட குப்பை மாற்று நிலையங்கள் பணிகளும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் மூலம் செயலாக்கப்பட்டு செலவினமும் மேற்கொள்ளப்பட்டது என்றும் அந்த பணிகளுக்கான அனைத்து கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்களும் உள்ளாட்சி நிதி தணிக்கை மட்டுமல்லாமல் மாநில தலைமை கணக்காயர் அலுவலக தணிக்கை அலுவலர்களாலும் (AG Audit party) தணிக்கை செய்யப்பட்டது என்றும் மாநில தலைமை தணிக்கை கணக்காயர் அவர்களினால் மேற்சொன்ன செலவினங்கள் பற்றி குறைபாடுகள் தெரிவித்து தடை எதுவும் குறிப்பாக எழுப்பப்படவில்லை என்றும் மாநில தலைமை கணக்காயர் அவர்களினால் முழுமையாக தணிக்கை செய்யப்பட்டுள்ள செலவினத்திற்கே உள்ளாட்சி நிதி தணிக்கை துறையினரால் தடை எழுப்பப்பட்டுள்ளது என்றும் அந்த இரண்டு தணிக்கைகளும் தான் பதவி உயர்வில் பணியிடமாற்றம் செய்யப்பட்ட பிறகே நடைபெற்றது என்றும் சம்பந்தப்பட்ட எழுத்தரும் 30.11.2011ம் ஆண்டிலேயே பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டார் என்றும் அவரும் அனைத்துக் கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்களையும் வைத்திருப்பார் என்றும் அதன் பிறகே மேற்சொன்ன தணிக்கைகள் நடைபெற்றது என்றும் அளவு புத்தகங்கள் எந்த நிலையில் உள்ளாட்சி தணிக்கைக்கு உட்படாமலிருந்தது என்பது தெரியவில்லை என்றும் மற்ற அனைத்து பணிகளின் அளவு புத்தகங்களும் இருக்கும்போது இறுதி பட்டி தொகை வழங்கலுக்காக சமர்ப்பிக்கப்படும்போது அத்துடன் முடிவு அறிக்கையும்

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் இந்த முடிவு அறிக்கை அளவு புத்தகத்தின் பிரதிபலிப்பே ஆகும் என்றும் இது பகுதி கணக்கு குழுமத்தின் பாதுகாப்பில் இருக்கும் என்றும் இதனை சம்பந்தப்பட்ட கோப்பினை தணிக்கை செய்யும்போது தணிக்கை குழுவினர் சரிபார்ப்பது நடைமுறை பழக்கமாகும் என்றும் இறுதி பட்டிக்கு முன்னர் 4 பட்டிகள் அனுமதிக்கப்பட்டு ஒவ்வொரு பட்டியுடனும் பணி தொடர்பாய் சமர்பிப்பதும் நடைமுறையாகும் என்றும் இந்த நேர்வில் அளவு புத்தகங்கள் இல்லாமல் தக்க வைப்பு தொகையினை ஒப்பந்ததாரருக்கு வழங்க 13.02.2013 அன்று குப்பை மாற்று நிலையம் உதவி செயற்பொறியாளரால் ஆய்வு செய்யப்பட்டு கட்டுமானத்தின் உறுதி பற்றி நற்சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது என்றும், இந்த சான்றிதழ் அளவு புத்தகம் இல்லாமலேயே வழங்கப்பட்டுள்ளதா என்றும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட்ட பிறகு சுமார் 2 ஆண்டுகளுக்குப் பிறகே தணிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாலும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் பதவி உயர்வு மற்றும் பணியிடமாற்றம் பெற்று சென்றதாலும் அளவு புத்தகம் வேறு ஏதாவது இடத்தில் தவறுதலாக கலந்திருக்கலாம் என்றும் இறுதிப் பட்டியல் தயார் செய்து பணப்பட்டுவாடா செய்வதற்காக பகுதி கணக்கு குழுமத்திற்கு அனுப்பப்படும் என்றும் பணப்பட்டுவாடா முடிந்தவுடன் அளவு புத்தகங்கள் கோப்புடன் தணிக்கை குழுவிற்கோ அல்லது சம்பந்தப்பட்ட துறைக்கோ அனுப்பப்படும் என்றும் சம்பந்தப்பட்ட துறைக்கு கோப்பு மற்றும் அளவை புத்தகங்கள் துறையினால் தணிக்கை குழுவிற்கு அனுப்பப்படும் என்றும் தணிக்கை முடிந்த பிறகு கோப்பும் அளவு புத்தகமும் சம்பந்தப்பட்ட துறைக்கு திருப்பி அனுப்பப்படும் என்றும் சம்பந்தப்பட்ட துறையில் உள்ள எழுத்தர் அக்கோப்பினையும் அளவு புத்தகத்தினையும் தன் பொறுப்பில் வைத்துக்கொள்வார் அல்லது சம்பந்தப்பட்ட உதவி / இளநிலை பொறியாளருக்கோ அனுப்பி கையொப்பம் பெற்றுக்கொள்வார் என்றும் இந்நிலையில் 19.10.2010ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை துறையில் இருந்து விடுவிக்கப்பட்டு செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-4, மழைநீர் வடிகால் துறை மற்றும் மண்டலம்-1ல் (திருவொற்றியூர்) செயற்பொறியாளராக பணியாற்றி 30.06.2012ல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டேன் என்றும் 30.06.2012ம் ஆண்டு பணி ஓய்வு பெற்ற தன்னை 13.02.2013ம் ஆண்டு நடைபெற்ற நிகழ்விற்கு பொறுப்பாக்குவது எந்த விதத்தில் நியாயம் என்றும் இந்த அளவு புத்தகங்களுக்கு தன்னை பொறுப்பாக்காமல் இந்த பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை பணிக்கான முடிவு அறிக்கையினை ஏற்று தணிக்கை தடையினை நீக்குமாறும் உள்ளாட்சி நிதி தணிக்கையினை கேட்டுக்கொண்டுள்ளார்.

10.12.2018 நாளிட்ட தணிக்கை அறிக்கையில் தனியர் அளித்துள்ள விளக்கத்துடன் தணிக்கை தடையினை நீக்கம் செய்ய கோரி உள்ளாட்சி நிதி தணிக்கைக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது. அதில் நவீன குப்பை மாற்றும் நிலையம் கட்டும் பணி ரூ.1.59 கோடியில் பணி நடைபெற்றமைக்கான அளவுப் புத்தகம் தணிக்கைக்கு அளிக்கப்படும் வரை இப்பத்தியை நிலுவையில் வைக்கலாம் என தெரிவிக்கப்பட்டது.

திடக்கழிவு மேலாண்மை துறையின் (தி.க.மே.து.ந.க.எண்.அ5/3886/2018) 21.12.2018 நாளிட்ட கடிதத்தில் திரு.சி.முரளி, செயற்பொறியாளர் அவர்கள் தணிக்கைக்கு அளித்த பதில் தணிக்கைக்கு உட்படுத்தியதில் ஏற்றுக் கொள்ளவில்லை எனவும் தணிக்கையில் குறிப்பிட்டபடி அளவு புத்தகத்தை தாக்கல் செய்தால் மட்டுமே பத்தி நீக்கம் செய்யப்படும் என தெரிவித்துள்ளனர் என்பதை தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது.

மண்டல அலுவலர்-1, அவர்களின் 04.06.2019, 04.11.2019 ஆகிய நாளிட்ட கடிதத்தில் தனியருக்கு பணிக்கொடை நிலுவையில் உள்ளதாலும் தனியர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாலும் தணிக்கை தடை பத்தியை நீக்கம் செய்ய கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு 22.10.2020 அன்று குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டதில் இப்பத்தி சம்மந்தமான கோப்பு கிடைக்கப்பெறவில்லை எனவும் தணிக்கை தடைகள் நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதாலும் கோப்புகளை கையாண்ட பணியாளர்கள் வேறு துறைக்கு பணியிடமாற்றம் மற்றும் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றதன் அடிப்படையிலும் மேலும் அந்தந்த காலகட்டங்களில் பணிபுரிந்த மேற்பார்வை பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள்

மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றதாலும், பழைய மருந்தகக்கட்டிடத்திலிருந்து அலுவலகம் புதிய கட்டிடமான அம்மா மாளிகையில் இடம் மாற்றம் செய்யப்பட்டது என்றும் மேலும் அலுவலர்கள் முறையாக கோப்புகள் ஒப்படைக்காத நிலை போன்ற பல்வேறு காரணங்களால் கோப்புகளின் நிலை அறிய இயலாத நிலையில் இதனை சிறப்பினமாக கருதி இப்பத்தியினை நீக்கம் செய்ய கோரப்பட்டது.

இணை இயக்குநர்(மு.,கூ.பொ), பெருநகர சென்னை மாநகராட்சி, தணிக்கை அவர்களின் 17.11.2020 நாளிட்ட குறிப்பில் (எண்.தொ.க.எண்.6/ஈ1/2020)ல் நிலைக்குழு (கணக்கு) விற்கு பரிந்துரைக்கப்பட்டது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த 20.11.2020 நாளிட்ட குறிப்பில் கண்டவாறு 10 வருடங்களுக்கு மேலாக நிலுவையில் உள்ள உள்ளாட்சி தணிக்கைத் தடை/சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஓய்வு பெற்றதாலும் கோப்புகள் கிடைக்கப் பெறாததாலும் சிறப்பு நிகழ்வாக கருதி நிலுவையில் உள்ள பத்தியை நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு குறிப்பு சமர்ப்பிக்கப்பட்டது.

அதில் அப்பொழுது துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்கள் தணிக்கைத் தடைப் பத்திகள் பெருநகர சென்னை மாநகராட்சி தணிக்கை, இணை இயக்குனரால் நிலைக்குழுவிற்கு பரிந்துரைக்கப்பட்டதற்கு சுற்றறிக்கை இருப்பின் அதனை அளிக்க கோரி நிலைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட கோப்புகள் இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டது.

இதன் அடிப்படையில் உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை, அவர்களின் 12.01.2021 நாளிட்ட கடிதத்தில் (ஒ.மு.எண்.2532/ஈ1/2020) தணிக்கைத் தடையின் தொகை அதிகமாக உள்ளபோதும் அல்லது பத்தியின் தன்மை கடுங்குறைபாடாக உள்ளபோதும், பத்திகள் நிலுவையில் வைக்காது ஓய்வு பெற்ற பணியாளர்கள் / அலுவலர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, அவ்வாறான பத்திகளை நீக்கம் செய்வது அல்லது நிலுவையில் வைப்பது தொடர்பான முடிவினை எடுக்கும் பொருட்டு நிலைகுழுவின் மேலான தீர்மானத்திற்கு அனுப்பப்படுகிறது எனவும் இதற்கென தனி சுற்றறிக்கை ஏதும் இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதன்மை செயலர் / ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பித்த 03.07.2021 நாளிட்ட குறிப்பு மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையில் சமர்ப்பித்த விவரங்களின் அடிப்படையில் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு 03.07.2021 நாளிட்ட குறிப்பில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்நிலையில் இணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் பணியிட மாற்றத்தினால் கோப்பு கையொப்பம் பெறப்படாமல் மீள இவ்வலுவலகத்திற்கு திருப்பப்பட்டது.

இயந்திர பொறியியல் துறையின் 11.08.2022 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-4ல் உள்ள குப்பை கொட்டும் வளாகத்தை நவீன குப்பை கொட்டும் வளாகமாக கட்டுமானம் செய்த வகையில் கீழ்கண்ட பட்டியல் தீர்வு செய்யப்பட்டுள்ளது. அந்த கோப்பு எண்.சி.எஸ்.009/22.06.09ல் 5 பட்டிகள் தீர்வு செய்யப்பட்டது. அளவு புத்தகம் இத்துறைக்கு திரும்ப பெறப்படவில்லை, ஓய்வு பெற்ற அலுவலருக்கு ஓய்வுக் கால பணப்பயன்கள் தீர்வு செய்யாத காரணத்தினால் தனியர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

எனவே, இது நீதிமன்ற வழக்கு என்பதால் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இத்துறைக்கு அளவு புத்தகம், கோப்பு மற்றும் சம்மந்தப்பட்ட அறிக்கை ஏதும் இருப்பின் இத்துறைக்கு அனுப்ப கணக்கு அலுவலர்(இயந்திரம்) அவர்களுக்கு அனுப்பப் பட்டது.

உதவி கணக்கு அலுவலர்(இயந்திரம்) அவர்களின் 16.08.2022 நாளிட்ட குறிப்பில், திருவாளர். வி.எஸ்.கட்டுமானம் நிறுவனத்தின் கோப்புகள் எம்.7/1869/2009, சி.எஸ்.எண்.009, சி.எஸ்.எண்.020, மற்றும் எம்.7/1869/2007, சி.எஸ்.எண்.033 (ம) எம்.7/1869/2007, சி.எஸ்.எண்.042, ஆகியவற்றின் கோப்புகள் பட்டி தீர்வு செய்யப்பட்ட பின்னர் கோப்புகள் மற்றும் அளவு புத்தகம் அனைத்தும் திடக்கழிவு மேலாண்மை துறைக்கு திரும்ப அனுப்பப்பட்டுவிட்டதனால் இது சம்மந்தமாக கோப்புகள் மற்றும் அளவு புத்தகம் பகுதி கணக்கு குழுமம் (இயந்திரம்) பிரிவில் இல்லை என தெரிவிக்கப்பட்டது.

மேற்கண்ட குறிப்பின் அடிப்படையில் மீள உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு 2009-10ம் ஆண்டுகளின் தணிக்கையினை 2011-2012ம் ஆண்டு மேற்கொள்ளும்போது மண்டலங்கள் இணைப்பு வேலை நடைபெற்றதால் இக்கோப்பு மற்றும் அளவு புத்தகத்தை பராமரிக்க இயலவில்லை எனவே தணிக்கைக்கு காண்பிக்க முடியாத நிலை ஏற்பட்டது. கோப்புகள் மற்றும் அளவு புத்தகங்கள் இனிவரும் காலங்களில் காண்பிக்க இயலாது என்பதால் இப்பத்தியை சிறப்பினமாக கருதி நீக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் 09.09.2022 நாளிட்ட (தொ.க.எண்.6/ஈ1/2022) அறிக்கையின்படி, நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)விற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்டுள்ள விவரங்களின் அடிப்படையிலும், மேலும் திரு.சி.முரளி, செயற்பொறியாளர் மண்டலம்-1 அவர்கள் 30.06.2012 அன்று வயது முதிர்வு ஓய்வு பெற்று 10 வருடங்களுக்கு மேலாக ஆகிவிட்ட நிலையில் தனியருக்கு தணிக்கை சான்றில் அனுமதிக்கப்பட்டுள்ள பணிக்கொடைத் தொகை ரூ.9,17,522/-ஐ இது நாள் வரை வழங்காததாலும் தனியர் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதால் பின்னர் இந்நாள் வரை வட்டி கணக்கிட்டு வழங்கும் நிலை ஏற்படுவதை தடுக்கும் பொருட்டும் தணிக்கை தடையை நீக்கம் செய்ய நிலைக்குழு (கணக்கு மற்றும் தணிக்கை)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "24.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு(கணக்கு) கூட்டத்தில் 2009-2010 ஆம் ஆண்டிற்கான தணிக்கை தடை பத்தி எண் 27ஐ நீக்கம் செய்ய தீர்மான எண்.01/2023, நாள்.24.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (கணக்கு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/2370/2023

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:022/2023 **பொருள் எண்.22**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர். S. பிரேமா, மருத்துவ அலுவலர், மண்டலம்- 13, பொதுசுகாதாரத் துறை அவர்கள் 31.01.2023 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 24.11.1997 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர். S. பிரேமா அவர்கள் மருத்துவ அலுவலராக 13.12.1997 அன்று பணியில் சேர்ந்து தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு 13.12.1997 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 13.12.1999 அன்று தகுதி காண்பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மாந.3)துறை, நாள்.06.10.2009ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ அலுவலர் பதவிகளுக்கு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 22.12.2021 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு, மேற்காண் மருத்துவ அலுவலர் அவர்கள் 31.01.2023 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். தனியரின் பிறந்த தேதி 20.01.1963, தனியர் பணியில் சேர்ந்த நாள் 13.12.1997, வயது முதிர்வு ஓய்வு நாள். 31.01.2023 ஆகும்.

தனியரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	வகித்த பதவி	துறை/ மண்டலம்	பணிபுரிந்த காலம்	ஒழுங்கு நடவடிக்கை/ முன்பண நிலுவை/ தணிக்கைத் தடை சான்றின் விவரங்கள்
1	மருத்துவ அலுவலர்	பழைய மண்டலம்- 3 புதிய மண்டலம் - 6	13.12.1997 முதல் 09.09.1998 வரை	இன்மை அறிக்கை பெறப்பட்டது.
2		பழைய மண்டலம்- 10 புதிய மண்டலம் - 13	10.09.1998 முதல் 12.02.2004 வரை	இன்மை அறிக்கை பெறப்பட்டது.
3		பழைய மண்டலம் - 09 புதிய மண்டலம் - 13	12.02.2004 முதல் 31.10.2011 வரை	
4		புதிய மண்டலம்-13	01.11.2011 முதல் 11.07.2019 வரை	
5		தலைமையகம் (மருந்தகம்)	12.07.2019 முதல் இந்நாள்வரை	இன்மை அறிக்கை பெறப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 04.11.2022 நாளிட்ட சான்றில், தனியர் சங்கத்தின் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நிதிஆலோசகர் அவர்களின் 10.11.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மருத்துவ அலுவலராக துறை/ மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1997 - 1998 முதல் 2020 - 2021 ஆம் ஆண்டுகள் வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி நிலுவை ஏதுமில்லை எனவும், 2021-2022 ஆம் ஆண்டு முதல் தனியர் ஓய்வுபெறும் நாளான 31.01.2023 வரைக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், அத்தணிக்கைத் தடை பத்திகள் தனியரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், மேலும், தனியர் ஓய்வு பெறும் நாள்வரை பணியாற்றிய காலத்தில், தனியர்மீது ஏதேனும் தணிக்கைத் தடை பத்திகள் எழுப்பப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின், அப்பத்திக்கு தனியரே முழுப்பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 14.10.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் தனிப்பட்ட முறையிலோ, கூட்டுப் பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரிய வந்தால் அத்தொகையினையும் மற்றும் ஓய்வுக்காலப் பணப்பயன்களான பணிக்கொடை, ஓய்வூதியம், தொகுப்பு தொகை, அகவிலைப்படி, இதர தொகைகளில் ஏதேனும் மிகையாக வழங்கப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின் அத்தொகையினையும், முன்பண தொகை நேர் செய்யப்படாமல் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அத்தொகை முழுவதையும் ஒரே தவணையாக பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி விடுவதாக தெரிவித்து ரூ.20/- முத்திரை தாளில் ஒப்புதல் அளித்துள்ளார்.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களின் 12.01.2023 நாளிட்ட குறிப்பில், மேற்கண்ட அலுவலரை 31.01.2023 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற்று தரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

டாக்டர்.S.பிரேமா, மருத்துவ அலுவலர் அவர்கள் 13.12.1997 அன்று பணியில் சேர்ந்துள்ளார். விதிகளின்படி தனியர் தகுதிகாண்பருவ காலத்திற்குள் துறைத் தேர்வுகளில் தேர்ச்சிபெற வேண்டும். ஆனால், தனியர், தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வினை டிசம்பர் 2002-ல் எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். மேற்காண் அலுவலர் துறைத் தேர்வுகளில் காலம் தாழ்த்தி அதாவது 4 வருடங்கள் கழித்து தேர்ச்சி பெற்றும், உரிய காலத்திலேயே தனியர் பணியில் சேர்ந்த நாளான 13.12.1997 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், 13.12.1999 அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான பணிவிதிகள் 1975-ன்படி தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெறவேண்டிய தேர்வில் தேர்ச்சி பெறாமல் காலந்தாழ்த்தி டிசம்பர் 2002-ல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றதால் தனியர் தேர்வு எழுதிய கடைசி நாள்வரை வழங்கப்பட்ட ஊதிய உயர்வுகளுக்கான பணப்பயன்களை முழுமையாக கணக்கீடு செய்து உரிய கணக்கு அலுவலர் அவர்களின் கருத்துருவுடன், தனியரின் ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து (except 1st increment) பிடித்தம்செய்யப்படவேண்டும்.

ஆகவே, மேற்கண்ட விவரங்களின் அடிப்படையில், டாக்டர்.S.பிரேமா, மருத்துவ அலுவலர், மண்டலம்-13, பொதுசுகாதாரத்துறை 2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை எனவும், தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையினை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியர் துறைத் தேர்வுகளில் காலந்தாழ்த்தி தேர்ச்சி பெற்றதால், துறைத் தேர்வு எழுதிய நாள்வரை வழங்கப்பட்ட ஊதிய உயர்விற்கான பணப்பயன்களை தனியரின் ஓய்வூதிய பணப்பயன்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும், தனியரை 31.01.2023 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ1/002434/2023

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:023/2023 **பொருள் எண்.23**

பெருநகர சென்னை மாநகராட்சி - பணியமைப்பு - பொதுத்துறை - திரு. ஜி. வீரப்பன், கண்காணிப்பு பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை துறை அவர்களை மன்றத்தின் அனுமதியுடன் அரசின் ஆணை பெற்று 28.02.2023 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க கோரி அரசுக்கு முன்மொழிவு அனுப்புவதற்கு அனுமதி.

தலைமை பொறியாளர்(தி.க.மே) அவர்களின் 13.01.2023 நாளிட்ட குறிப்பில், திரு.ஜி.வீரப்பன் கண்காணிப்பு பொறியாளர் (தி.க.மே)அவர்கள் 28.02.2023 அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல உள்ளதால் மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசுக்கு முன்மொழிவு அனுப்ப கோரியுள்ளார்.

திரு.ஜி.வீரப்பன் அவர்கள் சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் இளநிலை பொறியாளராக 08.04.1993 முதல் பணியில் நியமனம் செய்யப்பட்டார். இப்பதவியில் 08.04.1993 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பிறகு 08.04.1993 பதவி பெயர் மாற்றம் அடிப்படையில் உதவி பொறியாளராக மாற்றம் செய்யப்பட்டார். பின்னர் இப்பதவியில் 08.04.1995 அன்று தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். 18.07.2003 அன்று உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று இப்பதவியில் வரன்முறை செய்யப்பட்டு, தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். பின்னர், 11.01.2013 பிற்பகல் முதல் செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து 14.09.2015 பிற்பகல் முதல் மண்டல அலுவலராக பதவி உயர்வு பெற்று, இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. பிறகு, கண்காணிப்பு பொறியாளராக 06.03.2019 முதல் பதவி உயர்வு அளிக்கப்பட்டு தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இப்பதவியில் 06.03.2019 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. தனியரின் பிறந்த நாள் 27.02.1963 ஆகும். தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் 29 வருடங்களுக்கு மேல் பணிபுரிந்துள்ளார்.

தனியர் பணியில் சேர்ந்த 08.04.1993 முதல் இந்நாள் வரை அவர் பல பதவிகளில் பணியாற்றிய காலத்தில் துறைகள் மற்றும் மண்டலங்களில் தனியரை பொறுப்பாக்கிய தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் முன்பணம் பெற்று நேர் செய்யப்பட்ட விவரங்களை கீழ்கண்ட அட்டவணையில் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை - I

வ. எண்	பணியாற்றிய துறை / மண்டலம்	வகித்த பதவியின் பெயர்	பணிபுரிந்த காலம்		துறை தலைவர்/மண்டல அலுவலர்களால் வழங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் தணிக்கை தடைகள் "இன்மை" மற்றும் நிலுவைகள் பற்றி சான்றிதழ் வழங்கியுள்ள குறிப்பு எண் மற்றும் நாளின் விவரம்	துறை/மண்டல கணக்கு அலுவலர்களால் வழங்கப்பட்ட முன்பணம் பெற்று நேர் செய்யாமல் உள்ள நிலுவை தொகை மற்றும் "இன்மை" க்கான சான்றிதழ் வழங்கியுள்ள குறிப்பு எண் மற்றும் நாளின் விவரம்
			முதல்	வரை		
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	கட்டடத்துறை	இளநிலை பொறியாளர்	08.04.1993 மு.ப	15.07.1993 பி.ப	கண்காணிப்பு பொறியாளர் கடிதம் க.து.ந.க.எண்.இ3/2396/22, நாள்16.08.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/2022, நாள்: 08.08.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

2	மண்டலம்-9 (பழைய மண்டலம்- 6, பகுதி - 16, கோட்டம்-82)	இளநிலை பொறியாளர்	16.07.1993 மு.ப	09.02.1996 மு.ப	மண்டல அலுவலர்-9 அவர்களின் கடிதம் ம.அ.9.ந.க.எண்.அ3/02138/ 2022, நாள்: 11.06.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்-9 அவர்களின் குறிப்பு ம.அ.9.ப.க.கு.ந.க.எண்.அ5/ 402/22, நாள்: 12.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
3	மண்டலம்-9 (பழைய மண்டலம்- 6, பகுதி - 18, கோட்டம்-96)	உதவி பொறியாளர்	09.02.1996 பி.ப	04.03.1997 பி.ப		
4	தனியார் தெருக்கள் (பணித்துறை)	உதவி பொறியாளர்	05.03.1997 மு.ப	21.03.1997 மு.ப	கண்காணிப்பு பொறியாளர் (நகரமைப்பு) பணித்துறை அவர்களின் கடிதம் ப.து.ந.க.எண்.அ4/0579/22, நாள்:22.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் (பணி) குறிப்பு ப.க.கு.(ப).ந.க.எண்.அ3/06/ 22-23, நாள்:13.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
5	பேருந்து சாலைகள் துறை	உதவி பொறியாளர்	21.03.1997 பி.ப	23.04.1997 பி.ப		
6	மண்டலம்-9 (பழைய மண்டலம்- 6, பகுதி - 16, கோட்டம் -81)	உதவி பொறியாளர்	23.04.1997 பி.ப	07.10.1998 மு.ப	மண்டல அலுவலர்-9 அவர்களின் கடிதம் ம.அ.9.ந.க.எண்.அ3/02138/ 2022, நாள்: 11.06.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்-9 அவர்களின் குறிப்பு ம.அ.9.ப.க.கு.ந.க.எண்.அ5/ 402/22, நாள்: 12.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
7	மண்டலம்-10 (பழைய மண்டலம்- 8, பகுதி - 23, கோட்டம் -128)	உதவி பொறியாளர்	07.10.1998 பி.ப	06.09.2001 மு.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-10 அவர்களின் கடிதம் ம.அ.10.ந.க.எண்.அ9/13969/ 2022, நாள்:19.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அவர்களின் குறிப்பு ம.அ.10.ப.க.கு.ந.க.எண்.அ1/ 1471/22, நாள்: 18.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
8	மண்டலம்-8 (பழைய மண்டலம்- 5, பகுதி - 15, கோட்டம் -75)	உதவி பொறியாளர்	06.09.2001 பி.ப	07.10.2002 பி.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-8 அவர்களின் கடிதம் ம.அ.8.ந.க.எண்.அ1/7562/22, நாள்: 15.12.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அவர்களின் குறிப்பு ம.அ.8.ப.க.கு.ந.க.எண்.அ1/ 2689/22, நாள்: 13.12.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
9	மண்டலம் - 10 & 13 (பழைய மண்டலம்- 9, பகுதி - 25, கோட்டம் -133)	உதவி பொறியாளர்	08.10.2002 மு.ப	18.07.2003 மு.ப	மண்டல அலுவலர்-13 அவர்களின் கடிதம் ம.அ.13.ந.க.எண்.அ3/7661/ 2022, நாள்:8.12.22 மண்டல அலுவலர்-10 அவர்களின் கடிதம் ம.அ.10.ந.க.எண்.அ9/13969/ 2022, நாள்:13.12.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	பகுதி கணக்கு அலுவலர்-13 அவர்களின் பரிந்துரையின் படி மண்டல அலுவலர்(பொ) மண்டலம்-13 இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
10	திடக்கழிவு மேலாண்மை துறை	உதவி செயற் பொறியாளர்	18.07.2003 பி.ப	14.02.2005 மு.ப	கண்காணிப்பு பொறியாளர், தி.க.மே.து.ந.க.எண். அ6 /3677-1, நாள்: 05.01.2023 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அவர்களின் குறிப்பு ப.க.கு.(இ).ந.க.எண்.அ1/ 3832/22, நாள்: 23.11.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

11	பேருந்து சாலைகள் துறை	உதவி செயற் பொறியாளர்	14.02.2005 பி.ப	22.02.2012 மு.ப	கண்காணிப்பு பொறியாளர், பே.சா.துறை.அவர்களின் கடிதம் பே.சா.து.ந.க.எண்.பி5/1395/ 2022, நாள்:20.06. 2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் (பணிகள்) குறிப்பு ப.க.கு(ப).ந.க.எண்.அ1/ சிறப்பு/06/2022, நாள்:06.06.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
		உதவி செயற் பொறியாளர்	14.02.2005 பி.ப	06.12.2006 மு.ப		
12	பே.சா.து (மாற்றுபணி) பாலங்கள் துறை	உதவி செயற் பொறியாளர் (D/D)	06.12.2006 பி.ப	14.03.2010 பி.ப	கண்காணிப்பு பொறியாளர், பாலங்கள் துறை அவர்களின் கடிதம் எண் , பி2/641/2022, நாள்:30.09.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் (பணிகள்) குறிப்பு ப.க.கு(ப).ந.க.எண்.அ3/51/ 2022-23, நாள்:29.09..2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
13	பே.சா.து (மாற்றுபணி) மண்டலம்–9 (பழைய மண்டலம்- 6, பகுதி – 17)	உதவி செயற் பொறியாளர் (D/D)	15.03.2010 மு.ப	18.01.2011 பி.ப	மண்டல அலுவலர்-9 அவர்களின் கடிதம், ம.அ.9.ந.க.எண் அ3/08425/2022, நாள்:15.11.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்- மண்டலம் -9 அவர்களின் கடித எண் ம.அ.9.ப.க.கு.ந.க.எண்.அ5/ 1579/2022, நாள்:10.11.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
14	பே.சா.து (மாற்றுபணி) கட்டடத்துறை	உதவி செயற் பொறியாளர் (D/D)	19.01.2011 மு.ப	14.06.2011 பி.ப	கண்காணிப்பு பொறியாளர் கடிதம் க.து.ந.க.எண். இ3/2803/2022, நாள்:04.11.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/ 2022, நாள்: 31.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
15	பே.சா.து (மாற்றுபணி) மண்டலம்–8 (பழைய மண்டலம்- 5, பகுதி – 15)	உதவி செயற் பொறியாளர் (D/D)	15.06.2011 மு.ப	19.12.2011 மு.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-8 அவர்களின் கடிதம், ம.அ.8.ந.க.எண் அ1/7562/22, நாள்:31.10.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் -8 அவர்களின் குறிப்பு நாள்:27.10.22 ன் பரிந்துரையின் படி மண்டல அலுவலர் –8 அவர்கள் இன்மை சான்றிதழ் வழங்கியுள்ளார்.
16	பே.சா.து (மாற்றுபணி) மண்டலம்–11, பகுதி–34	உதவி செயற் பொறியாளர் (D/D)	19.12.2011 பி.ப	22.02.2012 மு.ப	மண்டல அலுவலர்-11 அவர்களின் கடிதம், ம.அ.11.ந.க.எண் அ1/6336/22, நாள்:26.09.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர்-11 அவர்களின் குறிப்பு ம.அ.11.ப.க.கு(ப). ந.க.எண்.எம்.2/529/05/ 2022, நாள்:24.05..2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
	மண்டலம்- 11, பகுதி – 34	உதவி செயற் பொறியாளர்	22.02.2012 பி.ப	24.05.2012 பி.ப		
17	மண்டலம் – 3, பகுதி–8, (மாற்றுபணி) பூங்காதுறை	உதவி செயற் பொறியாளர் (D/D)	25.05.2012 மு.ப	11.01.2013 மு.ப	மண்டல அலுவலர்–3 பெ.செ.மா.ம.அ3.ந.க.எண். அ3/1748/2022,நாள்: 16.09.22 மற்றும் கண்காணிப்பு பொறியாளர் (பூங்கா) அவர்களின் கடிதம் பூ.து.ந.க.எண்.பி3/1510/2022, நாள்: 11.10.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்–3 அவர்களின் கடித எண் ப.க.கு.ந.க.எண்.அ4/861/ 2022, நாள்:12.09.22 மற்றும் கணக்கு அலுவலர் (பூங்கா) அவர்களின் குறிப்பு ப.க.கு.(பூ).ந.க.எண்.பி3/049 / 2022, நாள்: 11.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
18	மண்டலம்- 12	செயற் பொறியாளர்	11.01.2013 பி.ப	05.03.2014 மு.ப	மண்டல அலுவலர் –12 அவர்களின் குறிப்பு பெறப்பட வேண்டும் கடிதம், க.து.ந.க.எண். இ1/3864/21, நாள்: 20.12.22ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்–12 அவர்களின் குறிப்பு ப.க.க.கு/ம–12/ அ2/0430/2022, நாள்: 11.04.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

19	மண்டலம்- 2	செயற் பொறியாளர்	05.03.2014 பி.ப	24.07.2014 மு.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-2(மணலி) அவர்களின் கடிதம் ம.அ2.ந.க.எண்.அ3/4472/ 2022, நாள்: 10.10.2022 மற்றும் ம.அ.2.ந.க.எண்.அ1/4234/ 2022, நாள்: 20.10.22ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் மண்டலம்-2 அவர்களின் குறிப்பு ம.அ.2.ப.க.கு.2.ந.க.எண். அ6/1003/22, நாள்: 19.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
20	சிறப்பு திட்டங்கள் (தலைமை யிடம்) (பணித்துறை)	செயற் பொறியாளர்	24.07.2014 பி.ப	30.07.2014 மு.ப	கண்காணிப்பு பொறியாளர் (நகரமைப்பு) பணித்துறை அவர்களின் கடிதம் ப.து.ந.க.எண்.அ4/0579/22, நாள்:22.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் (பணிகள்) குறிப்பு ப.க.கு.(ப).ந.க.எண்.அ3/06/ 22 -23, நாள்:13.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
21	வடக்கு வட்டார அலுவலகம் / கட்டடம்	செயற் பொறியாளர்	30.07.2014 பி.ப	02.12.2014 பி.ப	துணை ஆட்சியர் (நிர்வாகம்)(வடக்கு) அவர்களின் கடிதம் வ.வ.அ.ந.க.எண்.அ1/2214/ 2022, நாள்: 30.06.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் (வ.வ.அ.ப.க.கு) அவர்களின் குறிப்பு ப.க.கு.வ.வ.அ.அ1/316/2022 , நாள்: 19.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
22	கட்டட துறை	செயற் பொறியாளர்	03.12.2014 மு.ப	20.03.2015 மு.ப	கண்காணிப்பு பொறியாளர் கடிதம் க.து.ந.க.எண்.இ3/2396/22, நாள்16.08.22 மற்றும் இ3/2803/2022, நாள்:04.11.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/ 2022, நாள்: 08.08.22 மற்றும் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/ 2022, நாள்: 31.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
23	கட்டடத்துறை (மாற்று பணியிடம் மண்டலம்- 5)	செயற் பொறியாளர் (D/D)	20.03.2015 பி.ப	04.05.2015 மு.ப	மண்டல அலுவலர்-5 அவர்களின் கடிதம் ம.அ.5.ந.க.எண்.இ4/3134/ 2022, நாள்: 11.05.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் மண்டலம்-5 அவர்களின் குறிப்பு ம.அ.5.ப.க.கு.ந.க.எண்.அ7/ 1173/22, நாள்: 12.04.22ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
24	மண்டலம்- 1, மாற்று பணியிடம் மண்டலம்-7	மண்டல அலுவலர் (IC)	04.05.2015 பி.ப	14.09.2015 பி.ப	மண்டல அலுவலர்-7 அவர்கள் கடிதம் ம.அ.7.ந.க.எண்.1846/21/2022 , நாள்: 20.04.22 ன் படி குறிப்பிடப்பட்டுள்ள தணிக்கை தடை எண் 29 மற்றும் 62 (ஆ) நீக்கம் செய்யப்பட்டு அதற்கான நகல்கள் இணைக்கப்பட்டுள்ளது- மேலும் ம.அ7/ந.க.எண்/ 8781/அ1/2022, நாள்:14.12.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அலுவலர் மண்டலம்-7 அவர்களின் குறிப்பு ப.க.கு.ம7/அ1/1406/2022, இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
25	மண்டலம்-9	மண்டல அலுவலர்	14.09.2015 பி.ப	01.03.2016 மு.ப	மண்டல அலுவலர்-9 அவர்களின் கடிதம் ம.அ.9.ந.க.எண்.அ3/02138/ 2022, நாள்: 11.06.2022 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர்-9 அவர்களின் குறிப்பு ம.அ.9.ப.க.கு.ந.க.எண்.அ5/ 402/22, நாள்: 12.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

26	மண்டலம்-10	மண்டல அலுவலர்	01.03.2016 மு.ப	25.01.2017 மு.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-10 அவர்களின் கடிதம் ம.அ.10.ந.க.எண்.அ9/13969/ 2022, நாள்:19.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உதவி கணக்கு அவர்களின் குறிப்பு ம.அ.10.ப.க.கு.ந.க.எண்.அ1/ 1471/22, நாள்: 18.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
27	மண்டலம்-1	மண்டல அலுவலர்	25.01.2017 பி.ப	20.02.2017 மு.ப	மண்டல அலுவலர்-1 அவர்களின் கடிதம் ம.அ.1.ந.க.எண்.அ1/05995/22 , நாள்: 11.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் மண்டலம்-1 அவர்களின் குறிப்பு ம.அ.1/ப.க.கு1/ அ1/5995/22, நாள்: 10.10.22 ன் படி இன்மைசான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
28	மண்டலம்-15	மண்டல அலுவலர்	20.02.2017 பி.ப	19.03.2018 மு.ப	மண்டல அலுவலர்-15 அவர்களின் கடிதம் ம.அ.15.ந.க.எண்.அ1/00935/ 2022, நாள்: 03.03.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் மண்டலம்-15 அவர்களின் குறிப்பு ப.க.கு1/ம-15/ அ3/725/2020, நாள்: 07.08.2020 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
29	மண்டலம்-2	மண்டல அலுவலர்	19.03.2018 பி.ப	28.05.2018 மு.ப	மாவட்ட வருவாய் அலுவலர் / மண்டல அலுவலர்-2 (மணலி) அவர்களின் கடிதம் ம.அ.2.ந.க.எண்.அ1/4234/ 2022, நாள்: 20.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் மண்டலம்-2 அவர்களின் குறிப்பு ம.அ.2.ப.க.கு.2.ந.க.எண்.அ 6/1003/22, நாள்: 19.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
30	மண்டலம்-5	மண்டல அலுவலர்	28.05.2018 பி.ப	06.03.2019 பி.ப	மண்டல அலுவலர்-5 அவர்களின் கடிதம் ம.அ.5.ந.க.எண்.இ4/3134/22, நாள்:19.05.22ல் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும், 2018-19 ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்6(அ) நிலுவையில் உள்ளது என வும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிறகு 2018-19 ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.6(அ) நீக்கம் செய்யப்பட்டு விட்டது என இணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடிதம் தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்:17.10.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	கணக்கு அலுவலர் மண்டலம்-5 அவர்களின் குறிப்பு ம.அ.5.ப.க.கு.ந.க.எண்.அ7/ 1173/22, நாள்: 12.04.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
31	கட்டடத்துறை மற்றும் தி.க.மே.துறை	கண்காணிப்பு பொறியாளர்	06.03.2019	16.04.2019	கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) கடிதம் க.து.ந.க.எண்.இ3/2396/22, நாள்16.08.22 மற்றும் கண்காணிப்பு பொறியாளர் (தி.க.மே) கடிதம் தி.க.மே.து.ந.க.எண்.அ6 /3677-2 , நாள்: 05.01.2023 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.	உதவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/ 2022, நாள்: 08.08.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

32	கட்டடத்துறை (மாற்று பணி தி.க.மே.துறை)	கண்காணிப்பு பொறியாளர்	16.04.2019	19.07.2021	கண்காணிப்பு பொறியாளர், தி.க.மே.து.ந.க.எண்.அ6 /3677-3 , நாள்: 05.01.2023 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உ தவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(இ).ந.க.எண்.அ1/ 3832/2022, நாள்: 23.11.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
33	திடக்கழிவு மேலாண்மை துறை	கண்காணிப்பு பொறியாளர்	19.07.2021 பி.ப	10.11.2021 மு.ப		
34	கட்டடத்துறை	கண்காணிப்பு பொறியாளர்	10.11.2021 பி.ப	16.06.2022 பி.ப	கண்காணிப்பு பொறியாளர் கடிதம் க.து.ந.க.எண்.இ3/2396/22, நாள்16.08.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உ தவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(க).ந.க.எண்.பி2/1127/ 2022, நாள்: 08.08.22 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
35	திடக்கழிவு மேலாண்மை துறை	கண்காணிப்பு பொறியாளர்	17.06.2022 மு.ப	04.01.2023 இதுநாள் வரை	கண்காணிப்பு பொறியாளர், தி.க.மே.து.ந.க.எண்.அ6 /3677-4 , நாள்: 05.01.2023 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது	உ தவி கணக்கு அலுவலர் கடிதம் ப.க.கு(இ).ந.க.எண்.அ1/ சிறப்பு/2023, நாள்: 10.01.2023 ன் படி இன்மை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது

மேலும் நிதி ஆலோசகர் அவர்களின் 29.08.22 நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள தணிக்கைத் தடைகள் மற்றும் முன்பண நிலுவைகள் விவரங்கள் பின்வருமாறு:-

வ. எ ண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்கு ட் படுத்தப்பட்ட தொகை ரூ	தடைக்கு பொறுப்பா ண அலுவலர் களின் எண்ணிக் கை	திரு. ஜீ. வீரப்பன், கண்காணிப் பு பொறியாள ரை பொறுப்பாக் கும் தொகை. ரூ.	தணிக்கை தடைகள் நீக்கம் செய்ததற்கான கடிதத்தின் எண் மற்றும் தேதி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1	மண்டலம்-7	2015-16	62 (ஆ) வ.எண்.5 த.அ.	40,000/-	1	40,000/-	இணை இயக்குனர், தணிக்கை துறை கடிதம் தொ.க.எண்.6/FF1/20 22, நாள்: 09.12.22 ன் படி தணிக்கைத் தடை நீக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.
2	மண்டலம்-10	2015-16	11 (த.அ)	-	-	-	இணை இயக்குனர், தணிக்கை துறை கடிதம் தொ.க.எண்.6/A1-22, நாள்: 25.08.22 ன் படி தணிக்கைத் தடை நீக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

3	மண்டலம்-10	2016-17	27 (த.அ)	5,73,82200/-	16	35,86,388/-	இணை இயக்குனர், தணிக்கை துறை தொ.க.எண்.6/A1/2, நாள்:12.09.22 ன் படி தணிக்கைத் தடைபொறுப்பு நீக்கம் செய்யப்பட்ட தணிக்கை சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
4	மண்டலம்-5	2018-19	6(அ) (த.அ)	-	-	-	இணை இயக்குனர், தணிக்கை துறை கடிதம் தொ.க.எண்6/ஈ1/2022, நாள்: 17.10.22 ன் படி தணிக்கைத் தடை நீக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
5	கட்டடத் துறை	2020-21	34(1) (த.அ)	12,600/-	1	12,600/-	இணை இயக்குனர், தணிக்கை துறை கடிதம் தொ.க.எண்.6 /ஈ1/2022, நாள்: 18.10.22 ன் படி தணிக்கைத் தடை நீக்கம் செய்யப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது
மொத்தம்			**5**	**5,74,34,800**		**36,38,988**	

மேலும், 2021-2022ஆம் ஆண்டு முதல் தனியர் ஒய்வு பெறும் நாள் வரைக்கான உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையில் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை. அவை வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை விவரம் தெரிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டிற்கான உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டப்பட்டுள்ள கட்டடத்துறை மற்றும் திடக்கழிவுமேலாண்மை துறை சார்ந்த தணிக்கை தடை பத்திகளுக்கு பொறுப்பு அலுவலர் (கூட்டு பொறுப்பு மற்றும் தனி பொறுப்பு) மற்றும் நிதி இழப்பு குறித்து தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியரின் பணி காலத்தில், தனியர் மீது ஏதேனும் தணிக்கைத் தடை பத்திகள் எழுப்பப்பட்டிருப்பது பின்னர் தெரியவரின், அத்தணிக்கைத்தடை பத்திகளுக்கு தனியரே முழு பொறுப்பாவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 05.09.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை "ஏதும் நிலுவையில் இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

உதவி ஆணையர் (பொ.நி.ம.ப) அவர்களின் 04.01.2023 நாளிட்ட குறிப்பில், திரு.ஜி. வீரப்பன், கண்காணிப்பு பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை துறை, அவர்கள் மீது 04.01.2023 வரை பொதுத்துறையில் எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை எனத் தெரிவித்துள்ளார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என்றும் கடன் தொகை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாக இயக்குனர்/தலைவர் அவர்கள் தனது 26.08.2022 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்கள்.

திரு. ஜி. வீரப்பன், கண்காணிப்பு பொறியாளர் பதவி வகுப்பு - I ன் கீழ் வருவதால், தனியர் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி பெறுவதற்கு அரசாணை 181.ந.நி.(ம) கு.நீ.வ.து. நாள். 06.10.2009ன்படி அரசிற்கு அதிகாரம் பங்களிக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்படி, நிதி ஆலோசகர் அவர்களின் குறிப்பின்படியும் மற்றும் இணை இயக்குநர் அவர்களின் 25.08.2022, 09.12.2022, 12.09.2022, 17.10.2022 மற்றும் 18.10.2022 நாளிட்ட கடிதங்களில் தணிக்கை தடை பத்திகளை நீக்கம் செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையிலும் திரு. ஜி. வீரப்பன், கண்காணிப்பு பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை துறை அவர்கள் மீதான 2021-2022 மற்றும் 2022-2023 ஆண்டிற்கான தணிக்கை தடைகள் வெளியிடப்படாத நிலையில் அவை வெளியிடப்பட்ட பின்னர் தனியரது தணிக்கைத்தடை பத்திகள் நிலுவையில் இருப்பின் அதற்கு தனியரை முழு பொறுப்பாக்கியும் மற்றும் அலுவலக முன்பணம் நேர் செய்யப்படாமல், இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகையினை தனியரின் பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் 28.02.2023 பிற்பகல் முதல் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அரசின் அனுமதி பெற அரசுக்கு செயற் குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ2/23435/2018

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:024/2023 **பொருள் எண்.24**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.வி.விஜயசாமுண்டிஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையாறு மருத்துவ மண்டலம் அவர்கள் - 30.06.2018 அன்று பிற்பகல் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் பின்னேற்புக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

டாக்டர்.வி.விஜயசாமுண்டிஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்கள் 18.01.1994 முதல் பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார். இவருடைய பிறந்த தேதி 01.07.1960 வயது முதிர்வு ஓய்வு நாள்: 30.06.2018.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை, மா.கு.ந.க.எண்.எப்4/2110/1993,நாள்:25.09.2006ன்படி, தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 31.08.1996 முதல் பணிவரன்முறையும் மற்றும் 31.08.1998 முதல் தகுதிகாண்பருவம் முடித்தவராகவும் அறிவித்து ஆணையிடப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களின் விவரங்கள் பின்வருமாறு:

வ. எண்	வகித்தபதவி	துறை/மண்டலம்	பணிபுரிந்தகாலம்
1.	மருத்துவ அலுவலர்	அடையாறு மருத்துவ மண்டலம் (கோட்டூர்புரம் நலவாழ்வு மையம்)	18.01.1994 முதல் 19.04.2006 வரை
2.	மருத்துவ அலுவலர்	அடையாறு மருத்துவ மண்டலம் (வேளச்சேரி நலவாழ்வு மையம்)	20.04.2006 முதல் 11.11.2013 வரை
3.	மண்டல நல அலுவலர் (பொ)	அடையாறு மருத்துவ மண்டலம்	12.11.2013 முதல் 17.06.2015 வரை
4.	மண்டல நல அலுவலர் (பொ)	சோழிங்கநல்லூர் மண்டலம்	18.06.2015 முதல் 24.01.2018 வரை
5.	மண்டல மருத்துவ அலுவலர்	அடையாறு மருத்துவ மண்டலம்	24.01.2018 முதல் 30.06.2018 வரை

டாக்டர்.வி.விஜயசாமுண்டிஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்கள் மீது இன்றைய தேதி வரையில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு துறையின் 05.06.2018 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், துறையில் கடந்த 5 ஆண்டுகளில் குற்றவியல்/ ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை எனவும், அன்னாரது சம்பள சான்றின்படி எவ்வித நீண்டகால முன்பணம் ஏதும் பிடித்தம் செய்ய வேண்டியது இல்லை எனவும், பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளிருப்பு குடியிருப்பு ஏதும் ஒதுக்கி தரப்படவில்லை எனவும் தெரிவித்து பெருநகர மருத்துவ அலுவலர்/ கூடுதல் இயக்குநர், மருத்துவ சேவைகள் துறை, அவர்களால் சான்றுகள் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு சங்கத்தில் தனியர் உறுப்பினராக இல்லை என்ற சான்றும் பெறப்பட்டுள்ளது.

தனியர் மீது 30.06.2018 வரையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஏதேனும் வகையில் நிதிஇழப்பீடு, முன்பணம் தீர்வு செய்யப்படாமை, தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது தெரியவரின், அத்தொகையை தனியருக்கு

வழங்கப்படவுள்ள பணிக்கொடையில் பிடித்தம் செய்துகொள்ள ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், நிதிஆலோசகர் அவர்களின் 03.05.2018 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ அலுவலராக மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்த காலங்களில் 1993-94 முதல் 2015-16 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி ,மொத்தம் ரூ.1,21,38,662/- உள்ளடக்கிய 32 தணிக்கைத் தடை பத்திகள் கூட்டுபொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கூட்டு பொறுப்பில் தனியருக்கு மட்டும் தனிப்பொறுப்பாக மொத்தம் ரூ.14,37,475/- (ரூபாய் பதிநான்கு இலட்சத்து முப்பத்தேழாயிரத்து நானூற்று எழுபத்தி ஐந்து மட்டும்) உள்ளடக்கிய 32 தணிக்கைத் தடை பத்திகள் நிலுவையில் உள்ளது. மேலும், 2016-17 முதல் 2018-19 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு கடிதம் (எம்.எஸ்.)எண்.35/என்/2012-1, பணியாளர்கள் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை , நாள்.03.04.2013ன்படி, அரசு பணியாளர் ஓய்வுபெறும் காலங்களில், அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டிருப்பின், ஒழுங்கு நடவடிக்கைக்கு எவ்வித குந்தகமின்றி *(allow him to retire from service without prejudice)* பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 08.12.2017 நாளிட்ட சுற்றறிக்கையில், பணிஓய்வுபெறும் அலுவலர்களுக்கு தணிக்கைத் தடைகள் சார்பு செய்த பின்பும், அவர்கள் ஓய்வுபெறும் நாள்வரை தணிக்கைத் தடைகள் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், அவர்கள் மீது அரசாணை எண்.104, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.07.2005ன்படி, ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இவைகளை கண்காணிக்கும் பொறுப்பு சம்பந்தப்பட்ட துறை மற்றும் மண்டல அலுவலர்களையே சார்ந்ததாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் வகுப்பு-2ஐ சார்ந்த அலுவலர் என்பதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்தின் வசம் உள்ளது.

சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 30.06.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில், டாக்டர்.வி.விஜயசாமுண்டிஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையாறு மருத்துவ மண்டலம் அவர்களுக்கு பொதுத்துறையின் 29.06.2018 நாளிட்ட காரணம் கேட்கும் குறிப்பாணை, சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணைவிதி 10(a)-ன்கீழ் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டு, நிலுவையில் உள்ள காரணத்தினால், ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி முடிவுக்கு எவ்வித குந்தகமின்றியும், சென்னை மாநகராட்சி (மேம்பட்ட) ஓய்வூதிய விதிகள் 1970, எண்.7-ன்படியும் *(permitted to retire from service without prejudice to disciplinary proceeding)*, ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து இருக்கும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், 2016-2017 முதல் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும்பட்சத்தில், தனியரை முழு பொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும்,

தனியரை 30.06.2018 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணை வழங்கப்பட்டது.

முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 20.12.2022 நாளிட்ட செயல்முறை ஆணையில், டாக்டர்.வி.விஜயசாமுண்டீஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையாறு மருத்துவ மண்டலம் அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு தனியர் அளித்துள்ள விளக்கம் மற்றும் தணிக்கைத் தடை பத்திகள் நீக்கம் செய்யப்பட்டதற்கான அறிக்கை ஆகியவை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில், தனியர் மீதான தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளதை ஏற்றுக்கொள்ளப்பட்டு, டாக்டர்.வி.விஜயசாமுண்டீஸ்வரி, மண்டல மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்கள்மீது சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணைவிதி 10(a)-ன்கீழ் ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு ஆணை வழங்கப்பட்டது.

நிதிஆலோசகர் அவர்களின் 26.12.2022 நாளிட்ட குறிப்பில், தனியர் மருத்துவ அலுலவர்/ உதவி சுகாதார அலுவலர்(பொ) மற்றும் மண்டல மருத்துவ அலுவலராக துறைகள்/ மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1993-1994 முதல் 2018-2019 ஆம் ஆண்டுவரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையின்படி, கீழ்கண்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.4,25,145/- உள்ளடக்கிய 2 தணிக்கைத் தடைப் பத்தி கூட்டு பொறுப்பு மற்றும் தனிப் பொறுப்பில் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கூட்டுப் பொறுப்பில் மொத்தம் ரூ.4,25,145/- உள்ளடக்கிய 2 தணிக்கைத் தடைப் பத்தி தனிப் பொறுப்பில் நிலுவையில் உள்ளது.

வ. எண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக் குட்படுத்தப் பட்ட தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	டாக்டர்.வி. விஜயசாமுண்டீஸ்வரி மண்டல மருத்துவ அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	மண்டலம் - 13	2016-2017	42 2013-14 வ.எண்.5	50,000	1	50,000
			42 2014-15 வ.எண். 25, 28, 29, 30, 31, 32	3,75,145	1	3,75,145
2	மண்டலம் - 15	2017-2018	24	-	-	-
மொத்தம்			2	4,25,145/-	-	4,25,145/-

பெருநகர மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 28.12.2022 நாளிட்ட கடிதத்தில், டாக்டர்.வி.விஜயசாமுண்டீஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் தீர்வு செய்ய வேண்டியுள்ளதால், அன்னாரை வயது முதிர்வு ஓய்வுபெற அனுமதித்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி ஆணை பெற்றுதரக் கோரி கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேற்காண் விவரங்களின்படி, டாக்டர்.வி.விஜயசாமுண்டீஸ்வரி, துணை பெருநகர மருத்துவ அலுவலர், அடையார் மருத்துவ மண்டலம் அவர்கள்மீது தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள 2 தணிக்கைத் தடைப் பத்தி தொகையான ரூ.4,25,145/-னை ஓய்வூதியப் பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், முன்பண நிலுவை மற்றும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு அத்தொகையினையும் மற்றும் தனியரால்

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதிஇழப்பு ஏதும் ஏற்பட்டுள்ளது என பின்னர் கண்டறியபடின் அதனையும் தனியரின் ஓய்வூதிய பணப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளதாலும், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண். ஈ2/19130/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:025/2023 **பொருள் எண்.25**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.L.பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்-1, வருவாய் துறை அவர்களை - மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

பொதுத்துறையின் 22.12.2022 நாளிட்ட சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளவாறு திரு.L.பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

ஆணையர் அவர்களின் 24.11.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு-II-ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி, மன்றத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, தனியரின் பிறந்த தேதி 29.06.1962, தனியர் முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் 28.04.1986, வயது முதிர்வு ஓய்வு நாள். 30.06.2022 ஆகும். தனியரின் பணி விவரங்கள் அட்டவணை - I ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை - I

வ. எண்	பெயர்/பதவி	பணியில் சேர்ந்த நாள்	பணிவரன்முறைப் படுத்தப்பட்ட நாள்	தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்த நாள்
1	சிற்றெழுத்தர் (Clerical Attender)	28.04.1986 Pg.No.4 (SR. Vol-I)	28.04.1986 Pg.No.12 (SR.Vol-II)	03.04.1988 Pg.No.12 (Vol-II)
2	தட்டச்சர்	04.04.1988 Pg.No.6 (SR.Vol-I)	04.04.1988 Pg.No.14 (SR.Vol-I)	16.04.1996 Pg.No.9 (SR.Vol-I)
3	உதவியாளர்	27.06.1997 Pg.No.25 (SR.Vol-I)	27.06.1997 Pg.No.11 (SR.Vol-II)	-
4	உரிமம் ஆய்வாளர்	14.09.2007 Pg.No.19 (SR.Vol-II)	14.09.2007 Pg.No.18 (SR.Vol-II)	-
5	வரி மதிப்பீட்டாளர்	30.09.2008 Pg.No.19 (SR.Vol-II)	30.09.2008 Pg.No.11 (SR.Vol-III)	-
6	உதவி வருவாய் அலுவலர்	21.03.2013 Pg.No.17 (SR.Vol-III)	22.03.2013 Pg.No.27 (SR.Vol-III)	-

மேற்படி, தனியர் பணிபுரிந்த துறை/ மண்டலங்களிலிருந்து தணிக்கைத்தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை விவரங்கள் அட்டவணை-II ல் பின்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

அட்டவணை - II

வ. எண்	வகித்த பதவி	பணிபுரிந்த காலம்	துறை/ மண்டலம்	தணிக்கைத்தடை, முன்பண நிலுவை (ம) ஒழுங்கு நடவடிக்கையின் விவரம்
1	Clerical Attender	28.04.1986 முதல் 04.04.1988 வரை	மின்துறை (தலைமையிடம்)	இன்மை அறிக்கை பெறப்பட்டது.

2	தட்டச்சர்	04.04.1998 முதல் 30.07.1993 வரை	கண்காணிப்பு பொறியாளர் (இயந்திரம்)	இன்மை அறிக்கை பெறப்பட்டது
3	தட்டச்சர்	30.07.1993 முதல் 12.11.1993 வரை	சுகாதாரத்துறை (தலைமையிடம்)	இன்மை அறிக்கை பெறப்பட்டது
4	தட்டச்சர்	13.11.1993 முதல் 02.01.1997 வரை	பொதுத்துறை	இன்மை அறிக்கை பெறப்பட்டது
5	தட்டச்சர்	03.01.1997 முதல் 27.06.1997 வரை	புதிய மண்டலம்- 6 பழைய மண்டலம் - 4	இன்மை அறிக்கை பெறப்பட்டது
6	உதவியாளர்	28.06.1997 முதல் 15.04.1999 வரை	புதிய மண்டலம் – 6 பழைய மண்டலம் - 3	இன்மை அறிக்கை பெறப்பட்டது
7	உதவியாளர்	16.04.1999 முதல் 13.09.2007 வரை	கால்நடைப்பிரிவு (தலைமையிடம்)	இன்மை அறிக்கை பெறப்பட்டது
8	உரிமம் ஆய்வாளர்	14.09.2007 முதல் 29.09.2008 வரை	புதியமண்டலம் – 6 பழையமண்டலம் - 3	இன்மை அறிக்கை பெறப்பட்டது
9	வரிமதிப் பீட்டாளர்	30.09.2008 முதல் 07.12.2011 வரை	புதியமண்டலம் – 4 பழையமண்டலம் - 1	இன்மை அறிக்கை பெறப்பட்டது
10	வரிமதிப் பீட்டாளர்	07.12.2011 முதல் 12.11.2012 வரை	புதியமண்டலம் – 1	இன்மை அறிக்கை பெறப்பட்டது
11	உதவி வருவாய் அலுவலர் (பொ)	12.11.2012 முதல் 21.03.2013 வரை	புதியமண்டலம் – 4 பழையமண்டலம் - 1	"இன்மை அறிக்கை" பெறப்பட்டது, 2012-2013 ஆம் ஆண்டுக்கான தணிக்கைத் தடை பத்திஎண்.25 நிலுவையில் உள்ளது.
12	உதவி வருவாய் அலுவலர்	22.03.2013 முதல் 18.03.2016 வரை	புதியமண்டலம் - 1	"இன்மை அறிக்கை" பெறப்பட்டது, நாடாளுமன்ற தேர்தல் 2014-ல்ரூ.2,00,000/- முன்பணம் பெறப்பட்டு நேர்செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது.
13	உதவி வருவாய் அலுவலர்	18.03.2016 முதல் 12.07.2018 வரை	மண்டலம் – 7	1. "இன்மை அறிக்கை" பெறப்பட்டது, 2015-2016 – பத்திஎண். 9 (தணிக்கை அறிக்கை) 2. 2016 – 2017 – பத்திஎண். 10,16,20,21 (I to VIII & XIV), 24 (தணிக்கை அறிக்கை) 3. 2016-2017- பத்திஎண்.6,7 (தணிக்கை குறிப்பு) 4. 2017-2018- பத்திஎண்.10 (தணிக்கை அறிக்கை) ஆகிய பத்திகள் நிலுவை உள்ளது.

14	உதவி வருவாய் அலுவலர்	13.07.2018 முதல் 06.12.2019 வரை	மண்டலம் - 4	இன்மைஅறிக்கை" பெறப்பட்டது. 2018-2019 ஆம் ஆண்டுக்கான தணிக்கைத்தடை பத்தி எண்.24 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுக்கான தணிக்கைத் தடைபத்திஎண்.15 நிலுவையில் உள்ளது.
15	உதவி வருவாய் அலுவலர்	06.12.2019 முதல் 18.05.2021 வரை	மண்டலம் - 2	இன்மைஅறிக்கை" பெறப்பட்டது. 2019-2020 ஆம்ஆண்டுக்கான தணிக்கைத் தடைபத்தி எண்.7 முதல் 22 வரையிலான பத்திகள் நிலுவையில் உள்ளது.
16	உதவி வருவாய் அலுவலர்	18.05.2021 முதல் இந்நாள் வரை	மண்டலம் - 1	இன்மை அறிக்கை" பெறப்பட்டது. தனியர் மீது 10(b)ன் கீழ் குற்றச்சாட்டு நிலுவையில் உள்ளது.

நிதிஆலோசகர் அவர்களின் 29.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் பணியில் இருந்த காலங்களில் 2007-2008 முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரையிலான தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, கீழ்கண்டுள்ள அட்டவணையின்படி தனியர் பணிபுரிந்த காலங்களுக்கான தணிக்கைத்தடை மொத்த பத்திகள் 19க்கான மொத்த தொகை ரூ.53,21,033/- எனவும், தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ள 19 பத்திகளுக்கான தொகைரூ.11,64,218/- எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் அட்டவணை- III-ல்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - III

வ. எண்.	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட் படுத்தப்பட்டத் தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.L. பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	ப.ம. - 1 பு.ம. - 4	2012-2013	25	118260	9	13140
2	மண்டலம் - 1	2015-2016	15	-	-	-
3	மண்டலம் - 2	2020-2021	6	-	-	-
4	மண்டலம் - 2	2020-2021	8	48510	4	12128
5	மண்டலம் - 2	2020-2021	9	-	-	-
6	மண்டலம் - 2	2020-2021	10	1920640	4	480160
7	மண்டலம் - 2	2020-2021	11			
8	மண்டலம் - 2	2020-2021	12			
9	மண்டலம் - 2	2020-2021	13			
10	மண்டலம் - 2	2020-2021	14			
11	மண்டலம் - 2	2020-2021	15	2992320	5	598464

12	மண்டலம் - 2	2020-2021	16			
13	மண்டலம் - 2	2020-2021	17			
14	மண்டலம் - 2	2020-2021	18			
15	மண்டலம் - 2	2020-2021	19			
16	மண்டலம் - 2	2020-2021	20			
17	மண்டலம் - 2	2020-2021	54	541303	4	60325.75
18	மண்டலம் - 2	2020-2021	55			
19	மண்டலம் - 2	2020-2021	60			
மொத்தம்			19	5321033	-	1164218

2021-2022 மற்றும் 2022-2023 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை. மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 06.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியருக்கு வழங்கப்படும் ஓய்வுக்கால பணப்பயன்கள் மிகையாக வழங்கப்பட்டது என பின்னர் தெரியவரின், அத்தொகையினை, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் உடன் நிகழ்வு தணிக்கைச் சான்று பெற்றப்பின் பிடித்தம் செய்ய வேண்டிய தொகை ஏதேனும் இருப்பின், அத்தொகையினை என்னுடைய ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து 06.06.2022 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில் ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 07.06.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தின் உறுப்பினர் இல்லை என சான்று அளிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 25.04.2022 நாளிட்ட உத்தரவின்படி, 16.04.2022 அன்று மாலை 3 மணியளவில் மண்டலம் 1 முதல் 5 வரையிலான மண்டல அலுவலர்களுக்கும், உதவி வருவாய் அலுவலர்களுக்கும் காணொளி காட்சி மூலம் நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொள்ளாத காரணத்திற்காக, சென்னை மாநகராட்சி பணியாளர்கள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) 1970 ஆம் ஆண்டின் துணை விதி 10(b)ன்கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விதி 10(b)-ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கையில் விசாரணை அலுவலரது அறிக்கையை ஏற்று தனியர் மீதான குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு ஆணையர் (பொ) அவர்களால் ஆணையிடப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு வட்டார அலுவலகம்) அவர்களின் 16.06.2022 நாளிட்ட குறிப்பில், மேற்கண்ட அலுவலரை 30.06.2022 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் அனுமதி பெற்று தரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் (பொ.) அவர்களின் 30.06.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு. L. பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலர் அவர்கள்மீது நிலுவையில் உள்ள தணிக்கைத் தடை பத்திகள் தொகையான ரூ.11,64,218/- (ரூபாய் பதினொரு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து இருநூற்றி பதினெட்டு மட்டும்) தணிக்கைதடை பத்தி நீக்கம் செய்யப்பட வேண்டும் அல்லது இத்தொகை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை/ அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், 2020-2021, 2021-2022 மற்றும் 2022-2023 ஆம்ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறையால் வெளியிடப்படவில்லை என்பதனால், தணிக்கை அறிக்கைகள்

வெளியிடப்பட்ட பின்னர் தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு, அத்தொகையினையும், மேலும் 2014-2015 ஆம் ஆண்டுகான முன்பண நிலுவைத் தொகை ரூ.2,00,000/- நேர்செய்யப்படவேண்டும், தவறும்பட்சத்தில் மற்றும் தனியரால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதிஇழப்பு ஏதும் ஏற்பட்டுள்ளது என பின்னர் கண்டறியபடின் அவை தனியரின் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.06.2022 அன்று பிற்பகல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டும் ஆணை வழங்கப்பட்டது.

நிதிஆலோசகர் அவர்களின் 12.01.2023 நாளிட்ட அறிக்கையில், தனியர் உரிமம் ஆய்வாளர், வரிமதிப்பீட்டாளர் மற்றும் உதவி வருவாய் அலுவலராக துறை/ மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2007-2008 ஆம் ஆண்டு முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள் இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கைத்துறை அறிக்கைகளின்படி கீழ்கண்டுள்ள அட்டவணையின்படி குறைபாடு உள்ள 02 தணிக்கைத் தடை பத்திகள் நிலுவையில் உள்ளதாக குறிப்பிட்டுள்ளது.

அட்டவணை - IV

வ. எண்.	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக் குட் படுத்தப் பட்டத் தொகை ரூ.	தடைக்கு பொறுப்பான பணியாளர்களி ன்எண்ணிக் கைமொத்தம்	திரு.L. பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ.
1	மண்டலம் – 1	2015-2016	15	-	-	-
2	மண்டலம் – 2	2020-2021	13	-	-	-
மொத்தம்			2	-	-	-

2021-2022 மற்றும் 2022-2023ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத் தடை பத்திகள் தனியரை சார்ந்தது என பின்னர் தெரியவரும்பட்சத்தில் அவர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு வட்டார அலுவலம்) அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பில், மேற்கண்ட அலுவலரை 30.06.2022 அன்று மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு பெற்றுதரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

இந்நேர்வில், திரு.L.பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலர் அவர்கள் மீது நிலுவையில் உள்ள தணிக்கைத்தடை பத்திகள் நீக்ககம் செய்யப்பட்டதற்கான விவர அறிக்கை உள்ளாட்சி நிதிதணிக்கைத் துறையால் கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - V

வ. எண்.	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	திரு.L. பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலரை பொறுப்பாக்கும் தொகை ரூ.	தணிக்கைத்தடைப் பத்திகள் நீக்கம் செய்யப்பட்டதற்கான விவரம்
1	ப.ம. – 1 பு.ம. – 4	2012-2013	25	13140	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ2/2022, நாள்.22.06.2022)
2	மண்டலம் – 1	2015-2016	15	-	நிலுவையில் உள்ளது

3	மண்டலம் - 2	2020-2021	6	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
4	மண்டலம் - 2	2020-2021	8	12128	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.18.07.2022)
5	மண்டலம் - 2	2020-2021	9	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
6	மண்டலம் - 2	2020-2021	10	480160	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.18.07.2022)
7	மண்டலம் - 2	2020-2021	11	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.18.07.2022)
8	மண்டலம் - 2	2020-2021	12	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
9	மண்டலம் - 2	2020-2021	13	-	நிலுவையில் உள்ளது
10	மண்டலம் - 2	2020-2021	14	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
11	மண்டலம் - 2	2020-2021	15	598464	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
12	மண்டலம் - 2	2020-2021	16	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
13	மண்டலம் - 2	2020-2021	17	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.18.07.2022)
14	மண்டலம் - 2	2020-2021	18	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
15	மண்டலம் - 2	2020-2021	19	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
16	மண்டலம் - 2	2020-2021	20	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)

17	மண்டலம் – 2	2020-2021	54	60325.75	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
18	மண்டலம் – 2	2020-2021	55	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
19	மண்டலம் – 2	2020-2021	60	-	நீக்கம் செய்யப்பட்டுள்ளது. (தொ.க.எண்.6/ஈ1/2022, நாள்.17.08.2022)
மொத்தம்			19	ரூ.11,64,218/-	

ஆகவே, மேற்காண் விவரங்களின்படியும், நிதிஆலோசகர் அவர்களின் அறிக்கையின்படியும், திரு.L.பாஸ்கரன், உதவி வருவாய் அலுவலர், மண்டலம்-1 அவர்கள்மீது 2015-2016 ஆம் ஆண்டுக்கான பத்தி எண்.15 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுக்கான பத்தி எண்.13 ஆகிய நிலுவையில் உள்ள 02 தணிக்கைத் தடை பத்திகள் நீக்கம் செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், 2014-2015 ஆம் ஆண்டுகான முன்பண நிலுவைத் தொகை ரூ.2,00,000/- நேர்செய்யப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், நிலுவையில் இருந்த தணிக்கைத் தடை பத்தியின் தொகையான ரூ.11,64,218/-க்கான (ரூபாய் பதினொரு இலட்சத்து அறுபத்தி நான்காயிரத்து இருநூற்று பதினெட்டு மட்டும்) தணிக்கைதடை பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாலும் மேலும், முன்பண நிலுவை மற்றும் தணிக்கைத்தடை பத்திகள் ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டு, அத்தொகையினையும் மற்றும் தனியரால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பு ஏதும் ஏற்பட்டுள்ளது என பின்னர் கண்டறியபடின் அதனையும் தனியரின் ஓய்வூதிய பணப்பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு அனுமதிக்கப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

பொ.து.ந.க.எண்.ஈ2/38178/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:026/2023 **பொருள் எண்.26**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - டாக்டர்.த.சுதா, மருத்துவ அலுவலர் அவர்கள் பணிதுறப்பு கோரி கடிதம் அளித்தது - தனியரை 26.11.2022 அன்று பிற்பகல் முதல் பணி துறப்பில் செல்ல விடுவிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறை, தேனாம்பேட்டை மருத்துவ மண்டலத்தில் ஊதியம் பெற்று, மாற்றுபணி அடிப்படையில் கோடம்பாக்கம் மருத்துவ மண்டலத்தின் கீழ் இயங்கும் வடபழனி நகர சமுதாய சுகாதார மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வரும் டாக்டர்.த.சுதா (பணியாளர்எண்.198389) அவர்கள் குடும்ப சூழ்நிலை காரணமாக பணிதுறப்பு கோரி 29.08.2022 அன்று தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு மனு அளித்துள்ளார்.

டாக்டர்.த.சுதா அவர்கள் 18.12.2008 அன்று மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு மருத்துவ சேவைகள் துறையில் தொடர்ந்து பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 18.12.2008 அன்று பணிவரன்முறைபடுத்தியும், 18.12.2010 அன்று தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. தனியரது தாய் மொழி தமிழ் ஆகும்.

துணை பெருநகர மருத்துவ அலுவலர், தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம் அவர்களின் 10.09.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவை தொகை, தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம் அவர்களின் 17.09.2022 நாளிட்ட கடிதத்தின்படி, தனியர்மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 12.09.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, கூட்டுறவு அலுவலக சங்கத்தின் 17.09.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்று சான்று அளிக்கப்பட்டுள்ளது.

நிதிஆலோசகர், நிதிநிர்வாகப்பிரிவு (தணிக்கை) அவர்களின் 03.10.2022 நாளிட்ட கடித்தில், தனியர் மருத்துவ அலுவலராக மருத்துவ சேவைகள் துறையின்கீழ் மருத்துவ மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 2008-2009 முதல் 2020-2021 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, நிலுவை ஏதுமில்லை என்றும், மேலும் 2019-2020 மற்றும் 2020-2021 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அம்பத்தூர் மருத்துவ மண்டலம்-7ஐ சார்ந்த தணிக்கை தடை பத்திகளுக்கு பொறுப்பு அலுவலர் (கூட்டு பொறுப்பு மற்றும் தனி பொறுப்பு) நிதிஇழப்பு குறித்து தணிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நிர்வாக ரீதியாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்துக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து, அம்பத்தூர் மருத்துவ மண்டலத்திலிருந்து இன்மைச் சான்று பெறப்பட்டது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் தனியர் பணித்துறப்பு நாள் வரைக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத்தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், அவர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2021- 2022 ஆம் ஆண்டு முதல் தனியர் பணித்துறப்பு நாள் வரையிலான பணிகாலங்களுக்கு தணிக்கைத்தடை விவரம் குறித்து இணை இயக்குநர், உள்ளாட்சி

நிதித்தணிக்கைத் துறையிடமிருந்து உடன்நிகழ்வு சான்று பெறப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து உடன்நிகழ்வு சான்று உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறையிடமிருந்து பெறப்படவேண்டும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் (தணிக்கைபிரிவு) 20.09.2022 நாளிட்ட கடிதத்தில், பின்வருமாறு செலுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(1) மண்டலம்-9, 2017-2018 ஆம் ஆண்டு பத்தி எண்.19(a), வரிசை எண்.3ல் தொகைரூ.900/-

(2) மண்டலம்-9, 2017-2018 ஆம் ஆண்டு பத்தி எண்.20(a), வரிசை எண்.3ல்தொகை ரூ.225/-

தனியர்மீது உள்ள மேற்காண் தணிக்கை பத்திகள் உள்ளாட்சி நிதிதணிக்கைத் துறையால் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 27.09.2022 நாளிட்ட குறிப்பில், மருத்துவ சேவைகள் துறை, கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் – 10-ன்கீழ் இயங்கும் வடபழனி நகர சமுதாய நலவாழ்வு மையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த காலத்திற்கு, தனியர்மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி கணக்கு அலுவலர் (பகுதி கணக்கு குழுமம் / மருத்துவ சேவைகள் துறை) அவர்களின் 13.10.2022 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு எவ்வித முன்பணம் நிலுவை விவரம் ஏதுமில்லை எனத் தெரிவித்து, பின்னர் தெரியவரின் தனியரின் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி இன்மை அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த அம்பத்தூர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம் மருத்துவ மண்டலங்கள் (ம.சே.துறை) ஆகியவற்றிலிருந்து தனியர் பணிபுரிந்த காலத்திற்கு தனியர்மீது தணிக்கைதடை, முன்பணம் இழப்பீடு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை அவர்களின் 16.11.2022 நாளிட்ட கடிதத்தில், தனியர் 2021-2022 மற்றும் 01.04.2022 முதல் நாளது தேதி வரை தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைபத்திகள் ஏதும் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர மருத்துவ அலுவலர், மருத்துவ சேவைகள் துறை அவர்களின் 21.11.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட அலுவலர் பணித்துறப்பு கடிதம் அளித்துள்ளதை தொடர்ந்து, 26.11.2022 அன்று மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு பணியிலிருந்து விடுவிக்க அனுமதி பெற்று தரக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

தனியர் 26.11.2022 வரை பெருநகர சென்னை மாநகராட்சியில் தனிப்பட்ட முறையிலோ, கூட்டுப் பொறுப்பிலோ நிதி இழப்பீடு இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகையினை எனது ஓய்வூதிய பங்களிப்பு (C.P.S.) திட்ட தொகையில் பிடித்தம் செய்ய சம்மதித்து ரூ. 20/. முத்திரை தாளில் 22.11.2022 நாளிட்ட ஒப்புதல் அளித்துள்ளார்.

மேலும், **Tamil Nadu Government Servants (conditions of service) Act, 2016, Para-50 (1) – "A Government Servant may resign his appointment by giving notice of not less than three months in writing direct to the appointing authority with a copy marked to his immediate superior officer. The period of three months notice shall be reckoned from the date of receipt of such notice by the appointing authority"**எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் அடிப்படையில், தனியர் பணித்துறப்பு வேண்டி விண்ணப்பித்த நாளன்று 39 வயதினை பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 13 ஆண்டுகள் 11 மாதங்கள் 10 நாட்கள் ஆகும். தனியர் பிறந்த தேதி 26.11.1982. அரசு பணிவிதிகளின்படி தனியர் வயது முதிர்வில் ஓய்வுபெறும் தகுதியான நாள் 30.11.2042. தனியர் பணித்துறப்பு வேண்டி 90 நாட்கள் முன்னறிவிப்புடன் தலைவர், நியமனக்குழு அவர்களுக்கு கடிதம் அளித்துள்ளதால், மன்றத்தின் (நியமனக்குழு) பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 26.11.2022 அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவிக்கலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் 26.11.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர்.த.சுதா, மருத்துவ அலுவலர், வடபழனி நகர சமுதாய சுகாதார மையம், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் (ஊதியம் பெறுமிடம் தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கைதடை மற்றும் நீண்டகால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அதனை தனியருக்கு சேரவேண்டிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யலாம் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் *2021-2022* மற்றும் *2022-2023* ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிட்ட பின்னர், தணிக்கைத்தடைப் பத்திகள் ஏதேனும் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில், தனியர்மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மன்றத்தின் (நியமனக்குழு மூலமாக) பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், தனியரை *26.11.2022* அன்று பிற்பகல் பணியிலிருந்து விடுவித்து ஆணை வழங்கப்பட்டது.

ஆகவே, டாக்டர்.த.சுதா, மருத்துவ அலுவலர், வடபழனி நகர சமுதாய சுகாதார மையம், கோடம்பாக்கம் மருத்துவ மண்டலம் (ஊதியம் பெறுமிடம் தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்) அவர்களை *26.11.2022* அன்று பணியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/25046/2021

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:027/2023 **பொருள் எண்.27**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் டாக்டர்.G.விஜி, மருத்துவ அலுவலர், வில்லிவாக்கம் II நகர ஆரம்ப சுகாதார நிலையம், அண்ணாநகர் மருத்துவ மண்டலம் -8 அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்க அனுமதி.

பெருநகர மருத்துவ அலுவலர்(பொ.) அவர்களின் 06.09.2021 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ சேவைகள் துறை, அண்ணாநகர் மருத்துவ மண்டலம்-8, வில்லிவாக்கம் II நகர ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர்.G.விஜி அவர்களுக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கக் கோரி கோப்பு பெறப்பட்டுள்ளது.

அரசாணைஎண்:161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 28.08.1998-ல், மருத்துவ அலுவலர் பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் (தகுதிகாண்பருவ காலத்திற்குள்) மருத்துவ தொகுப்பு மற்றும் செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சிபெறவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மேற்படி மருத்துவ அலுவலரின் பணிக்கால விவரங்கள் பின்வருமாறு:

S. No.	Name of the Officer	Joining Date	Language	E.O.& Medical Code Test	Medical Officer	
					Regularization to be Declared	Probation to be Declared
1	Dr. G. Vijee	15-09-2014 மு.ப.	தமிழ்	07.08.2015 & 16.08.2015	15-09-2014 மு.ப.	24-01-2018 மு.ப.

தனியரின் தாய்மொழி தமிழ் என பணிப்பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தனியர்மீது ஒழுங்கு நடவடிக்கை/ விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு ஆணை (நிலை) எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள்.06.10.2009-ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ அலுவலர் பதவிகளுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகாரம் மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, டாக்டர்.G. விஜி, மருத்துவ அலுவலர், வில்லிவாக்கம் II நகர ஆரம்ப சுகாதார நிலையம், அண்ணாநகர் மருத்துவ மண்டலம்-8, மருத்துவ சேவைகள் துறை அவர்களுக்கு கீழ்கண்டவாறு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின்அனுமதி வேண்டிசமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பெயர்/பதவி	பணியில் சேர்ந்த நாள்.	விடுப்பு துய்த்த விவரம்	பணி வரன் முறைப் படுத்த வேண்டிய நாள்.	தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட வேண்டிய நாள்.
1.	டாக்டர். G. விஜி, மருத்துவ அலுவலர்	15.09.2014 மு.ப.	EL from 28.04.2016 to 17.05.2016 – 20 Days LLP from 18.05.2016 to 10.12.2016 – 207 Days Maternity Leave from 11.12.2016 to 06.09.2017 – 270 Days Total – 497 Days	15.09.2014 மு.ப.	24.01.2018 மு.ப.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ2/39909/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:028/2023 **பொருள் எண்.28**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - டாக்டர்.M.ஸ்வர்ணா, மருத்துவஅலுவலர், தொற்றுநோய்மருத்துவமனை, பொதுசுகாதாரத்துறை அவர்கள் - பணிவிதிகளின்படி வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் செயல்அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாமல் காலதாமதமாக தேர்ச்சி பெற்றது - பொது பணிவிதி-20-ன்கீழ் தகுதிகாண்பருவம் நீட்டிக்க - அரசிற்கு பிரேரணை அனுப்புவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 17.03.2010 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, டாக்டர்.M.ஸ்வர்ணா, மருத்துவ அலுவலர் அவர்கள் தகுதிகாண் பருவகாலத்திற்குள் வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்படும் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 30.03.2010 அன்று பணியில் சேர்ந்து, தற்போது தொற்றுநோய் மருத்துவமனையில் பணிபுரிந்து வருகிறார்.

இயக்குநர், தொற்றுநோய் மருத்துவமனை அவர்களின் 20.09.2018 நாளிட்ட கடிதத்தில், டாக்டர்.M.ஸ்வர்ணா, மருத்துவ அலுவலர் அவர்கள் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் தேர்ச்சிபெறாமல், தனியருக்கு பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளதாகவும், இதுதொடர்பாக, தனியருக்கு 28.08.2018 நாளிட்ட குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டதில், தனியர் தங்களுக்கு துறைத்தேர்வு குறித்து எவ்வித அறிவுறுத்தலும் வழங்கப்படவில்லை எனவும், 8 ஆண்டுகள் கழித்து கேட்கப்படுவதால், நடப்பாண்டில் வரும் தேர்வில் எழுதி தேர்ச்சி பெற கால அவகாசம் மற்றும் அனுமதி அளிக்குமாறு தெரிவித்துள்ளதாகவும், இது தொடர்பாக உரிய கருத்துரு வழங்குமாறு தெரிவித்து கோப்பு பெறப்பட்டது.

பொதுத்துறையின் 09.06.2021 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட மருத்துவ அலுவலருக்கு செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு காலவரையறைக்குள் முடிக்காமல், காலம் தாழ்த்தி தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றிருந்தால், தனியருக்கு தேர்வு எழுதிய நாள் மற்றும் விடுப்பு காலம் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்நாள்வரை வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுகளுக்கான (கருத்தியியலான காலம்) பணப்பயன்களை முழுமையாக கணக்கீடு செய்து உரிய கணக்கு அலுவலர் அவர்களின் கருத்துருவுடன், தனியரிடமிருந்து பெற்று (except 1st increment) பெருநகர சென்னை மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்தப்படவேண்டும். மேலும், தனியர் துறைத் தேர்வு தேர்ச்சி பெற்ற பின்பு வழங்கப்பட்டுள்ள ஊதிய உயர்வுகளும் மாற்றி நிர்ணயம் செய்யப்படவேண்டும். தனியர் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இதில் கடைசி தேர்வு எழுதிய நாள் முதல் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க பணிப்பதிவேட்டினை ஆய்வுசெய்து கோப்பு தயார் செய்து உடன் அனுப்புமாறு தெரிவித்து கடிதம் அனுப்பப்பட்டது.

In Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 of Section 30,

"A probationer shall be eligible for sanction of increments on normal dates irrespective of declaration of satisfactory completion of probation, subject to the provisions in section 33 so far as it relates to extension of probation on the grounds of unsuitability. In cases where the probation is to acquire any special qualification or to pass any prescribed test within the period of probation, or within the period of probation, or within the extended period of probation referred to in section 33, the first increment, in case where the period of probation is one year and the second increment, in case where the period of probation is two

*years, shall be sanctioned only after acquiring the qualification or passing the test."*எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர், தொற்றுநோய் மருத்துவ மருத்துவமனை அவர்களின் 05.12.2022 நாளிட்ட கடிதத்தில், டாக்டர்.M.ஸ்வர்ணா, மருத்துவ அலுவலர் அவர்கள் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு டிசம்பர் 2018-ம் ஆண்டு தேர்ச்சி பெற்றுள்ளதை தொடர்ந்து, வழங்கப்பட்ட ஊதிய உயர்வினை கணக்கீடு செய்யப்பட்டு கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்களின் கருத்துருவின்படி, தனியரிடமிருந்து பிடித்தம் செய்யப்படவேண்டிய தொகை ரூ.6,75,792/- என தெரிவிக்கப்பட்டுள்ளதால், 08.07.2022 நாளிட்ட தனியரின் கடிதத்தில், மேற்காணும் தொகை பெருந்தொகையாக உள்ளதால் இதனை தன்னுடைய மாத ஊதியத்தில் ரூ.10,000/- வீதம் பிடித்தம் செய்ய கேட்டுக்கொண்டதினை தொடர்ந்து மேற்காணும் தொகையினை பிடித்தம் செய்ய இணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 24.08.2022 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியரின் ஊதியத்தில் செப்டம்பர் 2022 ஆம் மாதம் முதல் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது என்றும், எனவே, தனியர் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வு டிசம்பர் 2018ல் தேர்ச்சி பெற்றுள்ளமையால், பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க கோப்பு மற்றும் பணிப்பதிவேடு பெறப்பட்டுள்ளது.

தனியரின் பணிப்பதிவேடு ஆய்வு செய்யப்பட்டு அதன் விவரம் பின்வருமாறு:

S.No	Name	Design	Date of Appointment	Date of Regularization	Date of Probation Declaration	Any DP Action is pending against her	No. of LLP	Details of Departmental Examination passed & Date
1	Dr. M. Swarna	Medical Officer	30.03.2010	-	-	No	-	The Account Test for Executive Officer, Dt:29.12.2018

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ அலுவலர் பதவியானது வகுப்பு-2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், துறைத்தேர்வுகளில் பணிசேர்ந்த நாள் முதல் ஐந்து வருடத்திற்குள்ளாக தேர்ச்சி பெற்றுள்ள அலுவலர்களுக்கு தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்க உரிய அதிகார பங்களிப்பு மன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், *Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 – 31(4)*-ன்படி நேரடி பணிநியமனம் செய்யப்பட்ட அலுவலர்கள் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் துறைத்தேர்வுகளில் அதிகபட்சம் ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக தேர்ச்சி பெறவேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் அவர்களை நிரந்தரமாக பணியறவு செய்யலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், மேற்காண் அலுவலர் துறைத்தேர்வுகளை ஐந்து வருடங்களுக்கு மேல் காலம் கடந்து (29.12.2018 அன்று) தேர்ச்சி பெற்றுள்ளதால், தனியருக்கு தகுதிகாண்பருவம் நீட்டித்து வழங்குவது குறித்து அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப வேண்டியது அவசியமாகிறது. இந்நேர்வில், மேற்காண் அலுவலருக்கு பணி சேர்ந்தநாள் முதல் ஐந்து ஆண்டுகள் வரை தகுதிகாண் பருவகாலம் நீட்டித்து செயல்முறை ஆணை ஏதும் பெருநகர சென்னை மாநகராட்சியில் வழங்கப்படவில்லை.

இதுபோன்ற மற்றொரு நிகழ்வில், அரசு கடிதம் எண்.19388/மாந-3/2017-1, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மாந-3)துறை, நாள்.15.11.2017 மற்றும் அரசாணை எண்.388, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மாந-3)துறை, நாள்.27.09.2019ன்படி, டாக்டர்.V.சாய்சுதா, மருத்துவ அலுவலர் அவர்கள் சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான பணி விதிகள் 1975-ன்படி

வரையறுக்கப்பட்ட காலத்திற்குள் செயல் அலுவலர்களுக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி பெறாமல் காலம் தாழ்த்தி ஐந்தாண்டுகள் பிறகு தேர்ச்சி பெற்றுள்ளதால், சென்னை மாநகராட்சி அலுவலர்களின் பொது பணிவிதி-20ன்கீழ் தனியரது தகுதிகாண் பருவகாலத்தினை நீட்டித்து தேர்வில் தேர்ச்சி பெற்ற மறுநாள் முதல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்படி, தனியர் மீது துறை ரீதியான எவ்வித குற்றச்சாட்டுகளோ/ விசாரணையோ நிலுவையில் இல்லை. தனியர் பணியில் சேர்ந்த நாளான 30.03.2010 முதல் இரண்டு ஆண்டு காலம் பணி முடித்தமைக்கு 30.03.2012-ல் தகுதிகாண்பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்படவேண்டும். ஆனால் தனியர் துறைத்தேர்வினை காலந்தாழ்த்தி 29.12.2018-ல் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்றுள்ளதால், தேர்ச்சி எழுதிய மறுநாளான 30.12.2018 முதல் தகுதிகாண்பருவ காலத்தினை நீட்டிப்பது அவசியமாகிறது. மேலும், மேற்காண் அலுவலரின் விளக்கக் கடிதங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மேற்காண் அலுவலருக்கு, தகுதிகாண் பருவகாலத்தினை நீட்டிக்க கீழ்கண்டவிதிகளினை தளர்வு செய்யப்படவேண்டியுள்ளது.

- ***Tamil Nadu Government Servants (Conditions of Service) Act, 2016 – Act No 14 of 2016 – 31 (4)-ல்*** *"The maxium period upto which the probation of a Government servant shall be extended so as to enable him to acquire the test qualification be fixed as five years, he shall be reverted and the qualified and the eligible junior shall be considered for promotion. If such a person is appointed by direct recruitment and has not acquired the test qualification even within the maximum period of five years, his probation shall be terminated."*
- ***Chennai Corporation Public Health and Medical Service Rules 1969, (5)-ல்"Probation*** *– Every person appointed to any of the classes or categories by direct recruitment or by promotion from the Corporation establishment shall be on probation for a total period of two years on duty within a continuous period of three years."*
- ***Chennai Corporation officers services Rules, 1975, (20)-ல்"Extension of probation*** *– In the case of any probationer falling under sub-rule (b) of rule 18 of sub-rule (c) of rule 19 the appointing authority may extend his probation to enable him to acquire the special qualifications or pass the prescribed tests, as the case may be, to enable the appointing authority to decide whether the probationer is suitable for full membership or not. The period of probation as extended under sub-rule (a) (ii) if rule 18 or sub-rule (c) or rule 19. "*

மேலும், அரசாணைஎண்.446, பொது (பணியாளர்கள் - B) துறை, நாள்.01.05.1934-ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"An examination on test can, in certain cases, be passed in instalments. In such cases the title to the right benefit or concession will be deemed to have accrued on the day following the last day of the examination in the subject or subjects in which he has last passed."

ஆகவே, டாக்டர்.M.ஸ்வர்ணா, மருத்துவ அலுவலர் அவர்கள் பணியில் சேர்ந்த நாளான 30.03.2010 அன்று பணிவரன்முறைப்படுத்தியும், சென்னை மாநகராட்சி அலுவலர்களுக்கான பணிவிதி 1975-ன்படி தகுதிகாண் பருவத்திற்குள் தேர்ச்சி பெறவேண்டிய சிறப்பு தேர்வில் தேர்ச்சி

பெறவில்லை. ஆதலால், சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் விதிகள் *1969*, விதிஎண். *5* மற்றும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பொது பணிவிதிகள் *1975*, பொதுவிதி எண்.*20* ஆகிய விதிகளை தளர்வு செய்து, தனியரது தகுதிகாண் பருவ காலத்தினை *30.03.2012*-ல் இருந்து துறைத் தேர்வு எழுதி தேர்ச்சி பெற்ற மறுநாளான *30.12.2018* வரை நீட்டிக்கவும், *30.12.2018* முதல் பணப்பயன்கள் வழங்கவும், அரசின் அனுமதி வேண்டி பிரேரணை அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/008780/2020

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:029/2023 **பொருள் எண்.29**

பெருநகர சென்னை மாநகராட்சி - பணியமைப்பு - பொதுத்துறை - திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர், மண்டலம் 7 - 22.11.2014 அன்று முதல் உதவி பொறியாளராக பதவி மாற்றம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதால் - 2017-18 ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து மீட்பு செய்து - மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு கருத்தியலாக (Notional Promotion) உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் தினக்கூலி அடிப்படையில் பணிபுரிந்த 59 தொழில்நுட்ப உதவியாளர்களை உடலக பணியிடங்களாக (body constituted post) தோற்றுவித்து, நிரந்தர பணியாளர்களாக அரசாணை எண்.144, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.12.08.2009ன்படி ஈர்த்துக்கொள்ளப்பட்டு ஆணையிடப்பட்டதின் அடிப்படையில், மண்டலம்-7ல் உதவி பொறியாளராக பணிபுரியும், திரு.ஆர்.ஹரிபாபு, அவர்கள் 24.08.2009 முதல் தொழில்நுட்ப உதவியாளராக பணியில் சேர்ந்து, பின்னர் 18.02.2012 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றார்.

ஆணையர் அவர்களின் 21.11.2012 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையின்படி, விதிமீறல்களுடன் கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது தனியர் நடவடிக்கை எடுக்கத் தவறியதற்காக அன்னார் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு, தனியருக்கு ஆணையர் அவர்களின் 22.11.2013 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, மூன்று ஆண்டுகள் திரண்ட பயனுடன்வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது.

தனியர் மேற்கண்ட தண்டனையை ரத்து செய்யக்கோரி சென்னை மாநகராட்சி நியமனக்குழுவிற்கு மேல்முறையீடு அளித்த மனு, நியமனக்குழு தீர்மான எண்.78/2014 நாள்.24.06.2014ல் நிராகரிக்கப்பட்டு ஆணையரின் ஆணை உறுதி செய்யப்பட்டதால், ஆணையர் அவர்களின் 17.07.2014 நாளிட்ட ஆணையில் தனியரின் தண்டனை உறுதி செய்து ஆணையிடப்பட்டது.

அரசாணை எண்.160, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.12.03.2015ல், தனியர் மேற்கண்ட தண்டனையை கூர்ந்தாய்வு (review petition) செய்யக் கோரி அரசுக்கு அளித்த 26.09.2014 நாளிட்ட சீராய்வு மனுவினை, தொடர்புடைய சென்னை மாநகராட்சியின் மூல ஆவணங்களுடன் பரிசீலனை செய்ததில், சென்னை மாநகராட்சி, மண்டலம் 8ல் உள்ள நெ.8/60, ஸ்டேஷன் ரோடு, வில்லிவாக்கம், சென்னை-49 என்ற முகவரியில் விதிமீறல்களுடன் கட்டப்பட்ட தரை தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்ட கட்டிடம், குற்றஞ்சாட்டப்பட்ட அலுவலர் அப்பகுதியில் பணிபுரிந்த காலத்தில் எழுப்பப்பட்டுள்ளது என்பதும், இக்கட்டிடத்தின் மீது தனியர் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளார் என்பதும், இக்கட்டிடத்தின் உரிமையாளருக்கு வழங்கப்பட்ட 24.09.2012 ஆம் நாளிட்ட Locking & Sealing Demolition Notice -லிருந்து தெளிவாக புலப்படுவதால், சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர் (ம) ஆணையரின் 17.07.2014 ஆம் நாளிட்ட செயல்முறை ஆணையில் குறுக்கீடு செய்வதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என கருதி, திரு.ஆர்.ஹரிபாபு, இளநிலை பொறியாளர், சென்னை மாநகராட்சி அவர்களின் 26.09.2014 நாளிட்ட சீராய்வு மனு நிராகரித்து ஆணையிடப்பட்டது.

தனியர் மேற்கண்ட தண்டனையை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.20953/2018-னை தொடுத்தார். இவ்வழக்கின் மீது 02.07.2019 நாளிட்ட சென்னை உயர்நீதிமன்ற உத்தரவில், மேற்கண்ட தண்டனை ரத்து செய்து கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

v)"The impugned order of the 1st respondent in G.O.Ms.(P)-160 dated 12.03.2015 is hereby set aside and the disciplinary authority is directed to impose a penalty of Censure on the petitioner which shall take into effect from the date of stoppage of increment for a period of three years with cumulative effect.

*(vi) The authority shall pass orders of penalty of **Censure** within a period of four weeks from the date of receipt of a copy of this order.*

13. The Writ Petition is allowed to the extent indicated above. No costs. Consequently, connected Miscellaneous Petition is closed."

மேற்படி, உயர்நீதிமன்ற ஆணையின்படி திரு. ஆர்.ஹரிபாபு, இளநிலை பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி (தற்பாது உதவி பொறியாளராக 22.11.2014 முதல் பதவி மாற்றம்) அவர்களுக்கு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்க 19.04.2021 அன்று அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து, அரசாணை எண்.412, ந.நி.(ம).கு.து(மா-3)துறை நாள்.08.11.2022 ல் கீழ்கண்டுள்ளவாறு உத்தரவிப்பட்டுள்ளது.

மேற்கண்ட உயர்நீதிமன்ற உத்தரவின்படி, மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில், திரு. ஆர்.ஹரிபாபு, இளநிலை பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி (தற்பாது உதவி பொறியாளராக 22.11.2014 முதல் பதவி மாற்றம்) அவர்களுக்கு வழங்கப்பட்ட "ஊதிய உயர்வினை மூன்றாண்டுகளுக்கு திரண்ட பயனுடன் நிறுத்தம் எனும் தண்டனையை ரத்து செய்து" "கண்டனம்" என ஆணையிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்கள் தனியர், பகுதி நேரப் பொறியியல் பட்டத்தில் (B.Tech-Civil Engineering) தேர்ச்சி பெற்றதினாலும், தனியரின் தண்டனையான "கண்டனம்" 22.11.2013 முதல் 21.11.2014 வரை ஓராண்டிற்கு, அமலில் இருந்ததாலும் அதற்கு மறுநாளான 22.11.2014 முதல் உதவி பொறியாளராக பதவி மாற்றம் (Re-designated) செய்து ஆணையிடப்பட்டது என்றும், தனியரின் 03.08.2020 ஆம் நாளிட்ட கடிதத்தில், தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் விதிகளின்படி, 2017-2018ஆம் ஆண்டில் உதவி செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் தனக்கு இளையவரான திரு.ஜி.பாஸ்கர், உதவி பொறியாளர் அவர்கள், உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்ற நாளான 31.05.2018 அன்று முதல் கருத்தியலாக உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட வேண்டும் எனக் கோரியுள்ளார்.

திரு.ஜி.பாஸ்கர் மற்றும் 2 உதவி பொறியாளர்கள் அரசாணை(ப) எண்.232, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை, நாள். 31.05.2018 -ன்படி, சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகள் 1969-ன்படி, பணிக்காலத் தகுதி பெறவில்லை என்பதினால், பணிக்காலத்தினை விதித்தளர்வு செய்து உதவி செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டதினை தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரின் 31.05.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

எனவே, திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர், மண்டலம்-7 அவர்களின் கோரிக்கையினை பரிசீலிக்கும் பொருட்டு, தனியரின் உடனடி இளையவரான திரு.ஜி.பாஸ்கர், உதவி பொறியாளர் அவர்கள் அரசாணை (ப) எண்.232, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.31.05.2018-இன்படி, பணிவிதிகளை தளர்வு செய்து உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டுள்ளதால், தனியரின் உடனடி இளையவர் (Immediate Junior) உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாளான 31.05.2018 முதல் (with retrospective effect from the date on which his juniors were promoted) கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு வழங்க, தனியரின் பெயர், 2017-2018-ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து கருத்தியலாக பதவி உயர்வு வழங்க ஆணை வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்கள் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

"பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் செயற்குறிப்பு நடைமுறையில் உள்ள பணிவிதிகள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களின்படி அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, பதவி உயர்வு பெற அனைத்து தகுதிகளையும் பெற்றுள்ள திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளரின் பெயரை *2017-2018*ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்த்து, தனியரின் உடனடி இளையவரான (Immediate Junior) திரு. ஜி.பாஸ்கர், உதவி பொறியாளர், உதவி செயற்பொறியாளராக பதவி உயர்வு பெற்று பணி ஏற்ற நாளான *31.05.2018* முதல் திரு.ஆர்.ஹரிபாபு, அவர்களுக்கு கருத்தியலான (Notional Promotion) உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்கவும், *2017-2018*ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் திரு.ஆர்.ஹரிபாபுவின் பெயரை முதுநிலைப்படி உரிய இடத்தில் சேர்த்து திருத்தப்பட்ட தெரிவுப்பட்டியல் வெளியிடவும் பெருநகர சென்னை மாநகராட்சி, முதன்மை செயலர் / ஆணையருக்கு அனுமதி அளிக்கலாம் எனவும் முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது என உத்தரவிடப்பட்டது."

இதனை தொடர்ந்து, அரசாணை எண்.*412*, ந.நி.வ.கு. *(மா-3)* துறை, நாள்.*08.11.2022*ன்படி, திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர் அவர்களுக்கு கருத்தியலாக உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்க மன்றத்தின் பின்னேற்புகுட்பட்டு ஆணையர் அவர்களின் 25.11.2022 நாளிட்ட செயல் முறை ஆணையின்படி தனியருக்கு உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது.

எனவே, அரசாணை எண்.*412*, ந.நி.வ.கு. *(மா-3)* துறை, நாள்.*08.11.2022*ன்படி, *(i)*உதவி செயற்பொறியாளர் பதவிக்கான திருத்திய தெரிவுப்பட்டியல் வெளியிடப்பட்டதற்கும், மற்றும் *(ii)* திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர் அவர்களின் பெயரை 2017-2018 ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் தெரிவுப்பட்டியலில் சேர்த்து கருத்தியலாக பதவி உயர்வு வழங்கியதற்கும் மற்றும்,

அ) திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர், அவர்களின் பெயரை சேர்த்து *24A*ல் மீட்பு செய்து *(restore) 2017-2018* ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவிக்கான கீழ்காணும் திருத்திய தெரிவுப்பட்டியல் வெளியிடவும்,

வ எண்	இளநிலை / உதவி பொறியாளரின் பெயர் (திருவாளர்கள்)	பதவி மற்றும் பணியில் சேர்ந்த நாள்	குறிப்பு
01.	டி.எம்.இளங்கோ	உதவி பொறியாளர் *14.09.2012*	**அரசாணை (ப) எண்.*214*, நாள்.*24.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
02.	ஆர். எம். சுப்புரமணியன்	இளநிலை பொறியாளர் *08.04.1993*	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.*173/2018* ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.*16.02.2018*
03.	மு.பத்மநாபன்	உதவி பொறியாளர் *14.09.2012*	**அரசாணை (ப) எண்.*214*, நாள்.*24.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
04.	எஸ்.வெங்கடேஸ்குமார்	உதவி பொறியாளர் *14.09.2012*	**அரசாணை (ப) எண்.*214*, நாள்.*24.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**

05.	டி.சங்கரன்	உதவி பொறியாளர் 14.09.2012	**அரசாணை (ப) எண்.214, நாள்.24.05.2018-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
06	எம்.கோபி	உதவி பொறியாளர் 14.09.2012	**அரசாணை (ப) எண்.214, நாள்.24.05.2018-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
07.	ஜி.சண்முகம்	உதவி பொறியாளர் 14.09.2012	**அரசாணை (ப) எண்.214, நாள்.24.05.2018-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
08.	ம.ரமேஷ்	உதவி பொறியாளர் 01.01.2013	**அரசாணை (ப) எண்.214, நாள்.24.05.2018-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
09	எஸ். காசிவிஸ்வநாதன்	உதவி பொறியாளர் 13.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
10.	ஆர். பழனி	உதவி பொறியாளர் 13.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
11	பி. தனசேகர்	உதவி பொறியாளர் 13.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
12.	எம். முத்தையா	உதவி பொறியாளர் 31.12.2013	மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
13.	டி. ரவிவர்மன்	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
14.	கே. இந்திரா	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018

15.	எ.ஆர். உமா ராணி	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
16.	எஸ். கார்த்திகேயன்	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
17.	என். எழிலரசன்	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
18.	எ. மலர்விழி	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
19	எ. சாந்தி	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
20.	வி.மூர்த்தி	உதவி பொறியாளர் 31.12.2013	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
21.	வி. மணிகண்டன்	உதவி பொறியாளர் 10.04.2014	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
22.	ஆர். தேவராஜ்	உதவி பொறியாளர் 21.05.2014	சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மான எண்.173/2018 ன்படி உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட நாள்.16.02.2018
23.	ஜெ.வி.ஆனந்தராவ்	உதவி பொறியாளர் 14.06.2014	**அரசாணை (ப) எண்.214, நாள்.24.05.2018-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**

24.	சி.சேகர்	உதவி பொறியாளர் *19.06.2014*	**அரசாணை (ப) எண்.*214*, நாள்.*24.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது..**
24A	**ஆர். ஹரிபாபு உதவி பொறியாளர்**	**உதவி பொறியாளர் *22.11.2014***	**அரசாணை (ப) எண்.*412* நாள். *08.11.2022* திருத்திய தெரிவுப்பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
25.	ஜி.பாஸ்கர்	உதவி பொறியாளர் *07.12.2014*	**அரசாணை (ப) எண்.*232*, நாள்.*31.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
26.	ஐ.ஜாக்குலின்ஜாய்லதா	உதவி பொறியாளர் *07.12.2014*	**அரசாணை (ப) எண்.*232*, நாள்.*31.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**
27.	வி.ராஜா	உதவி பொறியாளர் *07.12.2014*	**அரசாணை (ப) எண்.*232*, நாள்.*31.05.2018*-ன்படி திருத்திய தெரிவுப் பட்டியலில் பெயர் சேர்த்து வெளியிடப்படுகிறது.**

ஆ) திரு.ஆர்.ஹரிபாபு, உதவி பொறியாளர், அவர்களின் பெயரை *2017 -18* ஆம் ஆண்டிற்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலில் சேர்த்து முன்தேதியிட்டு உதவி செயற் பொறியாளர் பதவி உயர்வு வழங்க ஆணையிடப்பட்டுள்ளதால், தனியரை *2017-2018* ஆம் ஆண்டிற்கான உதவி செயற் பொறியாளர் பதவிக்கான ஏற்கனவே வெளியிடப்பட்ட தெரிவுப்பட்டியலில் பணிமூப்பின் அடிப்படையில் வரிசை எண். *24*ல் இடம் பெற்றுள்ள திரு. சி.சேகர் அவர்கள் பெயர் பின்னரும், வரிசை எண். *25*ல் இடம் பெற்றுள்ள திரு. ஜி.பாஸ்கர் அவர்கள் பெயருக்கு முன்னரும், திரு.ஆர்.ஹரிபாபு அவர்களின் பெயரை மீட்பு (Restore) செய்து **வரிசை எண். *24A*** என நிர்ணயம் செய்தும், பணிமூப்பில் இளையவரான திரு. ஜி.பாஸ்கர் அவர்கள் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்த ***31.05.2018*** நாளினை அடிப்படையாக கொண்டு முன்தேதியிட்டு (Retrospective) மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு ரூ.*56100-205700* என்ற காலமுறை ஊதிய விகிதம் *(*Level *-22)* நிர்ணயித்து கருத்தியலாக உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டதற்கும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ3/20020/2022

முதன்மைசெயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 12.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:030/2023 **பொருள் எண்.30**

அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.சங்கர் லால் குமாவத், இ.ஆ.ப., இணை ஆணையர் (சுகாதாரம்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பதவியினை கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) என பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளது - நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும்.

அரசாணை (நிலை) எண்.3, பொது (சிறப்பு-அ)த் துறை, நாள்: 01.01.2023ன்படி, திரு. சங்கர் லால் குமாவத், இ.ஆ.ப., இணை ஆணையர் (சுகாதாரம்), பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் பதவியினை கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) என பதவி உயர்வு செய்யப்பட்டுள்ளது. இவ்விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பதிவு செய்து
மன்றத்தின் தகவல் மற்றும் பதிவிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதனை மன்றம் பதிவு செய்கின்றது".

*** * * * * ***

பொ.து.ந.க.எண்.ஈ1/31281/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:031/2023 **பொருள் எண்.31**

பெருநகர சென்னை மாநகராட்சி - பணியமைப்பு - பொதுத்துறை - 01.04.2022ஐ மைய நாளாகக்கொண்டு 2022-2023 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செயற்பொறியாளர் பதவி வகுப்பு-2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து பணியமர்வு ஆணை வழங்கும் அதிகாரம் ஆகியன மன்றம் பெற்றுள்ளது. இப்பதவிக்கான மைய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் மாதம் முதல் தேதி ஆகும். இப்பதவிக்கான ஊட்டப்பதவி உதவி செயற்பொறியாளர் பதவியாகும்.

செயற்பொறியாளர் பதவியினை பதவி உயர்வின் மூலம் நிரப்பிட வகுக்கப்பட்டுள்ள நியமன விதிகள் பின்வருமாறு.

அட்டவணை- I

Executive Engineer **Pay band level 25 59300-217600 As per 7th Pay commission G.O.No.303 dated:11.10.2017**	By promotion	1 (a) Must possess the B.E. degree (Civil or Mechanical) of any University or Institution recognized by the University Grants Commission for purpose of its grant; or (b) Must possess the Diploma in Civil or Mechanical Engineering of the State Board of Technical Education or any other qualification considered equivalent thereto: Provided that a person possessing the Diploma in Engineering of the State Board of Technical Education and Training should have shown exceptional merit as Assistant Executive Engineer; and 2. Must have put in a service of not less than five years as Assistant Executive Engineer in Corporation

2022-2023 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்கள் பின்வருமாறு:

அட்டவணை-II

		Crucial Date : 01.04.2022
1.	Total cadre strength **(EXECUTIVE ENGINEER)**	**58 Nos**
	(i) Temporary	Nil
	(ii) Permanent	58 Nos
2.	Number of vacancies on retirements (For 12 months as in para 14 of G.O.Ms.No.603, Personnel and Administrative Reforms (Per. M) Department, dated 12th June 1985) (or on the crucial date prescribed in the rules) **Thiru.J.Ramamoorthy, Executive Engineer dated: 28.02.2023**	**01 No**
3.	5 percent leave reserve vacancies with reference to the working strength (Not applicable for direct recruitment)	-

4.	Number of likely to be promoted (From EE to Zonal Officer & Superintending Engineer) **Thiru.A.S.Murugan, EE, promoted to Zonal Officer on 06.12.2022 -1** **Thiru. V.Bhuvaneswaran, EE, to be promoted as SE Notionally -1** **Thiru. B.Sankaravelu, EE to be promoted as SE -1**	**3 Nos**
5.	Number of new posts likely to be sanctioned during the period and the Number of posts sanctioned earlier but not included in the previous year estimate	-
	Add	
6.	Number of vacancies to be provided for unexpected contingencies on a staggered scale as indicated in G.O. Ms. No.103 Personnel and Administrative Reforms (S) Department, dated 09.10.2014	**02 Nos**

	When the total vacancies arrived at with reference to General rule 4 are between	Provision for unexpected contingencies as a percentage of total vacancies		
	1 to 10	40%		
	11 to 20	30%		
	21 to 40	20%		
	41 to 100	15%		
	100 and above	10%		
		Promotion vacancies		**06 Nos**

	Deduct	
7.	Number of posts disbanded during the recruitment year	-
8.	Number of vacancies apportioned for direct recruitment	-
	Total	**06 Nos**
9.	Number of persons who have been promoted against leave vacancies and subsequently reverted to the lower cadre from the approved list already drawn-up	-
10.	Number of persons who have been deputed to other posts for a specific period and subsequently reverted to the lower cadre for want of vacancy.	-
11.	During the last year panel 2021-2022 approved list 3 persons. Due to insufficient vacancies 2 persons was promoted	yes

பெருநகர சென்னை மாநகராட்சியில் உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் நபர்களுக்கிடையே ஒருங்கிணைந்த மூப்புப்பட்டியல் மற்றும் தற்போதைய நிலை குறித்த விவரங்கள் பின்வருமாறு.

அட்டவணை-III

வ.எண்.	பெயர் / திருவாளர்கள்	உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள்	குறிப்புரை
01.	ஆர்.வேல்முருகன்	11.06.2007	தனியர் மீது பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒழுங்கு நடவடிக்கை விதி எண்.10(b) கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு துறை ரீதியான ஒழுங்கு

			நடவடிக்கை நிலுவையில் உள்ளது. மேலும், தனியர் மீது இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு துறை அவர்களால் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு எண். 1A-2008/CC-III நிலுவையில் உள்ளது. மேலும், தனியர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு எண். W.P.எண்.7619/2019ல் நீதிமன்ற ஆணையின்படி தனியரின் தற்காலிக பணி நீக்கம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் தனியர் மீதான குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் உள்ளது. தமிழ்நாடு அரசு ஊழியர் (நிபந்தனைகள் மற்றும் பணிகள்) சட்டம் 2016ல் இணைப்பு-11ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளபடி 10(b), குற்றச்சாட்டு நிலுவையில் உள்ளதால், **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்ப்பதை தவிர்க்கலாம்.**
02.	நா.முருகவேல்	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
03.	ஆர்.ராஜேந்திரன்	13.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
04.	திரு.ஆர்.கோவிந்தராஜ்	15.05.2013	தனியர் 18.09.2021 அன்று இயற்கை ஏய்தினார்.
05.	திரு.பி.ஞானசந்திரன்	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார். இருப்பினும் தனியர் மீது துணை விதி 10(அ)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இருப்பினும், தமிழ்நாடு அரசு ஊழியர் (நிபந்தனைகள் மற்றும் பணிகள்) சட்டம் 2016ல்

			இணைப்பு-11ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால், *2(4) issuance of a show cause notice or charges framed under rule 17(a) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules against a member of service shall not be a bar for inclusion of his name in the approved list.* **மேற்படி விதிகளின்படி தனியர் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
06.	திரு.ட்டி.இ.திருநாவுக்கரசு	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார்.இருப்பினும் தனியர் 28.12.2022 அன்று செயற் பொறியாளர் பதவிக்கு விரும்பம் இல்லை என தெரிவித்துள்ளார் (இது முதலாவது வருடம் ஆகும்) எனவே **தனியர் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.**
07.	திரு. எஸ். முருகேசன்	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
08.	என்.விக்டர்ஞானராஜ்	29.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
09.	திரு. எஸ். கதிர்வேலு	31.10.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் உதவி செயற்பொறியாளர்களில் விதிகளின்படி, 5 ஆண்டுகள் தகுதிப்பணி முடித்து செயற்பொறியாளராக பதவி உயர்வு பெறுவதற்கு முழுத்தகுதி பெறும் மேற்கண்ட அட்டவணை-III்ல் கண்டுள்ள உதவி செயற்பொறியாளர்களின் முதுநிலைப்பட்டியலின் அடிப்படையில் 2022-2023 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவியில் 01.04.2022 நாளிட்ட மைய நாளில் தயாரிக்கப்பட்ட தெரிவுப்பட்டியல் அட்டவணை - IV-ல் பின்வருமாறு அமைகிறது. மேலும், திரு.க.வரதராஜன் செயற் பொறியாளர் அவர்கள், சிறப்பு நேர்முக உதவியாளராக மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் வேற்றுப் பணி அடிப்படையில் சென்றுள்ளார். தனியர் வேற்றுப் பணி முடிவுற்று, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தனியர் திரும்பும் பட்சத்தில் அன்றைய நிலையில் செயற்பொறியாளர் பதவியில் உள்ள இளையவர் உதவி செயற் பொறியாளராக பதவி இறக்கம் செய்யப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

அட்டவணை-IV

வ. எண்.	பெயர் / திருவாளர்கள்	உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள்	குறிப்புரை
01.	நா.முருகவேல்	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **தெரிவுப் பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
02.	ஆர்.ராஜேந்திரன்	13.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் தனியரின் பெயரை **தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
03.	திரு.பி.ஞானசந்திரன்	15.05.2013	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார். இருப்பினும் தனியர் மீது துணை விதி 10(அ)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு நிலுவையில் உள்ளது. இருப்பினும், தமிழ்நாடு அரசு ஊழியர் (நிபந்தனைகள் மற்றும் பணிகள்) சட்டம் 2016ல் இணைப்பு-11ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதால், *2(4) issuance of a show cause notice or charges framed under rule 17(a) of the Tamil Nadu Civil Services (Discipline and Appeal) Rules against a member of service shall not be a bar for inclusion of*

			his name in the approved list. **மேற்படி விதிகளின்படி தனியர் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
04.	திரு. எஸ். முருகேசன்	*15.05.2013*	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
05.	என்.விக்டர்ஞானராஜ்	*29.05.2013*	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**
06.	திரு. எஸ். கதிர்வேலு	*31.10.2013*	தனியர் வரையறுக்கப்பட்டுள்ள அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதாலும் மேலும் தனியர் மீது இன்றைய தேதியில் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் இல்லை என்பதாலும் **தனியரின் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.**

துணை ஆட்சியர்(வடக்கு, மத்தியம் (ம) தெற்கு) ஆகியோர்களின் முறையே 19.01.2023, 13.01.2023 நாளிட்ட கடிதங்களில் மேற்படி அட்டவணை 4ல் கண்டுள்ள நபர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர் அவர்களின்13.01.2023 நாளிட்ட கடிதத்தில், அட்டவணை-*IV*ல் கண்டுள்ள நபர்களின் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்துறையின் 11.01.2023 மற்றும் 19.01.2023 நாளிட்ட குறிப்பில், மேற்படி அட்டவணை IVல் வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர். வேல்முருகன், உதவி செயற் பொறியாளர், அவர்கள் மீது பெருநகர சென்னை மாநகராட்சியின் ஒழுங்கு நடவடிக்கை விதி எண்.10(*b*) கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. மேலும், தனியர் மீது இயக்குநர், விழிப்பு மற்றும் ஊழல் ஒழிப்பு துறை அவர்களால் தொடரப்பட்ட குற்றவியல் வழக்கு எண். *1A-2008/* CC-III நிலுவையில் உள்ளது. மேலும், தனியர் சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு எண். W.P.எண்.7619/2019ல் நீதிமன்ற ஆணையின்படி தனியரின் தற்காலிக பணி நீக்கம் ரத்து செய்யப்பட்டுள்ளது. மேலும் தனியர் மீதான குற்றவியல் வழக்கு நடவடிக்கையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வரிசை எண். 3ல் கண்டுள்ள திரு. பி.ஞானசந்திரன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் மீது துணை விதி 10(அ)ன் கீழ் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டு விளக்கம் பெறப்பட்டு இறுதி ஆணைக்காக கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி அட்டவணை-IVல் வரிசை எண். 1,24,5 (ம) 6 கண்டுள்ள நபர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அட்டவணை-IVல் வரிசை எண்.1 முதல் 6 வரை உள்ள உதவி செயற்பொறியாளர்கள் கல்வித் தகுதி மற்றும் பணிக்காலத் தகுதி போன்ற அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளார்கள். எனவே தனியர்களின் பெயரை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க பரிசீலிக்கலாம்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-2ன் கீழ்வரும் செயற்பொறியாளர் பதவி உயர்வு அளிக்கும் அதிகாரம் அரசாணை எண்.181. ந.நி.கு.வ.துறை நாள்.06.10.2009ன்படி மன்றத்தின் வசம் உள்ளது.

எனவே, 2022-2023 ஆம் ஆண்டில் 01.04.2022 நாளிட்ட மைய நாளில் செயற் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க,

அ) 01.04.2022 ஐ மைய நாளாகக் கொண்டு 2022-2023ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவி உயர்வுக்கு தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணை-Vல் கண்டுள்ள தகுதியான 6 உதவி செயற் பொறியாளர்களைக் கொண்ட இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

அட்டவணை-V

வ.எண்.	பெயர் / திருவாளர்கள்	உதவி செயற் பொறியாளராக பணியில் சேர்ந்த நாள்
01	திரு. நா.முருகவேல்	15.05.2013
02	திரு. ஆர்.ராஜேந்திரன்	13.05.2013
03	திரு. பி.ஞானசந்திரன்	15.05.2013
04	திரு. எஸ். முருகேசன்	15.05.2013
05	திரு. என்.விக்டர்ஞானராஜ்	29.05.2013
06	திரு. எஸ். கதிர்வேலு	31.10.2013

ஆ) அடுத்து வரும் மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள/ ஏற்படவுள்ள செயற்பொறியாளர் காலிப்பணியிடங்களை, மேற்காண் அட்டவணை-Vல் கண்டுள்ள தெரிவுப்பட்டியலிலுள்ள நபர்களுக்கு, ரூ.59300-217600/- (Pay band level 25- 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி) என்ற ஊதிய விகிதத்தில் செயற்பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட "அ" மற்றும் "ஆ" ஆகிய இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து
மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/514/2017

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 09.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:032/2023 **பொருள் எண்.32**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம்-15, வார்டு-197, சோழிங்கநல்லூர் கிராமம் - அரசாணையின்படி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய திட்டங்களுக்காக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலத்தில் 110 KV அளவில் துணை மின்நிலையம் அமைப்பதற்கும் அதற்கு மாற்று புலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நிலத்தை நில பரிமாற்ற ஒப்பாவணம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்வதற்கும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, 15-வது மண்டல அலுவலரின் 14.03.2017 (ம) 05.07.2017 நாளிட்ட குறிப்பில், மண்டலம்-15, வார்டு-197, சோழிங்கநல்லூர் கிராமம், புல எண். 237/1A பகுதி மற்றும் 237/1B பகுதியில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 1.49 ஏக்கர் நிலத்தை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பதாகவும், மேற்படி புலத்திற்கு மாற்று புலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலமான புல எண்.330 பகுதியில் உள்ள 1.49 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரிய மூலம் 110 KV துணை மின்நிலையம் அமைக்க தான கிரயம் மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைக்குமாறு 14.11.2016 (ம) 07.12.2016 நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய செயற்பொறியாளர் மற்றும் நிர்வாக அலுவலரால் கேட்டுக்கொண்டுள்ளபடியால் உரிய மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு ஆணையரின் ஒப்புதல் பெற வேண்டி இத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் துணை மின்நிலையம் அமைக்க கோரியுள்ள நிலம்

வ. எண்	கிராமம்	புல எண்	உரிமையாளர் விவரம்	பரப்பளவு
1.	சோழிங்கநல்லூர்	330/(பகுதி)	பெருநகர சென்னை மாநகராட்சி (திறந்தவெளி நிலத்தின் பகுதி)	1.23 ஏக்கர் (5000 ச.மீ)

மேற்படி புலத்திற்கு மாற்று புலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில பரிமாற்றம் மூலம் ஒப்படைக்கப்படவுள்ள நிலம்

வ. எண்	கிராமம்	புல எண்	உரிமையாளர் விவரம்	பரப்பளவு
1.	சோழிங்கநல்லூர்	237/1A (பகுதி) மற்றும் 237/1B (பகுதி)	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்	1.49 ஏக்கர்

இந்நிகழ்வில் திறந்தவெளி பயன்பாட்டினை மாற்றம் செய்ய அரசுக்கு பிரேரணை அனுப்பி உரிய அரசாணை பெற்ற பிறகே நிலப்பரிமாற்றம் செய்ய இயலும்.

தனிவட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 25.07.2017 நாளிட்ட புல தணிக்கை குறிப்பில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிலமான புல எண்.237/1A பகுதி மற்றும் 237/1B பகுதியிலுள்ள 1.49 ஏக்கர் நிலமானது கடலோர ஒழுங்கமைப்பு பகுதியில் வருவதால் கட்டிடங்கள் கட்ட அனுமதியில்லை என தெரியவந்ததை அடுத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் ஏற்கனவே பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி இடமான புல எண்.330-ல் அமைந்துள்ள மொத்த விஸ்தீரணமான 1.78 ஏக்கர் 7203 ச.மீ நிலத்தில் 1.23 ஏக்கர் நிலம் (5000 ச.மீ நிலத்தினை) 110 KV துணை மின் நிலையம் அமைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் என புலத்தணிக்கையின் போது ஆஜரான அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்டதாகவும், மேலும் புல எண்.237/1ஏ பகுதி மற்றும் 237/1பி பகுதியிலுள்ள 1.49 ஏக்கர் நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்குவதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய உதவி செயற்பொறியாளரால் தெரிவிக்கப்பட்டதாகவும், ஆதலால்

புல எண்.237/1ஏ பகுதி மற்றும் 237/1பி-ல் உள்ள 1.49 ஏக்கர் நிலத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடமிருந்து நில பரிமாற்ற ஒப்பாவணம் மூலம் பெற்றுக்கொண்டு, புல எண். 330-ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஏற்கனவே தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்ட திறந்தவெளி காலியிடத்தில் 5000 சதுர மீட்டர் நிலத்தினை 110 *KV* துணை மின் நிலையம் அமைக்க மன்றத் தீர்மானம் பெற்று திறந்தவெளி நிலத்தின் வகைப்பாட்டினை மாற்றம் செய்ய அரசின் அனுமதி பெற மேல்நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மேற்கண்ட நிலங்களை நிலபரிமாற்ற ஒப்பாவணம் மூலம் எடுத்துக்கொள்வதற்கு சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.564/2017, நாள்.07.09.2017ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திறந்தவெளி பயன்பாட்டினை மாற்றம் செய்வதற்கும் மாற்று புலமாக ஒப்படைக்கப்படவுள்ள நிலத்தினை நில பரிமாற்ற ஒப்பாவணம் மூலம் எடுத்து கொள்வதற்கும் உரிய அரசாணை பெற்று தருமாறு இவ்வலுவக 24.09.2017 (ம) *10.11.2017* நாளிட்ட கடிதம் மூலம் அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அரசு இணை செயலாளர்/நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை அவர்களின் *07.12.2017*, 22.01.2018 (ம) 02.05.2019 நாளிட்ட கடிதத்தில், மேற்படி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொடர்புடைய நிலங்கள் பட்டா நிலமா அல்லது அரசு வழங்கிய நிலமா என்பதையும் இச்செயற் குறிப்பின் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் சென்னை மாவட்டம் மற்றும் தலைமைச் செயலாளர்/நில நிர்வாக ஆணையர் அவர்களின் அறிக்கையினை பெற்று அரசுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் *25.04.2022* நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட நிலபரிமாற்றத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான புல எண்.237/1*A* (ம) 237/1*B* ஆகிய புலங்கள் வருவாய் ஆவணங்களில் பின்வருமாறு பதிவாகியுள்ளது.

புல எண்.	விஸ்தீரணம்	வகைபாடு	பட்டா எண் உரிமையாளர் பெயர்
237/1A	*0.39.00*	ர.பு	*2402* – தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்
237/1B	*0.45.00*	ர.பு	*2402* - தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலமான புல எண்.330 வருவாய் ஆவணங்களில் பின்வருமாறு பதிவாகி உள்ளது.

புல எண்.	விஸ்தீரணம்	வகைபாடு	பட்டா எண் உரிமையாளர் பெயர்
330/4	*0.10.0*	ர.ந.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
330/5	*0.14.0*	ர.ந.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
330/6	*0.11.0*	ர.ந.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
330/7	*0.13.5*	ர.ந.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
330/8	*0.22.5*	ர.ந.	தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

இந்நேர்வில் மேற்கண்ட இரு வாரியத்திற்கு சொந்தமான நிலங்களின் வகைபாடு வருவாய் ஆவணங்களில் """"ரயத்து புன்செய்"" மற்றும் """"ரயத்து நன்செய்"" என பதிவாகியுள்ளது. எனவே, இப்புலங்கள் பட்டா நிலங்கள் என தெரிவித்து மேற்கண்ட புலங்களுக்கான கிராம கணக்குகளின் நகல்கள் இத்துடன் இணைத்து அனுப்புவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நில நிர்வாக ஆணையர்/நில நிர்வாகத்துறை அவர்களின் 16.09.2022 நாளிட்ட கடிதத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிக்கையை ஆய்வு செய்ததில் மேற்கண்ட புல எண்.237/1*A*, *1B* மற்றும் புல எண்.330/4, *5*, *6*, *7* & 8 ஆகிய நிலங்கள் முறையே ரயத்துவாரி, புன்செய் மற்றும் நன்செய் நிலங்களாக பதிவாகியிருப்பது தெரிய வருவதாகவும், இந்நிலங்கள் வருவாய் பதிவேடுகளில் வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பதிவு செயப்பப்பட்டுள்ளதாகவும், மேற்கண்ட இரண்டு நிலங்களும் பட்டா நிலமாக உள்ளதால் மாவட்ட ஆட்சியரின் அறிக்கையை ஏற்று தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.177, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந.2) துறை, நாள்.15.12.2022ல், மண்டலம்-15, வார்டு-197, சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலமான புல எண்.330 பகுதி, 1.78 ஏக்கர் மொத்த பரப்பளவில் 1.23 ஏக்கர் (5000 சதுர மீட்டர்) நிலத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி திட்டங்களுக்காக 110KV அளவில் துணை மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைக்கும் பொருட்டு, மேற்படி திறந்தவெளி நிலத்தின் பயன்பாட்டினை மாற்றம் செய்யவும், இந்நிலத்திற்கு மாற்று புலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான புல எண்.237/1ஏ பகுதி மற்றும் 237/1பி பகுதியிலுள்ள 1.49 ஏக்கர் நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் பரிமாற்ற ஒப்பாவணம் மூலம் எடுத்துக்கொள்ளவும் பெருநகர சென்னை மாநகராட்சி முதன்மைச் செயலர்/ ஆணையருக்கு அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குசொந்தமான நிலம் :-

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலமான புல எண்.330 பகுதியிலுள்ள 1.23 ஏக்கர் (53579 ச.அடி) பரப்பளவு நிலத்தின் வழிகாட்டி மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.2345/- என கணக்கிடுகையில் 53579 x 2345 = ரூ.12,56,42,755/- ஆகும். (ரூபாய் பனிரெண்டு கோடியே ஐம்பத்தாறு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து எழுநூற்றி ஐம்பத்தி ஐந்து மட்டும்)

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலம் :-

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான நிலமான புல எண்.237/1ஏ (ம) 237/1பி -ல் அடங்கியுள்ள 1.49 ஏக்கர் (64,904 ச.அடி) பரப்பளவு நிலத்தின் வழிகாட்டி மதிப்பு சதுர அடி ஒன்றுக்கு ரூ.2345/- என கணக்கிடுகையில் 64,904 x 2345 = ரூ.15,21,99,880/- ஆகும் (ரூபாய் பதினைந்து கோடியே இருபத்தொன்று இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூற்றி எண்பது மட்டும்)

வழிகாட்டி மதிப்பின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1.23 ஏக்கர் பரப்பளவுள்ள திறந்தவெளி நிலத்தின் நில மதிப்பு ரூ.12,56,42,755/- ஆகும். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான 1.49 ஏக்கர் பரப்பளவு நிலத்தின் நில மதிப்பு ரூ.15,21,99,880/- ஆகும். இந்நில பரிவர்த்தனை மூலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வழங்கப்படவுள்ள நிலத்தின் மதிப்பு கூடுதலாக ரூ.2,65,57,325/- உள்ளதால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு எவ்வித நிதி இழப்பும் இல்லை.

எனவே, மேற்கண்ட அரசாணையின்படி மண்டலம்-15, வார்டு-197, சோழிங்கநல்லூர் வட்டம் மற்றும் கிராமம், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி நிலமான புல எண்.330 பகுதி, 1.78 ஏக்கர் மொத்த பரப்பளவில் 1.23 ஏக்கர் (5000 சதுர மீட்டர்) நிலத்தினை தமிழ்நாடு வீட்டுவசதி திட்டங்களுக்காக 110KV அளவில் துணை மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைப்பதற்கும், மேற்படி திறந்தவெளி நிலத்தின் பயன்பாட்டினை மாற்றம் செய்வதற்கும், இந்நிலத்திற்கு மாற்று புலமாக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான புல எண்.237/1ஏ பகுதி மற்றும் 237/1பி பகுதியிலுள்ள 1.49 ஏக்கர் நிலத்தை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் பரிமாற்ற ஒப்பாவணம் மூலம் எடுத்துக்கொள்வதற்கும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.01/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

நி.ம.உ.து.ந.க.எண்.எல்.இ9/2329/2021

முதன்மைச் செயலாளர் / ஆணையாளர் அவர்களின் 24.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:033/2023 **பொருள் எண்.33**

பெருநகர சென்னை மாநகராட்சி - நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம்-9, வார்டு - 111, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், கிரீம்ஸ் ரோடு திட்டப்பகுதி, பிளாக் எண்.6, புல எண்.35/61 பகுதி பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) நிலம் - 56 ஏர்ஸ் 86 சதுர மீட்டர் (1.40 ஏக்கர்) மொத்த விஸ்தீரணத்தில் சுமார் 0.93 ஏக்கர் விஸ்தீரணத்தில் "பிரதம மந்திரியின் அவாஸ் யோஜானா" திட்டத்தின்கீழ் "அனைவருக்கும் வீடு" (PMAY-HFA) திட்டம் செயல்படுத்தும் பொருட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்திட இசைவினை வழங்க மன்றத்தின் அனுமதி.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநரின் 30.09.2021 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-9, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், "கிரீம்ஸ் ரோடு" திட்டப்பகுதி, பிளாக் எண்.6, புல எண்.35/61-ல் 0.38.44.5 ஹெக்டேர் விஸ்தீரணத்தில் "மாநகராட்சி பொது" வகைப்பாடு கொண்ட நிலத்தில் "பிரதம மந்திரியின் அவாஸ் யோஜானா" திட்டத்தின்கீழ் "அனைவருக்கும் வீடு" (PMAY-HFA) கட்டும் திட்டத்தின் கீழ் சாலையோரம், நீர்நிலை புறம்போக்கு மற்றும் மாநகராட்சி நிலங்களில் ஆக்கிரமித்து வசித்து வரும் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர் கணக்கெடுப்பு செய்யப்பட்டு, சுமார் 350-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கண்டறியப்பட்டுள்ளதாகவும், மேலும் ஆக்கிரமிப்புகளை அகற்றி அங்கு வசித்து வரும் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்வதற்கு 0.38.44.5 ஹெக்டேர் நிலத்தில் வாரியத்தால் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டிட வாரியத்தின் பெயரில் நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்திட ஏற்கனவே 14.09.2021- நாளிட்ட கடிதத்தின் மூலம் சென்னை மாவட்ட ஆட்சியரிடம் வாரியத்தால் கோரப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் மேற்கண்ட மாநகராட்சி (பொது) வகைப்பாடு நிலத்தினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்திடும் பொருட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு இசைவினை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 14.12.2021 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் திட்டம் செயல்படுத்த கோரப்பட்ட புல எண்.35/61-ல் உள்ள 0.38.44.5 ஹெக்டர் விஸ்தீரணத்தில 250 குடிசை வீடுகள் கட்டப்பட்டு மக்கள் வசித்து வருவதாகவும், இப்புலத்திற்கு வடக்கே இதே புல எண்ணை சேர்ந்த அக்ஷய பாத்திரம் மதிய உணவு கூடம், தெற்கே புல எண்,35/4 முதல் 35/11 வரை, கிழக்கே புல எண்.35/79, மேற்கே கீரிம்ஸ் சாலை அமைந்துள்ளது எனவும், மேற்படி நிலமானது வருவாய் நிலப்பதிவேட்டில் பிளாக் எண்.6, புல எண்.35/61-ல் 56.86.0 ஹெக்டர், மாநகராட்சி பொது உபயோகம் என்றும் அடங்கல் கலத்தில் "கார்பரேஷன் பப்ளிக்" என்றும் பயன்பாட்டு கலத்தில் பள்ளி விளையாட்டு இடம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குடிசை மாற்று வாரியம் கோரும் 0.38.44.5 ஹெக்டரில் தற்போது புலத்தில் 91.5 சென்ட் நிலமானது 250 குடியிருப்புகளாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/மண்டல அலுவலர், மண்டலம்-9 அவர்களின் 22.07.2022 நாளிட்ட கடிதத்தில், மேற்படி இடத்தை பெருநகர சென்னை மாநகராட்சி கோட்டம்-111, உதவி பொறியாளர்(ம) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விடமேம்பாட்டு வாரிய உதவி பொறியாளருடன் ஆய்வு செய்யப்பட்டதாகவும், ஆய்வில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் சுமார் 250 குடும்பங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு குடியிருப்புகள் கட்டி வாழ்ந்து வருவதாகவும், அவ்விடத்தில் அமைந்துள்ள பொதுக்கழிப்பிடத்தை இடித்து விட்டு புதியதாக கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்புலத்தின் புல விவரங்கள் கீழ்கண்டவாறு உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

S.No	Description	Remarks
1.	T.S.No.	35/61
2.	Total Area	1.47 Acres
3.	No.of Families residing	250 (approx.)
4.	Land Area	0.95 Acres

இந்நேர்வில் இப்புலமானது வருவாய் துறை மின்னணு நிலப்பதிவேட்டில் சென்னை மாநகராட்சி (பொது) நிலம் என பதிவாகியுள்ளது. ஆனால் இத்துறையால் பராமரிக்கப்பட்டு வரும் நிரந்தர நிலப்பதிவேட்டில் சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், பிளாக் எண், புல எண்.35/61 மொத்த விஸ்தீரணம் 1 காணி1 மனை 1211 சதுர அடி எனவும் உரிமையாளர் பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) நிலம் என பதிவாகியுள்ளது.

அதனை தொடர்ந்து மேற்கண்ட நிலத்தினை துணை ஆணையர்/வமநி அவர்களால் 10.08.2022 – அன்று கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது, தனிவட்டாட்சியர்/நிமஉது, உதவி பொறியாளர் கோட்டம் - 111 (ம) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய உதவி பொறியாளர் ஆகியோர் உடனிருந்தனர். ஆய்வில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் நில உரிமை மாற்றம் செய்ய கோரிய நிலத்தின் ஒரு பகுதியில் பள்ளி மாணவர்களுக்கு இலவசமாக காலை சிற்றுண்டி வழங்குவதற்கு கல்வித்துறையின் மூலமாக திருவாளர்கள். அக்ஷய பாத்திர நிறுவனத்திற்கு சுமார் 1837.50 ச.மீ பரப்பளவு ஒதுக்கீடு செய்ய சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.720/2019 நாள்.18.11.2019ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அக்ஷய பாத்திர நிறுவனத்திற்கு 10 வருட காலத்திற்கு நிபந்தனை அடிப்படையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. தற்போது மீதமுள்ள புலமானது ஆக்கிரமிப்புகளால் சூழப்பட்டுள்ளது ஆதலால் இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி வாரியத்தின் மூலம் அடுக்குமாடி குடியிருப்பு கட்ட வாரியத்தால் நிலம் கோரப்பட்டுள்ளது. ஆய்வின் முடிவில் வாரியத்தால் இத்திட்டப்பகுதியில் திட்டம் நிறைவேற்ற தேவைப்படும் சரியான பரப்பளவு விவரம், இந்நிலத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஆக்கிரமிப்புதாரர்களின் எண்ணிக்கை விவரம் (ம) இத்திட்டப்பகுதியில் வாரியத்தால் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை விவரம் ஆகியவற்றை வாரியத்தால் சமர்ப்பிக்குமாறு துணை ஆணையர்/வமநி அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மேற்கண்ட நிலமானது 1958 – ஆண்டில் நில எடுப்பு மூலம் வரப்பெற்ற நிலம் என்பதால் இந்நிலமானது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான (தனி) நிலமாகும். ஆகவே, இந்நிலத்திற்கு அரசாணை எண்.35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.17.02.1997-ன்படி மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயம் செலுத்த வாரியத்தால் இசைவு தெரிவிக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட அரசாணையின்படி இந்நிலத்திற்கு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற கிரய அடிப்படையில் நிலக்கிரயத்தொகை செலுத்த இசைவினை தெரிவிக்குமாறும், மேலும் திட்டப்பகுதியில் திட்டம் நிறைவேற்ற தேவைப்படும் சரியான பரப்பளவு விவரம், இந்நிலத்தில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பயனாளிகளின் எண்ணிக்கை விவரம் (ம) இத்திட்டப்பகுதியில் வாரியத்தால் கட்டப்படவுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளின் எண்ணிக்கை விவரம் ஆகியவற்றை வரைபடத்துடன் இத்துறைக்கு அனுப்பிவைக்குமாறு இவ்வலுவலக கடிதங்கள் மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட திட்டப்பகுதியில் தற்காலிகமாக 300 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், மேலும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி (ம) கட்டிட விதிகளின் திட்டமிடல்படி 0.95 ஏக்கர் நிலப்பரப்பில் 308 குடும்பங்கள் வசிப்பதற்கேற்ப தரைத்தளத்துடன்

கூடிய 11 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட வடிவமைப்பு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் ஒவ்வொரு குடியிருப்பும் சராசரியாக 340.50 சதுர அடி (37.64 சதுர மீட்டர்) பரப்பளவுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்படவுள்ளதாகவும், இதனை கருத்திற் கொண்டு புல எண்.35/61-ல் அடங்கியுள்ள 0.93 ஏக்கர் நிலத்தினை கீரீம்ஸ் ரோடு திட்டப்பகுதிக்காக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நிலம் மாற்றம் செய்யுமாறும், மேலும் இந்நிலத்திற்கான நிலக்கிரயத்தொகையை கணக்கிட்டு தெரிவிக்கும் பட்சத்தில் அத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-9, வார்டு – 111, சென்னை மாவட்டம், எழும்பூர் வட்டம், நுங்கம்பாக்கம் கிராமம், கிரீம்ஸ் ரோடு திட்டப்பகுதி, பிளாக் எண்.6, புல எண்.35/61-பகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி (தனி) நிலம் 56 ஏர்ஸ் 86 சதுர மீட்டர் (1.40 ஏக்கர்) மொத்த விஸ்தீரணத்தில் சுமார் 0.93 ஏக்கர் நிலத்தில் "பிரதம மந்திரியின் அவாஸ் யோஜானா" திட்டத்தின்கீழ் "அனைவருக்கும் வீடு" (PMAY-HFA) திட்டம் செயல்படுத்தும் பொருட்டு மனை ஒன்றுக்கு ரூ.10,000/- என்ற நிலக்கிரய அடிப்படையில் நிலக்கிரயத்தொகை பெற்று கொண்டு ,

<u>நிபந்தனைகள்:-</u>

1. மேற்படி திட்டப்பகுதியில் அடங்கியுள்ள சாலைகள், பொது கழிப்பிடங்கள் மற்றும் திறந்த வெளி நிலங்கள் (பூங்காக்கள் மற்றும் விளையாட்டு திடல்கள்) போன்றவைகளை தானப்பத்திரம் மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உரிய முறையில் வாரியம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. இத்திட்டப்பகுதியில் பெருநகர சென்னை மாநகராட்சி கட்டுபாட்டின் கீழ் சாலைகள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள், பொது கழிப்பிடங்கள் மற்றும் அலுவலகங்கள் போன்றவைகள் இருந்தால் அவைகள் தொடர்ந்து பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுபாட்டிலேயே இருக்கும்.
3. இத்திட்டப்பகுதியில் கட்டப்படவுள்ள குடியிருப்புகளில் 25 விழுக்காடு பெருநகர சென்னை மாநகராட்சி 4-ஆம் தர சிப்பந்திகளான துப்பரவு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு தமிழ்நாடு வாழ்விட மேம்பாட்டு வாரியத்திற்கு நில மாற்றம் செய்வதற்கு நிலைக்குழு வரிவிதிப்பு (ம) நிதி மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.028/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.க.கு.ந.க.எண். அ7/2060/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *20.01.2023* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:034/2023 **பொருள் எண்.34**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - *2021*-2022 ஆம் ஆண்டு - தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் *(Ad- hoc Bonus and Special Ad-hoc Bonus)* - பெருநகர சென்னை மாநகராட்சி *"C"* மற்றும் *"D"* பிரிவு பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி *"C"* மற்றும் *"D"* பிரிவு பணியாளர்களுக்கு *2021*-2022 ஆம் ஆண்டு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் *(Ad- hoc Bonus and Special Ad-hoc Bonus)* வழங்குவதற்கு அரசாணை(நிலை)எண்.373, நிதி (படிகள்)த்துறை நாள்:26.12.2022ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:-

(அ) அரசாணையில், முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து *(C & D Group)* அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் காலமுறை சம்பளம் பெறும் ஆசிரியர்கள் / பணியாளர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், ரூ.3000/- என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு 2021-2022ம் கணக்காண்டிற்கு தற்காலிக மிகை ஊதியம் மற்றும் சில்லறை செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கும் மற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெறும் பணியாளர்களுக்கும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் ரூ.1000/- பொங்கல் பண்டிகை கொண்டாட ஏதுவாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது என அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஆ) 2021-2022 ஆம் ஆண்டு வரை 'இ' மற்றும் 'ஈ' தொகுதியைச் *(C & D Group)* சார்ந்த முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசு பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள்/பணியாளர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு, 30 நாட்கள் என்ற அடிப்படையில், ரூ.3000/- என்ற உச்ச வரம்பிற்குட்பட்டு, தற்காலிக மிகை ஊதியமாக வழங்கிட அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

(இ) 2021-2022ஆம் கணக்காண்டில் குறைந்தபட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம் / சிறப்பு காலமுறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள்), கிராம உதவியாளர்கள் தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் ரூ.1000/- வழங்க அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இவ்வாறு அனுமதிக்கப்படும் தற்காலிக மிகை ஊதியமானது 31.03.2022 ஆம் நாளன்றுள்ள *C* மற்றும் *D* பிரிவு ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என்பதை உச்சவரம்பாகக்கொண்டு, தற்காலிக மிகை ஊதியத்தொகை கணக்கிடப்பட வேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் / திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் தற்காலிக மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும் எனவும்,

(உ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தற்காலிக மிகை ஊதியம் / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் இந்த அரசாணையின் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கத்தக்கதாகும் எனவும்,

(ஊ) தற்காலிக மிகை ஊதியம் / சிறப்பு தற்காலிக மிகை ஊதியம் குறித்த செலவினம் சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின்கீழ் *"01* சம்பளங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் வரும் *"04* ஏனைய படிகள்" என்ற உள்நுணுக்கத் தலைப்பின் கீழ் அல்லது 02 ஊதியங்கள் என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் என தெரிவித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2) மேற்கண்ட அரசாணையின் அடிப்படையில் வழங்கப்பட்ட மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தினால் பெருநகர சென்னை மாநகராட்சியில் 2022-2023 ஆம் நிதியாண்டில் ஏற்படும் கூடுதல் செலவினம் தோராயமாக ரூ.3.00 கோடி (ரூபாய் மூன்று கோடி மட்டும்) ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

3) இவ்வரசாணை *29.12.2022* அன்று இத்துறையில் பெறப்பட்டது, ஆனால் *2022* டிசம்பர் மாதத்திற்கான, நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி)வின் கூட்டம் 26.12.2022, மற்றும் மன்ற கூட்டம் 28.12.2022 ஆகிய தேதிகளில் முடிவு பெற்ற நிலையில், இப்பொருள் தொடர்பான கோப்பினை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டது.

4) எனவே, இவ்வரசாணையின் பொருளின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களிடம் 31.12.2022 அன்று அனுமதி பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் *"C"* மற்றும் *"D"* பிரிவு சார்ந்த முறையான காலமுறை சம்பளம் பெறும் அனைத்து நிரந்தரம் (ம) தற்காலிக பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த, வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை) 31.12.2022 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு இவ்வரசாணை நடைமுறைப்படுத்தப்பட்டது.

5) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக, அரசாணை (நிலை) எண்.*373*, நிதி (படிகள்)த்துறை, நாள்: 26.12.2022ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு, நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.03/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.க.கு.ந.க.எண். அ7/62 / 2023

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் *20.01.2023* நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:035/2023 **பொருள் எண்.35**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - படிகள் - அகவிலைப்படி *01.01.2023* முதல் *38* சதவிகிதம் உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி.

அரசாணை (நிலை) எண்.7, நிதி (படிகள்)த் துறை, நாள்:06-01-2023ன்படி, மாநில அரசு அலுவலர்களுக்கு 01.01.2023 முதல் அகவிலைப்படி 4 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து அரசு ஆணையிடப்பட்டுள்ளது:-

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு)
(1)	(2)
01-01-2023	அடிப்படை ஊதியத்தில் 38 சதவீதம்

ஆ) இவ்வரசாணையில், அனுமதிக்கப்பட்ட கூடுதல் அகவிலைப்படி 01.01.2023 முதல் ரொக்கமாக வழங்கலாம் என்றும், 01.07.2022 முதல் 31.12.2022 வரை அகவிலைப்படியானது தொடர்ந்து 34 சதவீதமாகவே இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ) ஜனவரி 2023ஆம் மாதம் முதல் அகவிலைப்படி தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படவேண்டும் எனவும், திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில் அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாக கணக்கிடப்படவேண்டும். அதுவே 50 காசுக்கு குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈ) மேலும், இவ்வரசாணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், சில்லரை செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழுநேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும் எனவும், இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி பகுதி நேர பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உ) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில் நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள்/உடற்பயிற்சி இயக்குநர்கள்/ நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் (pay drawn in the prescribed Levels in the Pay Matrix on Special times of Scale) ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவுத்திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் பணிபுரியும் ஊராட்சி செயலாளர்கள் / எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

2) எனவே, இவ்வரசாணையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் பின்னேற்பிற்கு உட்பட்டு, முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் அனுமதி 11.01.2023 அன்று பெறப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு நடைமுறைப்படுத்த வட்டார துணை ஆணையர் (வடக்கு / மத்தியம் / தெற்கு) / அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் (1 முதல் 15 வரை), 13.01.2023 அன்று சுற்றறிக்கை அனுப்பப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

3) தற்போது, மேற்கண்ட நிகழ்வின் இறுதியாக அரசாணை *(*நிலை*)* எண்.7 நிதி (படிகள்)த்துறை, நாள்¦.*06.01.2023*.ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டதற்கு நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

> "25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.04/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.க.கு.ந.க.எண்.அ7/132/2023

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 21.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:036/2023 **பொருள் எண்.36**

பெருநகர சென்னை மாநகராட்சி - மத்திய கணக்கு குழுமம் - திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு 01.01.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு(Ad-hoc Increase) வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது - இவ்வரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த அனுமதி.

அரசாணை பத்தி 3ல் திருத்தப்பட்ட தொகுப்பூதியம் (Consolidated Pay) / நிலையான ஊதியம் (Fixed Pay) / மதிப்பூதியம் (Honorarium) பெறும் பணியாளர்களுக்கு 01.01.2023 முதல் மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) அனுமதித்து கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது:-

எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது	மற்றொரு தனி உயர்வு (Another Ad-hoc Increase)	
	ரூ.2500 வரை பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு	ரூ.2500க்கு மேலாக பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு
(1)	(2)	(3)
01-01-2023	ரூ. 50	ரூ. 100

2) இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட மற்றுமொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) ஜனவரி 2023 முதல் தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையான மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) அரசாணையின் விபரம் கீழ்க்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.Ms.No.9 Dated:6th JANUARY 2023.

(*Subakiruthu, Margazhi -22,Thiruvalluvar Aandu 2053)*

ABSTRACT

AD-HOC INCREASE - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from **01-01-2023 -** Orders - Issued.

Read the fo11owing:-

1. G.O.Ms.No.256, Finance (Allowances) Department, dated: 18-08-2022.
2. G.O.Ms.No.7, Finance (Allowances) Department, dated: 06-01-2023.

-o0o-

ORDER:

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

With effect form	Ad-hoc Increase	
	Employees drawing upto Rs.2500/p.m.	Employees drawing above Rs. 2500/p.m.
(1)	(2)	(3)
01-07-2022	Rs. 50	Rs. 100

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay in Levels of Pay in the respective Pay Matrix with effect from 01-01-2023.

3. Government has therefore, decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 01-01-2023. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 01-01-2023 as detailed below:-

With effect form	**Ad-hoc Increase**	
	Employees drawing upto Rs. 2500/p.m.	**Employees drawing above Rs. 2500/p.m.**
(1)	**(2)**	**(3)**
01-01-2023	Rs. 50	Rs. 100

4. The payment of Ad-hoc Increase for the month of January,2023 shall be drawn and disbursed by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, Over Head Tank Operators and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

(BY ORDER OF THE GOVERNOR)

N.MURUGANANDAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

4. எனவே, அரசாணை (நிலை) எண்9, நிதி(படிகள்)த்துறை, நாள்:06.01.2023ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.026/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

ம.அ.7.சு.து.ந.க.எண்.எச்2/2450/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:037/2023 **பொருள் எண்.37**

பெருநகர சென்னை மாநகராட்சி - மண்டலம்-7, பொது சுகாதாரத்துறை, பகுதி-18, 19 மற்றும் 20ற்குட்பட்ட கோட்டம் -79 முதல் 93 வரைக்கான பகுதிகளில் NULM திட்டத்தின் கீழ் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட 220 கொசு ஒழிப்பு பணியாளர்களின் பணிக்காலம் 18.01.2023 அன்று முடிவு பெறுவதால் 19.01.2023 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்வதற்கு நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம்-7 (அம்பத்தூர்) 41.32 ச.கி.மீ. பரப்பளவுள்ள 15 வார்டுகள் உள்ளடக்கிய பகுதியாகும். இப்பகுதியில் 195 கி.மீ. நீளமுள்ள பக்கவாட்டு கால்வாய்களும், 32.709 கி.மீ. நீளமுள்ள மழைநீர் கால்வாயும், 29.4 கி.மீ. நீளமுள்ள நீர்வழித்தடமும் உள்ளது. மேலும் ஐந்து இலட்சம் மக்கள் தொகை கொண்டு இம்மண்டலத்தில் 87699 வீடுகளும், 1819 அடுக்குமாடி வீடுகளும் இதில் 181481 குடியிருப்புகளும் உள்ளது. இம்மண்டலத்தின் நடுவே சுமார் 1200 ஏக்கர் பரப்பளவில் சுமார் 5900 உற்பத்தி மற்றும் சிறு குறு தொழிற்சாலைகளும் அமைந்துள்ளன. இம்மண்டலத்தில் புகை பரப்பும் பணிக்கென 4 வாகனங்களும், 21 கைப்புகை போக்கிகளும், கொசு மருந்து தெளிக்க 12 கைத்தெளிப்பான்களும் உள்ளது. மேலும் புதிய கட்டுமானங்கள் கட்டப்பட்டு வளர்ச்சி அடைந்துவரும் மண்டலமாக உள்ளது.

இம்மண்டலத்திலுள்ள பக்கவாட்டு கால்வாய்களில் கழிவு நீர் தேங்காதவாறு பராமரிக்கவும், மழைநீர் கால்வாய்களில் நீர் தேக்கம் ஏற்படாதவாறும், குளங்கள், ஏரிகள் மற்றும் நீர் வழித்தடங்கள் ஆகாய தாமரை செடிகளை அப்புறப்படுத்தி கொசு உற்பத்தியை தடுப்பதற்கான பணியினை மேற்கொள்வதற்காக 78 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மாற்று பணி அடிப்படையில் மலேரியா பணியாளர்களாகவும் மற்றும் 19 நிரந்தர மலேரியா பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

மன்றத்தீர்மானங்களின்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-7ற்குட்பட்ட கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள பகுதிகளில் பூச்சி தடுப்பு பணியை மேற்கொள்ள ஒரு சிறு வட்டத்திற்கு (Sector) ஒரு தொழிலாளர் என ஒரு நாளைக்கு 80 வீடுகள் மற்றும் 1 வாரத்திற்கு 500 வீடுகள் என பிரிக்கப்பட்டு கொசு ஒழிப்பு பணியில் 220 NULM தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பணியாளர்கள் செக்டாரில் உள்ள வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இத்தீவிர பணியால் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.

மண்டலம்-7ல் கொசுவினால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்த கொசு மருந்து அடிக்கும் பணியை மேற்கொள்ளவும், கொசுப்புகை பரப்பும் இயந்திரங்களை இயக்கவும், நிரந்தர தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக கூடுதலாக தற்காலிக தொழிலாளர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்து கடந்த 2016 முதல் 03.05.2019 வரை கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. ஒப்பந்தக் காலம் 03.05.2019 அன்றுடன் முடிவு பெற்ற நிலையில், மண்டலங்களில் ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்பட்டு வரும் தொழிலாளர்களை அந்தந்த மண்டலத்திலேயே தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் (National Urban Livelihood Mission-NULM) குழுக்கள் அமைத்து அதன் மூலம் கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்படுத்திக்கொள்ளலாம் எனவும், அவ்வாறு ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் ஊதியத்தை சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் வழங்கலாம் எனவும், கொசு ஒழிப்பு தொழிலாளர்கள் பணி செய்த நாட்களுக்கு அந்தந்த மண்டல நல அலுவலர் அவர்களிடமிருந்து வருகை சான்றொப்பம் பெற்று அதன் அடிப்படையில் கணக்கிட்டு ஊதியம் வழங்கலாம் எனவும், ஊதியத் தொகையை பெருநகர

சென்னை மாநகராட்சி நிதியில் இருந்து தொகுதி வாரியான குழுக்களுக்கு செலுத்தி அதன் மூலம் ஊதியத்தை தொழிலாளர்களின் வங்கி கணக்கில் செலுத்தவும், அந்தந்த மண்டல அலுவலர் அவர்களின் தலைமையில் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) மூலம் குழுக்கள் அமைக்க ஆணையர்/சிறப்பு அதிகாரி அவர்களிடம் நிர்வாக அனுமதி பெற்று பணியை மேற்கொள்ளவும், இப்பணிக்கான செலவின தொகையை அந்தந்த மண்டலத்தில் உள்ள பகுதி கணக்கு குழுமத்தின் மூலம் NULM குழுக்களுக்கு குறியீட்டு எண்.30-32-02, கணக்கு தலைப்பு எண். 210-10-06-02 என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் மன்றத் தீர்மான எண்.173/2019 நாள் 07.03.2019'ன்படி அனுமதிவழங்கப்பட்டதனை தொடர்ந்து, மண்டலம்-7 அம்பத்தூர் பொது சுகாதாரத்துறை கோட்டம்-79 முதல் 93 வரையுள்ள பகுதிகளில் சுகாதாரப் பணிக்கான 220 ஒப்பந்த அடிப்படை தொழிலாளர்களை தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து அதன் மூலம் தொழிலாளர்களை சுகாதாரப்பணிக்கு பணியமர்த்தவும், 220 பணியாளர்கள் NULM மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுப்படுத்தவும் தீர்மான எண். 250/2019 நாள் 06.05.2019 நாளிட்ட சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மானத்தின் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.

மன்ற தீர்மான எண்.94/2022, 30.05.2022 , மன்றத்தீர்மானத்தில் 17.05.2022 நாளிட்ட துணை ஆணையர்(வ(ம)நி) அவர்களின் ஆணையின்படி தற்போதுள்ள 220 NULM தற்காலிக பணியாளர்கள் மண்டலம்-7, சுகாதாரப்பிரிவில் கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணியினை மேற்கொள்ள இரண்டு மாதங்களுக்கு மட்டும் தற்காலிகமாக பணியமர்வு செய்தும், அவ்வாறு பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் (*"We may continue existing man power for 2 Months & decide on rationalization in the meanwhile RDC may weed out absentees at their level"*) இரண்டு மாதங்களில் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதவர்களை நீக்கம் செய்திட மத்திய வட்டார துணை ஆணையர் அவர்கள் அளவில் நடவடிக்கை மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ள குறிப்பின் மீது 18.05.2022 நாளிட்ட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் ஆணையினை தொடர்ந்து மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை துறை, 08.06.2022 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளப்படியும் மற்றும் மன்றத்தீர்மானத்தில் (மன்ற தீர்மான எண்.287/2022, நாள்.30.07.2022) *R.D.C. (Central) Restricted to sanction 6 months at time* என தெரிவித்து தீர்மானத்தின் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டது.

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், 19.05.2022 முதல் இரண்டு மாதத்திற்கு 220 NULM தற்காலிக தொழிலாளர்கள் தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் குழுக்கள் அமைத்து அதன் மூலம் மண்டலம்-7, சுகாதாரப்பிரிவில் கோட்டம்-79 முதல் 93 வரை உள்ள வீடுகளுக்கு சென்று ஒவ்வொரு வீட்டிலுள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகளில் தேங்கியுள்ள நீரில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தீவிர பணியால் கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன் குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்பட்டு வரும் தொழிலாளர்கள் தொடர்ந்து பணிக்கு வர தவறும் பட்சத்தில், புதிய நபர்களை கொசு ஒழிப்பு பணியில் ஈடுப்படுத்தவும், பணிக்கு வராத பணியாளர்களை மண்டல அலுவலர் அவர்களின் அனுமதியுடன் நீக்க நடவடிக்கை மேற்கொள்ள ஆணை வேண்டப்படுகிறது. தற்போது பணிபுரியும் 220 NULM தற்காலிக தொழிலாளர்கள் பணிக்காலம் 18.01.2023 அன்று முடிவு பெறுவதால் 19.01.2023 முதல் 18.01.2024 வரை ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து கொசு ஒழிப்பு பணியினை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்-7க்கு அனுமதி அளிக்கப்பட்ட 220 NULM பணியாளர்கள் மூலம் கொசு ஒழிப்பு பணியினை 18.01.2023 அன்று முடிவு பெறுவதால் 19.01.2023 முதல் ஓராண்டு காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்ய அனுமதியும்,

2. மன்றத்தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி மேற்சொன்ன 220 NULM பணியாளர்கள் மூலம் பதினைந்து குழுக்களாக பிரித்து பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தவும்,

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.06/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ம.வா.ப. எண்.சி1/1384/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 26.11.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:044/2023 **பொருள் எண்.44**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய சென்னை வாகன பணிமனை - மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு 2023-2024 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் செய்ய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி

சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண். 180/78 நாள். 26.02.78ன்படி, சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரிப்பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து, இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் ஆகிய நிறுவனங்களிடமிருந்து 1978-79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. அன்றைய காலக்கட்டத்தில், 10 மண்டலங்களுக்காக வட சென்னை மற்றும் தென்சென்னையில் (6 முதல் 10) உள்ள வாகன இயக்கூர்தி நிலையங்கள் (1 முதல் 5) அமைக்கப்பட்ட பின்னர், இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள், இந்த வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன. சென்னை மாநகராட்சி 15 மண்டலங்களாக விரிவாக்கம் செய்யப்பட்ட பின் 2013 முதல் வடசென்னை, மத்திய சென்னை, மற்றும் தென்சென்னை என பிரிக்கப்பட்டன. மத்திய வட்டாரமாக மண்டலம்-6 முதல் 10 வரை பிரிக்கப்பட்டது.

இயந்திர பொறியியல் துறையின் மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம்-6 முதல் 10 வரை உள்ள லாரி நிலையங்களில் அசோக் லைலேண்ட், சிவாராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறிய வகை முன்பளு தூக்கிகள், மின்துறை வாகனங்கள், பொக்லைன், புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகுரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 239 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், நலத்துறையின் மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கும் மின்வெட்டின் காரணமாக சென்னை மாநாகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிற்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் வெள்ளநீரை இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

இயந்திர பொறியியல் துறையின் மத்திய சென்னை வாகன பணிமனையின் கீழ் இயங்கிவரும் மண்டலம் 7, 8 லாரி நிலைய வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பும் வாகனங்கள் மற்றும் மண்டலம்-9 மற்றும் 10 க்கு உட்பட்ட வாகனங்களுக்கும் மற்றும் புகைபரப்பும் வாகனங்களுக்கும் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்பப்படுகின்றன. இந்த பங்க் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தாரால் நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

நிறுவனங்களின் பெயர்	சேமிப்பு தொட்டியுள்ள இடம்	டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம்
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன்	மண்டலம்-8 லாரி நிலையம், எண். 5 C, ப்ரூவரி சாலை, செனாய் நகர், சென்னை-30	மண்டலம்-7,8,9 மற்றும் 10 லாரி நிலைய வாகனங்கள், பிற மாநகராட்சி பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள், புகை பரப்பும் வாகனங்கள் மற்றும் இதர பணிகளுக்கு

இந்நிலையில் பாரத் பெட்ரோலியம் நிறுவனத்தின் 01.12.2022 நாளிட்ட விலை விவரப்படி மொத்த கொள்முதல் விலை ரூ 111.34/- ம், சந்தை விலை ரூ 94.24/-ம் ஆகும். எனவே, மொத்த கொள்முதல் விலை சந்தை விலையை காட்டிலும் ஒரு லிட்டருக்கு ரூ.17.1/- (01.12.2022 தேதியின்படி) அதிகமாக இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளதால் மத்திய ஆயில் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கு மாற்றாக இந்நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலைக்கு வாங்குவதற்கு மன்ற தீர்மான எண்.121/2022 நாள் 30.05.2022 அன்று ஆணை வழங்கப்பட்டது.

அதன்படி, மொத்த கொள்முதல் விலை சந்தை விலைக்கு சமமாக குறையும் வரை மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து சில்லறை விற்பனை விலையில் எரிபொருள் கொள்முதல் செய்யப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கை பராமரிக்கும் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து கொள்முதல் செய்யப்படுவதால், இந்நிறுவனம் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட)	மொத்த தேவை லிட்டர் (2023-2024 ஆம் ஆண்டிற்கு)
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள்	டீசல்	ரூ. 94.24/- (நாள். 01.12.2022)	10,60,000/-
மொத்த தொகை	10,60,000/- x ரூ. 94.24/-= ரூ. 9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து தொண்ணூற்று நான்கு ஆயிரத்து நானூறு மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலையாக செலுத்த வேண்டும் என்றும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை அளித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின் படியே டீசலை வழங்கி வருவதாலும், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மேலும், மண்டலம்-8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு 2023-2024 ஆம் ஆண்டின் எரிபொருள் தேவைக்கு தோராயமாக கணக்கிடப்பட்ட, 10,60,000 லிட்டர் டீசலை பெறுவதற்கு ரூ.9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து தொண்ணூற்று நான்கு ஆயிரத்து நானூறு மட்டும்) தேவைப்படுகிறது. இச்செலவீனம் 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண். 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளப்படும். மேலும் இது ஒரு இந்திய அரசின் நிறுவனம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட முகவர் என்பதால், பிணை வைப்புத்தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும், இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரிபொருளை, மேற்கண்ட மத்திய அரசு நிறுனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து அவர்கள் தற்போது அளித்த விலைப்புள்ளியின்படி, அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலையின்படி வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள். 09.08.2000-ன்படி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அரசு ஆணையினை அமல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01, நாள். 18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அதன்படி. நடப்பு நிதியாண்டில் 2023-2024 ஆம் ஆண்டிற்கு மண்டலம்-8 லாரி நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் டீசலை கொள்முதல் செய்திட மன்றத்தின் அனுமதி பெறப்படவேண்டும்.

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பட்டிற்கு உட்பட்ட மண்டலம்-7,8,9 மற்றும் 10 லாரி நிலையங்களின் வாகனங்கள், பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள் மற்றும் புகை பரப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவைப்டும் எரிபொருள் (டீசல்) மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க் மூலம் நிரப்ப அனுமதியும்,
2. மத்திய சென்னை வாகன பணிமனை கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருள் 2023-2024 ஆம் ஆண்டிற்கு தேவைப்படுகின்ற 10,60,000 லிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு தேவையான மொத்த தொகையான ரூ.9,98,94,400/- (ரூபாய் ஒன்பது கோடியே தொண்ணூற்று எட்டு இலட்சத்து தொண்ணூற்று நான்கு ஆயிரத்து நானூறு மட்டும்) தற்போதைய விலையில் அல்லது கொள்முதல் செய்யும்போது அமலில் உள்ள விலைக்கு திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து அல்லது மத்திய ஆயில் நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட முகவர்களிடமிருந்து தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
3. மண்டலம்-8 லாரி நிலையத்தில் இயங்கும் டீசல் பங்க்கிற்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/ம.நீ.வ,து) அவர்களின் ஆணை பெற்று, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் அதன் அங்கீகரிக்கபட்ட முகவர்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்புத்தொகை கட்டுவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
5. இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் கோரியபடி, தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது RTGS மூலமாக அளிக்கவும்,
6. இதற்கான செலவீனத்தை 2023-2024 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண். 230-20-03-06 எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

7. ஒவ்வொரு ஆண்டும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசலை, இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ளலாம் என அரசு நிரந்தர ஆணை அளித்துள்ளதால், அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 7 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வ.வி(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.06/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.07/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்1/2615/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:045/2023 **பொருள் எண்.45**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 1 முதல் 8 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி சமன் செய்யும் பணி - 5 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (D80 A12 அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயம் - 5 சிப்பங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.3,54,25,500/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே மின்னணு ஒப்பம் கோரவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் 1 முதல் 8 வரை அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகங்கள் ஆகியவற்றிலிருந்து காம்பாக்டர் மற்றும் டாரஸ் உபகரணங்கள் மூலம் தனியார் ஒப்பந்ததாரர், திருவாளர்கள். ராம்கி மற்றும் மாநகராட்சியால் சேகரிக்கப்படும் குப்பைகள் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 190 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் பகல் வேளையிலும், 175 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் இரவு வேளையிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இவ்வாறு நாள் ஒன்றிற்கு சேகரிக்கப்படும் மொத்த குப்பைகளின் எடை தோராயமாக 2400 மெட்ரிக் டன்னாகும். அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

தற்பொழுது, தோராயமாக 250 ஏக்கர் அளவிலான இடத்தில் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. குறைந்த அளவிலான இடம் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான உபகரணங்கள் மட்டுமே இருப்பதால், அடிக்கடி வாகனங்கள் நீளமான வரிசையில் குப்பை கொட்டுவதற்காக காத்திருப்பதால் நேர விரயம் ஏற்படுகிறது எனவும் இரண்டாம் நடைக்கு வாகனங்கள் சென்று வர இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்து குப்பை கொட்டும் வளாகத்திற்கு செல்லும் வாகனங்கள் தங்கு தடையின்றி விரைவாக உள்ளே சென்று குப்பைகள் கொட்டுவதற்கு உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது.. அவ்வாறு செய்வதால் மண்டலம்-5, 6 மற்றும் 8 ல் உள்ள குப்பை மாற்றும் நிலையங்களில் சேருகின்ற குப்பைகள் உடனுக்குடன் அகற்றப்படுவதுடன், குப்பை மாற்று நிலையங்களில் குப்பைகள் சேருவது தவிர்க்கப்படும். மேலும், குப்பை ஏற்றி செல்லும் வாகனங்கள் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை மீது செல்லும் போது ஏற்படும் பழுதுகளான டயர் பஞ்சர், ஸ்பிரிங் பிளேட்டுகள் உடைதல் மற்றும் இதர வாகன பழுதுகள் சமன் செய்யப்பட்ட வழியில் செல்லும் போது வெகுவாக குறையும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கு தீர்வுகாண கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேவையான புல்டோசர் உபகரணங்களை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மின்னணு ஒப்பம் கோரி வாடகை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அறிவுறுத்தப்பட்டது. திடக்கழிவு மேலாண்மை கையேட்டில் (Municipal Solid Waste Management Manual) பிரிவு 4.5.4.10.1 அட்டவணை 4.8ல் உள்ள வழிகாட்டுதலின்படி தேவைப்படும் புல்டோசர் உபகரணங்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டு ஓராண்டிற்கு வாடகை அடிப்படையில் பணி அமர்த்துமாறு மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களால் கோரப்பட்டுள்ளது.

அதன்படி மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தின் அடிப்படையில் பகல் நேர பணிக்கு மூன்று புல்டோசர்களும் இரவு நேர பணிக்கு இரண்டு புல்டோசர்களும் தனித்தனியே குறுகிய கால ஒப்பம் கோரப்பட்டு புல்டோசர் உபகரணங்கள்

மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணி காலமானது விரைவில் முடிவடைய உள்ளது.

எனவே, மண்டலம் 1 முதல் 8 வரையிலான மண்டலங்கள் மற்றும் அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகங்கள் ஆகியவற்றிலிருந்து கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்கென 5 எண்ணிக்கையிலான *D-80 A12* அல்லது அதற்கு இணையான வகை புல்டோசர்களை ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயித்து 5 உபகரணங்களுக்கு தனித்தனியே மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் *5* எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (பகல் நேர பணிக்கு மூன்று டோசர்களும் இரவு நேர பணிக்கு இரண்டு டோசர்களும்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து மின்னணு ஒப்பம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தோராய மதிப்பீட்டு தொகை கணக்கிடப்பட்டு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொகையானது தொழில்நுட்ப தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் கொண்ட குழு மூலம் நிர்ணயிக்கப்பட்டு துணை ஆணையர் (வ (ம) நி) அவர்களால் 22.09.2022 நாளிட்ட அங்கீகரிக்கப்பட்ட விலைப்புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு புல்டோசர் உபகரணத்தினை *(D80* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) வாடகை முறையில் பணியமர்த்த ஒரு மணி நேரத்திற்கு ரூ. 2,147/- *(GST 18%* உட்பட) என்பதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

Sl. No	*Equipment details*	*Qty*	*Hire Charges per dozer per hour (Incl 18% GST) (Rs.)*	*Hire Charges per dozer for a period of 3300 hours (Incl 18% GST) (Rs.)*	*Total Hire Charges for 5 dozers for a period of 3300 hours (Incl 18% GST)*
1	*Bulldozer (D80 or quivalent A12 Model)*	*5 No's*	*2,147/-*	*70,85,100/-*	*3,54,25,500/-*
Total Hiring Charges for 5 Nos. of Bulldozers D80 equivalent dozing capacity for a period of 3300 hours (Incl 18% GST)					*3,54,25,500/-*

மேலே தெரிவிக்கப்பட்ட புல்டோசர் உபகரணமானது வெளிச்சந்தையில் அதிக இடங்களில் பயன்பாடு இல்லாத காரணத்தினால் ஒரு சில தனியார் நிறுவனங்கள் மட்டும் ஓரிரு உபகரணத்தை சொந்தமாக வைத்துள்ளனர். இதனால், ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே ஒப்பம் கோருவதனால் அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்க வழிவகை செய்வதோடு ஒரே ஒப்பந்ததாரரை பணியமர்த்துவதால் 5 உபகரணங்களையும் பணி அமர்த்துவதில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, தேவைப்படுகின்ற 5 புல்டோசர் உபகரணங்களை ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே கீழ்க்கண்டவாறு ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

Sl. No	***Equipment details***	***File No.***	***Qty***	***Total Hire Charges for a period of 3300 hours (Incl 18% GST)***
1	*Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-4 point.*	*M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-1*	1 No	70,85,100/-

2	*Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-5 point.*	*M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-2*	1 No	70,85,100/-
3	*Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-6 point.*	*M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-3*	1 No	70,85,100/-
4	*Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-7 point.*	*M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-4*	1 No	70,85,100/-
5	*Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-8 point.*	*M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-5*	1 No	70,85,100/-

உபகரணங்களின் பணி திறனை மண்டலம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி பெறப்படும் பட்டியை இயந்திர பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் தீர்வு செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டின் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் *40-41-10* மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-800- 400* என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி பெற்று *2022-2023* மற்றும் 2023 - *2024* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் 1 முதல் 8 வரையிலான மண்டலங்களிலிருந்து மற்றும் அயப்பாக்கம், வானகரம், கோயம்பேடு வணிக வளாகம் ஆகியவற்றிலிருந்து சேகரிக்கப்பட்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்ய *5* எண்ணிக்கையிலான *(D80 A12* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) புல்டோசர் உபகரணங்களை ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து ஐந்து சிப்பங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.3,54,25,500/- *(GST* சேர்த்து) (மூன்று கோடியே ஐம்பத்து நான்கு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) *[*ஒவ்வொரு சிப்பத்திற்கும் ரூ.70,85,100/- (ரூபாய் எழுபது இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நூறு மட்டும்*]* க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

Sl. No	Equipment details	File No.	Qty	Total Hire Charges for a period of 3300 hours (Incl 18% GST)
	1	2	3	4
1	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year 3300 **hours**) for day shift for Zone-4 point.	M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-1	1 No	70,85,100/-
2	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-5 point.	M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-2	1 No	70,85,100/-
3	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours)** for day shift for Zone-6 point.	M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-3	1 No	70,85,100/-
4	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-7 point.	M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-4	1 No	70,85,100/-
5	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-8 point.	M.E.D.C.No.M1/ 2615 /2022 Package-5	1 No	70,85,100/-
மொத்தம்			5 No's	3,54,25,100/-

2. தேவைப்படும் 5 புல்டோசர் உபகரணங்களை மேற்கண்ட அட்டவணையின்படி ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் வாடகை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,

3. இதற்கான பட்டியை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி இயந்திரப் பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் பட்டித் தொகையினை தீர்வு செய்யவும்,

4. இதற்கான செலவினத்தினை இயந்திரபொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-800- 400 என்ற தலைப்பின் கீழ் – 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.08/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.09/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ந.க.எண்.எம்1/2617/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 11.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:046/2023 **பொருள் எண்.46**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் 9 முதல் 15 வரை சேகரிக்கப்படும் குப்பைகளை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டி சமன் செய்யும் பணி - 6 எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (D80 A12 அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயம் - 6 சிப்பங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.4,25,10,600/-க்கு நிர்வாக அனுமதி மற்றும் ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே மின்னணு ஒப்பம் கோரவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் 9 முதல் 15 வரை உள்ள மண்டலங்களிலிருந்து காம்பாக்டர் மற்றும் டாரஸ் உபகரணங்கள் மூலம் தனியார் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். உர்பசர் சுமித் மற்றும் மாநகராட்சியால் சேகரிக்கப்படும் குப்பைகள் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகிறது. நாள் ஒன்றுக்கு 110 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் பகல் வேளையிலும், 225 எண்ணிக்கையிலான வாகனங்கள் மூலம் இரவு வேளையிலும் குப்பைகள் கொட்டப்படுகின்றன. இவ்வாறு நாள் ஒன்றிற்கு சேகரிக்கப்படும் மொத்த குப்பைகளின் எடை குறைந்தது 2400 மெட்ரிக் டன்னாகும். அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்வது மிகவும் அவசியமானதாகும்.

தற்பொழுது, தோராயமாக 25 ஏக்கர் அளவிலான இடத்தில் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பைகள் கொட்டப்படுகின்றன. குறைந்த அளவிலான இடம் மற்றும் குறைந்த எண்ணிக்கையிலான உபகரணங்கள் மட்டுமே இருப்பதால், அடிக்கடி வாகனங்கள் நீளமான வரிசையில் குப்பை கொட்டுவதற்காக காத்திருப்பதால் நேர விரயம் ஏற்படுகிறது எனவும் இரண்டாம் நடைக்கு வாகனங்கள் சென்று வர இயலாத சூழ்நிலை உள்ளது. எனவே, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் அன்றாடம் கொட்டப்படும் குப்பைகளை உடனுக்குடன் சமன் செய்து குப்பை கொட்டும் வளாகத்திற்கு செல்லும் வாகனங்கள் தங்கு தடையின்றி விரைவாக உள்ளே சென்று குப்பைகள் கொட்டுவதற்கு உரிய நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும், குப்பை ஏற்றி செல்லும் வாகனங்கள் குப்பை கொட்டும் வளாகத்தில் குப்பை மீது செல்லும் போது ஏற்படும் பழுதுகளான டயர் பஞ்சர், ஸ்பிரிங் பிளேட்டுகள் உடைதல் மற்றும் இதர வாகன பழுதுகள் சமன் செய்யப்பட்ட வழியில் செல்லும் போது வெகுவாக குறையும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கு தீர்வுகாண பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்திற்கு தேவையான புல்டோசர் உபகரணங்களை இயந்திரப் பொறியியல் துறை மூலம் மின்னணு ஒப்பம் கோரி வாடகை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அறிவுறுத்தப்பட்டது. திடக்கழிவு மேலாண்மை கையேட்டில் *(Municipal Solid Waste Management Manual)* பிரிவு 4.5.4.10.1 அட்டவணை 4.8ல் உள்ள வழிகாட்டுதலின்படி தேவைப்படும் புல்டோசர் உபகரணங்களின் எண்ணிக்கையினை கணக்கிட்டு நாளொன்றிற்கு 6 புல்டோசர் இயந்திரங்களை பணி அமர்த்துமாறு மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்களால் கோரப்பட்டுள்ளது.

அதன்படி மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே) அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தின் அடிப்படையில் பகல் நேர பணிக்கு மூன்று புல்டோசர்களும் இரவு நேர பணிக்கு இரண்டு புல்டோசர்களும் தனித்தனியே குறுகிய கால ஒப்பம் கோரப்பட்டு புல்டோசர் உபகரணங்கள் மூன்று மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகின்றன. இப்பணி காலமானது விரைவில் முடிவடைய உள்ளது.

எனவே, மண்டலம் 9 முதல் 15 வரையிலான மண்டலங்களிலிருந்து குப்பை அகற்றப்பட்டு பெருங்குடி குப்பை கொட்டும் வாளகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்யும் பணிக்கென 6 எண்ணிக்கையிலான *D-80 A12* அல்லது அதற்கு இணையான வகை புல்டோசர்களை ஒரு உபகரணத்திற்கு ஒரு வருட காலத்திற்கு 3300 மணி நேரம் என நிர்ணயித்து 6 உபகரணங்களுக்கும் தனித்தனியே மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

தற்போது உள்ள சூழ்நிலையை கருத்தில் கொண்டு, பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் *6* எண்ணிக்கையிலான புல்டோசர் உபகரணங்கள் (பகல் நேர பணிக்கு மூன்று புல்டோசர்களும் இரவு நேர பணிக்கு மூன்று புல்டோசர்களும்) ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து மின்னணு ஒப்பம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த தோராய மதிப்பீட்டு தொகை கணக்கிடப்பட்டு கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான தொகையானது தொழில்நுட்ப தகுதி வாய்ந்த உறுப்பினர்கள் கொண்ட குழு மூலம் நிர்ணயிக்கப்பட்டு துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களால் 22.09.2022 நாளிட்ட அங்கீகரிக்கப்பட்ட விலைப்புள்ளியினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது ஒரு புல்டோசர் உபகரணத்தினை *(D80* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) வாடகை முறையில் பணியமர்த்த ஒரு மணி நேரத்திற்கு ரூ. 2,147/- *(GST 18%* உட்பட) என்பதன் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

Sl. No	***Equipment details***	***Qty***	***Hire Charges per dozer per hour (Incl 18% GST) (Rs.)***	***Hire Charges per dozer for a period of 3300 hours (Incl 18% GST) (Rs.)***	***Total Hire Charges for 6 dozers for a period of 3300 hours (Incl 18% GST)***
1	Bulldozer (D80 or equivalent A12 Model)	6 No's	2,147 /-	70,85,100/-	4,25,10,600
Total Hiring Charges for 6Nos. of Bulldozers D80 equivalent dozing capacity for a period of 3300 hours (Incl 18% GST)					4,25,10,600/-

மேலே தெரிவிக்கப்பட்ட புல்டோசர் உபகரணமானது வெளிச்சந்தையில் அதிக இடங்களில் பயன்பாடு இல்லாத காரணத்தினால் ஒரு சில தனியார் நிறுவனங்கள் மட்டும் ஓரிரு உபகரணத்தை சொந்தமாக வைத்துள்ளனர். இதனால், ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே ஒப்பம் கோருவதனால் அதிக அளவில் ஒப்பந்ததாரர்கள் ஒப்பத்தில் பங்கேற்க வழிவகை செய்வதோடு ஒரே ஒப்பந்ததாரரை பணியமர்த்துவதால் 6 உபகரணங்களையும் பணி அமர்த்துவதில் ஏற்படும் சுணக்கத்தினை தவிர்க்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு, தேவைப்படுகின்ற 6 புல்டோசர் உபகரணங்களை ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே கீழ்க்கண்டவாறு ஒப்பம் கோரி பணிகளை மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

Sl. No	**Equipment details**	**File No.**	**Qty**	**Total Hire Charges for 6 dozers for a period of 3300 hours (Incl 18% GST)**
1	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalentA12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-11 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-1	1 No	70,85,100/-
2	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-12 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-2	1 No	70,85,100/-
3	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-14 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-3	1 No	70,85,100/-

4	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalentA12 Model) for a period of 1 year (**3300 hours)** for night shift for Zone-11 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-4	1 No	70,85,100/-
5	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalentA12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-1 2point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-5	1 No	70,85,100/-
6	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalentA12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-14point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-6	1 No	70,85,100/-

உபகரணங்களின் பணி திறனை மண்டலம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் பொறியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட வேண்டும். மேலும், பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி பெறப்படும் பட்டியை இயந்திர பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் தீர்வு செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டின் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் *40-41-10* மற்றும் கணக்கு குறியீட்டு எண்: *230-800- 400* என்ற தலைப்பின் கீழ் கூடுதல் நிதி பெற்று *2022-2023* மற்றும் *2023 - 2024* ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் *9* முதல் *15* வரையிலான மண்டலங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படும் குப்பைகளை சமன் செய்ய *6* எண்ணிக்கையிலான *(D80 A12* அல்லது அதற்கு இணையான திறன் கொண்ட உபகரணம்) புல்டோசர் உபகரணங்களை ஓராண்டு காலத்திற்கு ஒரு உபகரணத்திற்கு 3300 மணி நேரத்திற்கு என நிர்ணயித்து 6 சிப்பங்களாக ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட தோராய மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.4,25,10,600/- *(GST* சேர்த்து) (ரூபாய் நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சத்து பத்தாயிரத்து அறுநூறு மட்டும்) ஒவ்வொரு சிப்பத்திற்கும் ரூ.70,85,100/- (ரூபாய் எழுபது இலட்சத்து எண்பத்தைந்தாயிரத்து நூறு மட்டும்)க்கு நிர்வாக அனுமதி வேண்டியும்,

Sl. No	**Equipment details**	**File No.**	**Qty**	**Total Hire Charges for 6 dozers for a period of 3300 hours (Incl 18% GST)**
	1	**2**	**3**	**4**
1	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year 3300 **hours**) for day shift for Zone-11 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-1	1 No	70,85,100/-
2	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-12 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-2	1 No	70,85,100/-
3	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for day shift for Zone-14 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-3	1 No	70,85,100/-

4	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours)** for night shift for Zone-11 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-4	1 No	70,85,100/-
5	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-12 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-5	1 No	70,85,100/-
6	Hiring of 1 no. of Bulldozer (D80 or equivalent A12 Model) for a period of 1 year (**3300 hours**) for night shift for Zone-14 point.	M.E.D.C.No.M1/ 2617 /2022 Package-6	1 No	70,85,100/-
மொத்தம்			6 No's	4,25,10,600/-

2. இனம்-1 ஏற்பின், தேவைப்படும் 6 புல்டோசர் உபகரணங்களை மேற்கண்ட அட்டவணையின்படி ஒவ்வொரு உபகரணத்திற்கும் தனித்தனியே ஒப்பம் கோரி தகுதி வாய்ந்த தனியார் நிறுவனம் மூலம் வாடகை ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொள்ள அனுமதி வேண்டியும்,
3. இதற்கான பட்டியை பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் பணியமர்த்தப்பட்ட அலுவலர்கள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை தலைமையிடத்தில் உள்ள உதவி செயற்பொறியாளர் மற்றும் செயற்பொறியாளர் அவர்களின் பரிந்துரையின்படி இயந்திரப் பொறியியல் துறை தலைமையிடத்தின் மூலம் பட்டித் தொகையினை தீர்வு செய்யவும்,
4. இதற்கான செலவினத்தினை இயந்திர பொறியியல் துறை தலைமையிடம் கட்டுப்பாட்டில் இயங்கும் ஆய்வு வாகன பிரிவு குறியீட்டு எண் 40-41-10 மற்றும் கணக்கு குறியீட்டு எண்: 230-800- 400 என்ற தலைப்பின் கீழ் – 2022-2023 மற்றும் 2023-2024 ஆம் ஆண்டுகளுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.07/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.07/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/015/2023

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:047/2023 **பொருள் எண்.47**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய வாகன பணிமனை - இரண்டாம் நிலை குப்பைகள், மண்டலம்-6 புளியந்தோப்பு குப்பை மாற்று வளாகத்திலிருந்து (TPF) கொடுங்கையூர் குப்பை தளத்திற்கு கொண்டு செல்வது - ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர்) வாடகைக்கு அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வாகன பணிமனை, மண்டலம்- 6க்கு உட்பட்ட தெருக்களில் இருந்து குப்பைகளை முதன்மையாக சேகரித்து, கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் கொண்டு புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் (TPF) கொட்டப்படுகின்றது. இதன் இலக்கு 350 மெட்ரிக்டன் ஆகும். அதில் 320 மெட்ரிக்டன் குப்பைகள் மற்றும் 20 மெட்ரிக்டன் நெகிழி கழிவாகவும் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் புளிந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படுகிறது. குப்பைமாற்று வளாகத்தில் கொட்டப்படும் இந்த குப்பைகள் டாரஸ் மற்றும் டிப்பர் கனரக வாகனங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகின்றது. மேலும் குப்பை மாற்று வளாகத்திலிருந்து டாரஸ் மற்றும் டிப்பர் வாகனங்களில் குப்பைகளை ஏற்றுவதற்கும், குப்பைகளை சேர்த்து வைப்பதற்கும் ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மண்டலம் 6 லாரி நிலையத்தில் 4 எண்ணிக்கையிலான டாரஸ் வாகனங்களை கொண்டு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு மூன்று வேளைகள் இயக்கப்பட்டு வந்தது. இவ்வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், மேலும் 15 இலட்சம் கி.மீ. தூரத்தை கடந்துவிட்டதாலும் பராமரிக்க உகந்ததாக இல்லாததாலும் தமிழ்நாடு அரசு உள்துறை (போக்குவரத்து-E), வெளியிட்டுள்ள அரசாணை நிலை எண். 2275 மற்றும் நாள்.10.10.1990ன்படி தற்போது நிறுத்தப்பட்டு விட்டன. இதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	மண்டலம்	வாகன எண்	வாங்கிய வருடம்	வாகனத்தின் வயது	கொள்முதல் செலவு	இதுவரை செலவு	இதுவரை கிலோமீட்டர் ஓடியது
1	6	TN04 AD 3314	24-Apr-09	13 Years 2 months	2017999	2952847	3,51,262
2	6	TN22 CV 4844	01-Sep-11	10 Years 10 months	4533998	2716006	2,97,841
3	6	TN04 AD 3306	24-Apr-09	13 Years 2 months	2047999	3483759	3,49,432
4	6	TN22 BR 9031	18-Mar-11	10 Years 7 months	1851475	3885464	2,83,385

தமிழ்நாடு அரசு உள்துறை (போக்குவரத்து-*E*), வெளியிட்டுள்ள அரசாணை நிலை எண். 2275 மற்றும் நாள்.10.10.1990ன்படி, அரசுத் துறைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் வயது, வாகனம் ஓடும் கிலோமீட்டர்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சான்றுகளின் கீழ் லாரி போன்ற டீசல் வாகனங்கள் 10 ஆண்டுகள் அல்லது 2.5 லட்சம் கிலோ மீட்டர்கள் நிறைவடைந்து இருந்தால் (சாதாரண சாலை நிலைகளின் ஓட்டம்) அவ்வாகனங்களை கழிவு செய்யலாம் *(Condemnation)* என்று 10.10.1990 நாளிட்ட அரசாணை நிலை எண். 2275ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட வாகனங்கள் குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சரியான சாலை மற்றும் வடிகால் அமைப்புகள் சீராக இல்லாத நிலையில் இயங்குவதால் வாகனங்களின் டயர்கள் மிகுந்த தேய்மானத்திற்கு உள்ளாகிறது. மேலும், மழைக்காலங்களில் வாகனங்களின் கியர்பாக்ஸ், கிளட்ச் அசெம்பிளி, *PTO* பம்ப், சஸ்பென்ஷன் அசெம்பிளிகள் போன்றவை விரைவில் பழுதடைகின்றது. இதன் காரணமாக,

மேற்கண்ட வாகனங்களின் பழுது மற்றும் பராமரிப்புக்கான செலவினங்கள் அதிகம் ஏற்படுகின்றது.

தற்போது அனைத்து வாகனங்களும் அவற்றின் அதிகபட்ச வயதைக் கடந்து, 2.5 லட்சம் கி.மீ.க்கு மேல் ஓடி அடிக்கடி பழுது ஏற்படுத்தியது. மேலும், அனைத்து வாகனங்களும் வாங்கிய செலவை விட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவு அதிகமாக செய்யப்பட்டுள்ளது. மேலும் குப்பை மாற்று வளாகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி போன்ற உபகரணங்களும் 10 வருடங்களைக் கடந்து பணி செய்து கொண்டிருப்பதால் அவைகளும் அடிக்கடி பழுதடைந்து விடுவதால் அவற்றை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு அதிகப்படியான செலவீனங்கள் ஏற்படுகிறது. இவ்வாறு அடிக்கடி பழுதடைவதால் குப்பைகள் அதிகம் தேக்கமடைந்து சுற்று சூழல் மாசு ஏற்படுகிறது.

மேற்கூறிய நிகழ்வுகளினால், மண்டலம் 6ன் குப்பை மாற்று வளாகத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை பழைய வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சரிவர கொண்டு செல்ல முடியவில்லை, இதன் காரணமாக குப்பை மாற்று வளாகத்தில் பெருமளவு குப்பை தேங்கிவிடுகின்றது. அதனால் சுற்றுச்சூழல் பாதித்து அருகில் உள்ள பொதுமக்கள் பாதிக்கபடுகின்றனர். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க, மாநகராட்சி புதிய டாரஸ் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்ய வேண்டும், இது மாநகராட்சிக்கு பெரும் செலவீனத்தை ஏற்படுத்தும் அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	வாகனம் / உபகரணங்கள் வகை	தயாரிப்பு	தேவையான எண்.	தற்போதைய சந்தை விலை சரக்கு மற்றும் சேவை வரி உட்பட	மொத்த செலவு
1	Double Axle HMV Taurus	Ashok Leyland	5	Rs. 45,60,000	Rs. 2,28,00,000/-
2	Hydraulic Excavator	BEML	1	Rs. 71,40,000/-	Rs. 71,40,000/-
3	Front End Loader with back hoe 3DX plus	JCB	1	Rs. 34,00,000/-	Rs. 34,00,000/-
				Grand Total	Rs. 3,33,40,000/-

எனவே, இப்பணிக்கு ஏற்படும் செலவீனங்கள் விரிவாக கணக்கிடப்பட்டது. அதில் ஒரு வருட காலத்திற்கு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பைகளை எடுத்து செல்ல ஒரு மெட்ரிக் டன் எடைக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஆகும் தோராயமான இயக்கச் செலவு ரூ.332.64/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக). ஆனால் 2021 ஆம் வருட பருவகால பேரிடர் காலத்தில் இவ்வாறு பெருமளவு தேங்கிய குப்பையை அகற்ற தனியாருக்கு வாடகை முறையில் டிப்பர் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 175/- மெட்ரிக்டன் (உபகரணங்கள் இல்லாமல்) ஆகும். மேலும், ஒரு எக்ஸ்கவேட்டர் வாகனத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 11000/- மற்றும் முன்பளு தூக்கி இயந்திரத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 6000/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) என்ற முறையில் கணக்கிடும்போது குப்பையை அகற்ற ஒரு மெட்ரிக்டன் ரூ. 255.68/- (அல்லது) 256/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) மட்டுமே ஆகும். இந்த விலை அன்றைய எரிபொருள் விலையில் கணக்கீடு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் மாநகராட்சி சேமிக்கும் தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது

மண்டலம் 6 மூலம் ஆண்டுக்கு மொத்த குப்பை உற்பத்தி (320 மெட்ரிக்டன் /day)	320 MT Per day x 365 days = 116800 MT
ஒரு மெட்ரிக்டன் குப்பையை எடுப்பதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் செலவு	Rs. 332.64/- + Rs.59.87 (GST18%) =Rs.392.51/- (Per MT)

ஒரு வருடத்திற்கான மொத்த செலவு	Rs.392.51/- (per MT) x 320 MT Per day x 365 days = **Rs. 4,58,45,168/-**
ஒரு மெட்ரிக்டன் குப்பையை எடுப்பதற்கு தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அகற்ற ஏற்படும் செலவு	Rs. 256/- + Rs.46.08 (GST18%) =Rs.302.08/- (Per MT)
தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் ஒரு வருடத்திற்கு ஏற்படும் மொத்த செலவு	Rs.302.08/- (per MT) x 320 MT Per day x 365 days = Rs**. 3,52,82,944/-** (Incl. GST 18%)
ஆண்டுக்கு மொத்த சேமிப்பு	Rs. 4,58,45,168 - Rs. 3,52,82,944 = Rs. 1,05,62,224/-
சேமிப்பு சதவீதம்	23 %

மேற்கூறிய சான்றுகளை கருத்தில் கொண்டு, மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றுவதற்கு ஆகும் செலவு, தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை எடுக்க ஏற்படும் செலவை விட 23% அதிகமாகும். தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது மிகவும் சிக்கனமானது என்பதையும், கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்துவது மட்டுமின்றி, குப்பைமாற்று வளாகத்தில் எந்தத் தேக்கமும் இல்லாமல் குப்பைகளை அகற்ற முடியும் என்பதையும் மேற்கண்ட கணக்கீடுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. எரிபொருள் *(Diesel)* மற்றும் மசகு எண்ணெய் *(Oil)* செலவு, வாகன உதிரி பாகங்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றில் ஏற்படும் செலவீனத்தில் சேமிக்கவும் அதன்பின் குப்பை மாற்று வளாகத்தில் குப்பைகள் தேங்காமல் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் முடியும் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டு சோதனை அடிப்படையில், தனியார் நிறுவனத்திற்கு 14.11.2022 முதல் 44 நாட்களுக்கு மண்டலம் - 8 க்கு பணி ஆணை வழங்கப்பட்டு கண்காணித்ததில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது, எனவே, இந்நிலையை அடுத்து வரும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்கலாம் என கருதப்படுகிறது

மண்டலம்-6 குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கிடங்கிற்கு மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் இயக்க தலா ஒரு மெட்ரிக்டன் ரூ.302.08/- வீதம் ஒரு வருடத்திற்கு {302.08 x 116800 மெட்ரிக்டன் = ரூ. 3,52,82,944/- (18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்தி இராண்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) ஆகும்.

எனவே, மேற்கண்ட செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-80-04-00 என்னும் தலைப்பில் மேற்கொள்ளலாம்.

எனவே,

1. மண்டலம்-6 குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கிடங்கிற்கு குப்பையை மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் அமர்த்தி தலா ஒரு மெட்ரிக் டன்னிற்கு ரூ. 302.08/- வீதம் ஒரு நாளைக்கு 320 மெட்ரிக்டன் என்ற அளவில் ஒரு வருடத்திற்கு 116800 மெட்ரிக்டன் குப்பையை அகற்ற ரூ.3,52,82,944/- (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) செலவீனத்தில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரை மின்னணு ஒப்பம் கோரி நியமித்து பணி மேற்கொள்ளவும்,

2. இதற்கான செலவீனம் ரூ. 3,52,82,944/- (ரூபாய் மூன்று கோடியே ஐம்பத்து இரண்டு இலட்சத்து எண்பத்தி இரண்டாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்தி நான்கு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) இயந்திர பொறியியல் துறையின் 2022-23 ஆம் நிதி ஆண்டிற்கான, ஆய்வுவாகனப் பணிமனை (40-41-10) கணக்கு குறியீட்டு எண் 230-80-04-00 Hire Charge என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

3. இச்செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண்.40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-80-04-00 என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.024/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.017/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ம.செ.ப.ந.க. எண். சி1/1330/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:048/2023 **பொருள் எண்.48**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மத்திய வாகன பணிமனை - இரண்டாம் நிலை குப்பைகள், மண்டலம்-8 புளியந்தோப்பு குப்பை மாற்று வளாகத்திலிருந்து (TPF) கொடுங்கையூர் குப்பை தளத்திற்கு கொண்டு செல்வது - ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர்) வாடகைக்கு அமர்த்த தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை, மத்திய வாகன பணிமனை, மண்டலம்- 8க்கு உட்பட்ட தெருக்களில் இருந்து குப்பைகளை முதன்மையாக சேகரித்து, கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் கொண்டு புளியந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் (TPF) கொட்டப்படுகின்றது. இதன் இலக்கு 440 மெட்ரிக்டன் ஆகும். அதில் 420 மெட்ரிக்டன் குப்பைகள் மற்றும் 20 மெட்ரிக்டன் நெகிழி கழிவாகவும் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் புளிந்தோப்பு குப்பை மாற்று நிலையத்தில் கொட்டப்படுகிறது. குப்பைமாற்று வளாகத்தில் கொட்டப்படும் இந்த குப்பைகள் டாரஸ் மற்றும் டிப்பர் கனரக வாகனங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்படுகின்றது. மேலும் குப்பை மாற்று வளாகத்திலிருந்து டாரஸ் மற்றும் டிப்பர் வாகனங்களில் குப்பைகளை ஏற்றுவதற்கும், குப்பைகளை சேர்த்து வைப்பதற்கும் ஹைட்ராலிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

மண்டலம் 8 லாரி நிலையத்தில் 5 எண்ணிக்கையிலான டாரஸ் வாகனங்களை கொண்டு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு மூன்று வேளைகள் இயக்கப்பட்டு வந்தது. இவ்வாகனங்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாகவும், மேலும் 2.5 இலட்சம் கி.மீ. தூரத்தை கடந்துவிட்டதாலும் பராமரிக்க உகந்ததாக இல்லாததாலும் தமிழ்நாடு அரசு உள்துறை (போக்குவரத்து-E), வெளியிட்டுள்ள அரசாணை நிலை எண். 2275 மற்றும் நாள். 10.10.1990ன்படி தற்போது நிறுத்தப்பட்டு விட்டன. இதன் விவரங்கள் கீழே உள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	மண்டலம்	வாகன எண்	வாங்கிய வருடம்	வாகனத்தின் வயது	கொள்முதல் செலவு	இதுவரை செலவு	இதுவரை கிலோமீட்டர் ஓடியது
1	8	TN 22 BR 8957	18-Mar-12	10 Years 8 months	1851475	3706519	272632
2	8	TN 22 CV 4875	8-Feb-12	10 Years 9 months	2266999	4232341	278085
3	8	TN 22 CV 4871	8-Jan-12	10 Years 10 months	2266999	3124592	286295
4	8	TN 22 CV 4815	1-Sep-11	11 Years 1 month	2266999	1866366	297412
5	8	TN 22 CV 4860	8-Feb-12	10 Years 9 months	2266999	3846828	286112

தமிழ்நாடு அரசு உள்துறை (போக்குவரத்து-E), வெளியிட்டுள்ள அரசாணையின்படி அரசுத் துறைகளுக்குச் சொந்தமான மோட்டார் வாகனங்கள் வயது, வாகனம் ஓடும் கிலோமீட்டர்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு சான்றுகளின் கீழ் லாரி போன்ற டீசல் வாகனங்கள் 10 ஆண்டுகள் அல்லது 2.5 லட்சம் கிலோமீட்டர்கள் நிறைவடைந்து இருந்தால் (சாதாரண சாலை நிலைகளின் ஓட்டம்) அவ்வாகனங்களை கழிவு செய்யலாம் (Condemnation) என்று 10.10.1990 நாளிட்ட அரசாணை நிலை எண். 2275ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்குறிப்பிட்ட வாகனங்கள் குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சரியான சாலை மற்றும் வடிகால் அமைப்புகள் சீராக இல்லாத நிலையில் இயங்குவதால் வாகனங்களின் டயர்கள் மிகுந்த தேய்மானத்திற்கு உள்ளாகிறது. மேலும், மழைக்காலங்களில் வாகனங்களின் கியர்பாக்ஸ், கிளட்ச் அசெம்பிளி, PTO பம்ப்,

சஸ்பென்ஷன் அசெம்பிளிகள் போன்றவை விரைவில் பழுதடைகின்றது. இதன் காரணமாக, மேற்கண்ட வாகனங்களின் பழுது மற்றும் பராமரிப்புக்கான செலவினங்கள் அதிகம் ஏற்படுகின்றது.

தற்போது அனைத்து வாகனங்களும் அவற்றின் அதிகபட்ச வயதைக் கடந்து, 2.5 லட்சம் கி.மீ.க்கு மேல் ஓடி அடிக்கடி பழுது ஏற்படுத்தியது. மேலும் அனைத்து வாகனங்களும் வாங்கிய செலவை விட பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு செலவு அதிகமாக செய்யப்பட்டுள்ளது. மேலும் குப்பை மாற்று வளாகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி போன்ற உபகரணங்களும் 10 வருடங்களைக் கடந்து பணி செய்து கொண்டிருப்பதால் அவைகளும் அடிக்கடி பழுதடைந்துவிடுவதால் அவற்றை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு அதிகப்படியான செலவீனங்கள் ஏற்படுகிறது.

மேற்கூறிய நிகழ்வுகளினால், மண்டலம் 8ன் குப்பை மாற்று வளாகத்தில் சேகரிக்கப்பட்ட குப்பைகளை பழைய வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொண்டு கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு சரிவர கொண்டு செல்ல முடியவில்லை, இதன் காரணமாக குப்பை மாற்று வளாகத்தில் பெருமளவு குப்பை தேங்கிவிடுகின்றது. அதனால் சுற்றுச்சூழல் பாதித்து அருகில் உள்ள பொதுமக்கள் பாதிக்கபடுகின்றனர். இந்தச் சூழ்நிலையை சமாளிக்க, மாநகராட்சி புதிய டாரஸ் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை கொள்முதல் செய்ய வேண்டும், இது மாநகராட்சிக்கு பெரும் செலவீனத்தை ஏற்படுத்தும் அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

வரிசை எண்	வாகனம் / உபகரணங்கள் வகை	தயாரிப்பு	தேவையான எண்.	தற்போதைய சந்தை விலை சரக்கு மற்றும் சேவை வரி உட்பட	மொத்த செலவு
1	Double Axle HMV Taurus	Ashok Leyland	5	Rs. 45,60,000	Rs.2,28,00,000/-
2	Hydraulic Excavator	BEML	1	Rs. 71,40,000/-	Rs. 71,40,000/-
3	Front End Loader with back hoe 3DX plus	JCB	1	Rs. 34,00,000/-	Rs. 34,00,000/-
				Grand Total	**Rs.3,33,40,000/-**

எனவே, இப்பணிக்கு ஏற்படும் செலவீனங்கள் விரிவாக கணக்கிடப்பட்டது. அதில் ஒரு வருட காலத்திற்கு குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்திற்கு குப்பைகளை எடுத்து செல்ல ஒரு மெட்ரிக் டன் எடைக்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களுக்கு பெருநகர மாநகராட்சிக்கு ஆகும் தோராயமான இயக்கச் செலவு ரூ. *323.15/-* (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) (கணக்கீடு விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது). ஆனால் கடந்த வருட பருவகால பேரிடர் காலத்தில் இவ்வாறு பெருமளவு தேங்கிய குப்பையை அகற்ற தனியாருக்கு வாடகை முறையில் டிப்பர் வாகனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. *175/-/* மெட்ரிக்டன் (உபகரணங்கள் இல்லாமல்) ஆகும். மேலும், ஒரு எக்ஸ்கவேட்டர் வாகனத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 11000/- மற்றும் முன்பளு தூக்கி இயந்திரத்திற்கு ஒரு ஷிப்டுக்கு (8 மணி நேரம்) ரூ. 6000/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) என்ற முறையில் கணக்கிடும்போது குப்பையை அகற்ற ஒரு மெட்ரிக்டன் ரூ. *255.68/-* (அல்லது) 256/- (சரக்கு மற்றும் சேவை வரி நீங்கலாக) மட்டுமே ஆகும். இந்த விலை அன்றைய எரிபொருள் விலையில் கணக்கீட்டு செய்யப்பட்டது.

இந்நிலையில், ஒரு வருடத்திற்கு வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பதன் மூலம் மாநகராட்சி சேமிக்கும் தொகை பின்வருமாறு கணக்கிடப்பட்டுள்ளது

மண்டலம் *8* மூலம் ஆண்டுக்கு மொத்த குப்பை உற்பத்தி (420 மெட்ரிக்டன் */day)*	420MT Per day x 365 days = 153300 MT
ஒரு மெட்ரிக்டன் குப்பையை எடுப்பதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் செலவு	Rs. 323.15/- + Rs.58.16 (GST18%) =Rs.381.31/- (Per MT)
ஒரு வருடத்திற்கான மொத்த செலவு	Rs.381.31/- (per MT) x 420 MT Per day x 365 days = **Rs. 5,84,54,823/-**

ஒரு மெட்ரிக்டன் குப்பையை எடுப்பதற்கு தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி அகற்ற ஏற்படும் செலவு	Rs. 256/- + Rs.46.08 (GST18%) =Rs.302.08/- (Per MT)
தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு அமர்த்துவதன் மூலம் ஒரு வருடத்திற்கு ஏற்படும் மொத்த செலவு	Rs.302.08/- (per MT) x 420 MT Per day x 365 days = = **Rs.4,63,08,864/-** (Incl. GST 18%)
ஆண்டுக்கு மொத்த சேமிப்பு	Rs. 5,84,54,823 - Rs. 4,63,08,864 = Rs. 1,21,45,959/-
சேமிப்பு சதவீதம்	20.78 %

மேற்கூறிய சான்றுகளை கருத்தில் கொண்டு, மாநகராட்சி வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றுவதற்கு ஆகும் செலவு, தனியார் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தி குப்பைகளை எடுக்க ஏற்படும் செலவை விட *20.78%* அதிகமாகும். தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை வாடகைக்கு எடுப்பது மிகவும் சிக்கனமானது என்பதையும், கணிசமான அளவு பணத்தை மிச்சப்படுத்துவது மட்டுமின்றி, குப்பைமாற்று வளாகத்தில் எந்தத் தேக்கமும் இல்லாமல் குப்பைகளை அகற்ற முடியும் என்பதையும் மேற்கண்ட கணக்கீடுகள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. எரிபொருள் *(Diesel)* மற்றும் மசகு எண்ணெய் *(Oil)* செலவு, வாகன உதிரி பாகங்கள், பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றில் ஏற்படும் செலவீனத்தில் சேமிக்கவும் அதன்பின் குப்பை மாற்று வளாகத்தில் குப்பைகள் தேங்காமல் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்கவும் முடியும் எனவும் கருத்து தெரிவிக்கப்பட்டு சோதனை அடிப்படையில், தனியார் நிறுவனத்திற்கு 14.11.2022 முதல் 44 நாட்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு கண்காணித்ததில் நல்ல முன்னேற்றம் காணப்பட்டது. எனவே, இந்நிலையை அடுத்து வரும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்கலாம் என கருதப்படுகிறது.

மண்டலம்-8 குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கிடங்கிற்கு மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் இயக்க தலா ஒரு மெட்ரிக்டன் ரூ. 302.08/- வீதம் ஒரு வருடத்திற்கு {302.08 *X* 153300 மெட்ரிக்டன் = ரூ.4,63,08,864/- *(*18% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட*)* (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு மட்டும்) ஆகும்.

எனவே,

1. மண்டலம்-8 குப்பை மாற்று வளாகத்திலிருந்து கொடுங்கையூர் குப்பை கிடங்கிற்கு குப்பையை மாற்ற தனியார் வாகனங்கள் மற்றும் உபகரணங்களை (எக்ஸ்கவேட்டர் மற்றும் முன்பளு தூக்கி) வாடகை முறையில் அமர்த்தி தலா ஒரு மெட்ரிக்டன்னிற்கு ரூ. 302.08/- வீதம் ஒரு நாளைக்கு 420 மெட்ரிக்டன் என்ற அளவில் ஒரு வருடத்திற்கு 153300 மெட்ரிக்டன் குப்பையை அகற்ற ரூ. 4,63,08,864/- (சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு மட்டும்) செலவீனத்தில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரை மின்னணு ஒப்பம் கோரி நியமித்து பணி மேற்கொள்ளவும்,
2. இதற்கான செலவீனம் ரூ. 4,63,08,864/- ஐ (ரூபாய் நான்கு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து எட்டாயிரத்து எண்ணூற்று அறுபத்து நான்கு மட்டும்) (அனைத்து வரிகள் உட்பட) இயந்திர பொறியியல் துறையின் *2022*-23 ஆம் நிதி ஆண்டிற்கான, ஆய்வுவாகனப் பணிமனை (40-*41*-10) கணக்கு குறியீட்டு எண் *230-80-04-00 Hire Charge* என்னும் தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

3. இச்செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் ஆய்வு வாகன பணிமனை பிரிவு குறியீட்டு எண் .40-41-10 மற்றும் கணக்கு தலைப்பு எண் 230-80-04-00 என்னும் தலைப்பின்கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.09/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.010/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து ந.க.எண் எம்1/ 0149 /2023

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:049/2023 **பொருள் எண்.49**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - மண்டலம் - 4, 5,6,7 மற்றும் 8 ல் தூய்மை பணிக்கென இயக்கப்படும் Battery Operated Vehicles வாகனங்களின் வருகையினை பொதுமக்கள் அறியும் வண்ணம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்புகளை அறிவிப்பதற்கும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களில் ஒலிபெருக்கிகள் 1366 எண்ணிக்கையில் (Public Addressing System) கொள்முதல் செய்யவும் மற்றும் அதனை வாகனங்களில் பொருத்திடவும் மின்னணு ஒப்பம் கோர நிர்வாக அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறை மூலம் தூய்மை இந்தியா திட்ட நிதி மற்றும் தூய்மை இந்தியா திட்ட சேமிப்பு நிதியின் கீழ் வீடுவீடாக சென்று தரம் பிரிக்கப்பட்ட குப்பை சேகரிக்கும் பணிக்காக பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் 2107 எண்ணிக்கையில் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாகனங்கள் அனைத்திலும் பொதுமக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பாடல்கள் ஒலிபரப்பிட ஒலிபெருக்கிகள் பொருத்திட முதன்மை செயலர் / ஆணையர் அவர்களால் 30.12.2022 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியால் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்படும் மண்டலங்களான மண்டலம்- 4, 5, 6, 7 மற்றும் 8 ஆகியவற்றில் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்படும் 2107 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களில் 1366 எண்ணிக்கையிலான வாகனங்களில் ஒலிபெருக்கிகள் புதியதாக மற்றும் பழுதடைந்துள்ளவற்றிற்கு மாற்றாக புதிய ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட வேண்டும் அதன் விவரம் பின்வருமாறு

வ.எண்	மண்டலம்	ஒலிபெருக்கி பொருத்தப்பட வேண்டிய பேட்டரி வாகனங்களின் எண்ணிக்கை	குறிப்பு
1	4	435	
2	5	424	
3	6	243	
4	7	64	
5	8	200	
மொத்தம்		**1366**	

மேற்கூறப்பட்ட Battery Operated வாகனங்கள் துப்புரவு பணிகளில் மூன்று சக்கர மிதிவண்டிகளுக்கு மாற்றாக வீடு வீடாக சென்று குப்பை சேகரிக்கும் மற்றும் குப்பை பிரித்தெடுக்கும் பணிகளுக்கென பயன்பாட்டில் உள்ளது. மேற்கூறப்பட்ட Battery Operated வாகனங்கள் துப்புரவு பணிகளில் முக்கிய பங்காற்றுவதோடு திடக்கழிவு மேலாண்மை பணிகளில் பெரிதும் உதவியாக உள்ளன. இவ்வகை வாகனங்களை துப்புரவு பணிக்காக இயக்கும் தருணத்தில் பொது மக்களிடையே மாநகர தூய்மை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திடவும் மற்றும் மாநகராட்சி சம்மந்தப்பட்ட செய்திகளை மக்களுக்கு கொண்டு செல்லவும் இந்த வாகனங்களில் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டு ஒலிபரப்பப்பட்டு வரப்படுகிறது. இந்நிலையில் கடந்த பருவ மழைக்காலத்தில் மழைநீரால் ஒலிபெருக்கிகள் மீண்டும் புதுப்பிக்க இயலாத நிலையில் பழுதடைந்துள்ளன. இந்த பழுதடைந்துள்ள ஒலிபெருக்கிகளுக்கு மாற்றாகவும் மற்றும் தற்பொழுது வாகனத்தில் பொருத்தப்பட்டுள்ள குறைந்த ஒலிபரப்பும் திறனுடைய (Handheld Megaphone) ஒலிபெருக்கிகளுக்கு மாற்றாகவும் ஒலிபெருக்கி தயாரிப்பில் முன்னணி நிறுவனத்திடமிருந்து புதிய ஒலிபெருக்கி (Amplifier, Speaker, Memory card) கொள்முதல்

செய்து மாநகராட்சி பேட்டரி மூலம் இயங்கும் வாகனத்தில் பொருத்திட வேண்டியுள்ளது. இதனால் மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ல் தூய்மை பணிக்கு பயன்படுத்தி வரப்படும் பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களின் பயன்பாட்டினை மேம்படுத்தலாம்.

அதன்படி ஒலிபெருக்கிகளை தயாரிக்கும் முன்னணி நிறுவனத்தாரிடமிருந்து ஒலிபெருக்கிகள் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மதிப்பீடு தற்போதைய சந்தை விலையின் அடிப்படையில் கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

Sl. No	Description	Specification	No of vehicles	Rate (Per Set) Excl.GST	Total Amount per unit (Incl.GST)
1	Purchase of Public Addressing System with Amplifier & Speaker	Amplifier PA-200 DS Horn Speaker AHC-15	1366 Nos.	Rs.5170/-	Rs.6100/-
		Other Accessories (Memory card, cable, switch)		Rs.845/-	Rs. 997/-
		Installation Charges per unit		Rs.755/-	Rs.891/-
				Total Amount	Rs. 7988/-
Total amount for 1366 unit including installation charges with GST 18%					**Rs.1,09,11,608.00 Say Rs.1.09 Cr.**

மேற்கூறப்பட்டுள்ள விலை விவரப்படி மொத்தம் *1366* எண்ணிக்கைகளில் முன்னணி தயாரிப்பிலான ஒலி பெருக்கிகளை கொள்முதல் செய்ய ஆகும் மொத்த செலவு ரூ.1.09 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சம் மட்டும்) (வரிகள் உட்பட) என கணக்கிடப்பட்டுள்ளது.

இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வுவாகன பணிமனை குறியீட்டு எண். *40- 40 -1*0 கணக்கு குறியீட்டு எண் 230-*20-16-01 - Consumption of Materials* என்ற தலைப்பின் கீழ் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8 ல் முதற்கட்ட தூய்மை பணிக்கென வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தி வரப்படும் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களில் கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள *1366* எண்ணிக்கையிலான வாகனங்களில் ஒலி பெருக்கிகளை கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு ரூ.1.09 கோடி (ரூபாய் ஒரு கோடியே ஒன்பது இலட்சம் மட்டும்) (வரிகள் உட்பட) தோராய செலவினத்தில் மின்னணு ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

வ.எண்	மண்டலம்	ஒலிபெருக்கி பொருத்தப்பட வேண்டிய பேட்டரி வாகனங்களின் எண்ணிக்கை	குறிப்பு
1	*4*	*435*	
2	*5*	*424*	
3	*6*	*243*	
4	*7*	*64*	
5	*8*	*200*	
மொத்தம்		***1366***	

2. இதற்கான செலவீனத்தினை இயந்திர பொறியியல் துறை ஆய்வு வாகன குறியீட்டு எண் 40-40-10 கணக்கு குறியீட்டு எண் 230-20-16-01 Consumption of Materials என்ற தலைப்பின் கீழ் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற்று பணி மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.025/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.018/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

இ.பொ.து.ந.க.எண்.எம்1/2904/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 09.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:050/2023 **பொருள் எண்.50**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திரப் பொறியியல் துறை - மண்டலம் 4, 5, 6, 7, மற்றும் 8 - வீடுவீடாக சென்று தரம் பிரிக்கப்பட்ட குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் 616 மிதி வண்டிகளுக்கு மாற்றாக சிங்கார சென்னை 2.0 நிதியின் கீழ் 350 எண்ணிக்கையில் Lithium Ion Battery மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் - தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.6,90,90,000/- செலவீனத்தில் கொள்முதல் செய்ய அனுமதி மற்றும் ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8ல் மாநகராட்சி பணியாளர்களை கொண்டு தூய்மை பணி மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. இந்த 5 மண்டலங்களிலும் தூய்மை பணியில் முதற்கட்டமாக வீடுவீடாக சென்று குப்பை சேகரிக்கும் பணி மேற்கொள்ள 2107 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் இயந்திர பொறியியல் துறை மூலம் கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை துறையின் பயன்பாட்டில் உள்ளது.

தற்போது பராமரிக்கப்பட்டு வரப்படும் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தினால் மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8ல் தூய்மை பணிக்காக 616 எண்ணிக்கையிலான மிதிவண்டிகள் பயன்படுத்தி வரப்படுகிறது.

தூய்மை பணியில் குப்பை சேகரிக்கும் பணிக்காக மூன்று சக்கர மிதி வண்டிகள் பயன்படுத்துவதால் காலவிரயம் ஏற்படுவதோடு மனித ஆற்றலும் இழக்க நேரிடுகிறது. எனவே, தூய்மை பணியில் பயன்படுத்தி வரப்படும் 616 எண்ணிக்கையிலான மூன்று சக்கர மிதி வண்டிகளுக்கு மாற்றாக 350 எண்ணிக்கையில் பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் கொள்முதல் செய்யலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், கடந்த 2021ஆம் ஆண்டு 1684 எண்ணிக்கையிலான பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் ஒரு வாகனத்தின் விலை ரூ.1,79,800/- *(5% GST* உட்பட) வீதத்தில் கொள்முதல் செய்யப்பட்டு தூய்மை பணியில் ஈடுபடுத்தி வரப்படுகிறது.

பேருராட்சி ஆணையத்தில் இருந்து உள்ளாட்சி அமைப்பு பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யப்படவுள்ள பேட்டரி வாகனங்களுக்கான தொழில் நுட்ப வரையறை மற்றும் மதிப்பீட்டு தொகை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு 19.05.2022 அன்று நடந்த கலந்தாய்வு கூட்டத்தின் வரைவு சுருக்கம் கடிதத்தில் பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் ஒன்றிற்கு பரிந்துரைத்துள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,88,000/- *(GST* தவிர்த்து) ஆகும்.

இதன்படி, 350 எண்ணிக்கையிலான பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் கொள்முதல் செய்வதற்கான மொத்த தொகை ரூ.6,90,90,000/- *(5% GST* உட்பட) என கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

வ. எண்	பணியின் விவரம்	ஒரு வாகனத்திற்கான விலை	ஒரு வாகனத்திற்கான விலை	*350* எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு மொத்த விலை *(GST 5%* சேர்த்து)
1	350 எண்ணிக்கையில் பேட்டரி மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் கொள்முதல் செய்யும் பணி	ரூ.1,88,000/- *(GST* தவிர்த்து)	ரூ.1,97,400/- *(GST 5%* சேர்த்து)	ரூ.6,90,90,000/-

மேலும், முதன்மை செயலர் / ஆணையர் அவர்கள் 17.12.2022 அன்று நடந்த தூய்மை பணி ஆய்வு கூட்டத்தில், தற்போது பயன்படுத்தி வரப்படும் 616 மூன்று சக்கர மிதி வண்டிகளுக்கு மாற்றாக பேட்டரி மூலம் இயங்கும் வாகனங்களை உடனடியாக கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தியுள்ளார்கள்.

மேற்கண்ட வாகனங்களின் தேவையின் அவசர மற்றும் அவசியத்தினை கருத்தில் கொண்டு, மன்றத்தின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பம் கோருவதற்கு ஏற்படும் கால தாமதத்தினை தவிர்த்திட மன்றத்தின் பின்னேற்பு அனுமதியை எதிர்நோக்கி ஒப்பம் கோருவதற்கு முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் ஆணை பெறப்பட வேண்டும்.

மேற்கண்ட செலவீனத்தினை சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ் கூடுதல் நிதி பெற்று மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே,

1. மண்டலம் 4, 5, 6, 7 மற்றும் 8ல் தூய்மை பணிக்காக பயன்படுத்தப்படும் 616 மிதி வண்டிகளுக்கு மாற்றாக பேருராட்சி ஆணையத்தில் இருந்து உள்ளாட்சி அமைப்பு பயன்பாட்டிற்காக கொள்முதல் செய்யபடவுள்ள பேட்டரி வாகனங்களுக்கான தொழில் நுட்ப வரையறை மற்றும் மதிப்பீட்டு தொகை நிர்ணயிக்க அமைக்கப்பட்ட குழு 19.05.2022 அன்று நடந்த கலந்தாய்வு கூட்டத்தின் வரைவு சுருக்கம் கடிதத்தில் பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனம் ஒன்றிற்கு பரிந்துரைத்துள்ள மதிப்பீட்டு தொகை ரூ.1,88,000/- *(GST* தவிர்த்து) வீதம் 350 எண்ணிக்கையில் பேட்டரி *(Lithium Ion Battery)* மூலம் இயங்கும் மூன்று சக்கர வாகனங்கள் தோராய மதிப்பீட்டு தொகை ரூ.6,90,90,000/- (5% *GST* உட்பட) செலவீனத்தில் கொள்முதல் செய்வதற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள ஏற்படும் கால தாமதத்தை தவிர்க்கும் பொருட்டு முதன்மை செயலர் / ஆணையர் அவர்களின் அனுமதி பெற்று ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டியும்,
3. மேற்கண்ட செலவினத்தினை இயந்திர பொறியியல் துறைக்கான 2023 -24 நிதி ஆண்டிற்கான சிங்கார சென்னை 2.0 திட்டத்தில் நிதி பெற்று மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைகுழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.030/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.023/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

செ.ந.சீ.அ.ந.க.எண்.சி1/ 266 /2022.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.12.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:051/2023 **பொருள் எண்.51**

பெருநகர சென்னை மாநகராட்சி - சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை - அடையாறு நதியின் கரையோரத்தில் இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி- ஒப்பந்ததாரர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது - பணியினை முடிக்க 01.04.2022 முதல் 31.03.2023 வரை கால நீட்டிப்பு வழங்க அனுமதி.

அரசாணை (நிலை) எண்.72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.1) துறை நாள்.12.07.2017ல் அடையாறு நதி சீரமைப்பு திட்டம் நிலை-3 க்கு சென்னை நதிகள் சீரமைப்பு பணிகளுக்காக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு ரூ.555.46 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளது- இதில் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்படும் உள்திட்டப் (Sub project) பணிகளுக்கு ரூ.151.03 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் பெரு நகர சென்னை மாநகராட்சி மூலம் அடையாறு நதியின் இரண்டு புறமும் சுமார் 24.67 கி.மீ நீளத்தில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கைகள் எடுத்து இப்பணியினை 9 சிப்பங்களாக பிரித்து உரிய விதிமுறைகளை பின்பற்றி கட்டட துறையின் மூலம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது, இதன் விவரங்கள் கீழ்வருமாறு.

வ.எ	பணியின் பெயர்	ஒப்பந்ததாரரின் பெயர்	ஒப்பந்த தொகை ரூ.	பணி ஆணை நாள்	இதுவரை வழங்கப்பட்ட தொகை ரூ.
1	**க.து.ந.க.எண்.பி1/640/1/2018** அடையாறு கால்வாயில் திரு.வி.க. மேம்பாலம் முதல் கோட்டூர்புரம் மேம்பாலம் வரை 2000 முதல் 4350 மீட்டர் வரை இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். விஜய கௌதம் என்ஜிநீயரிங் ஒர்க்ஸ்	6,65,53,659/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 13,56%	01.08.2018	4,59,34,800/-
2	**க.து.ந.க.எண்.பி1/640/2/2018** அடையாறு கால்வாயில் கோட்டூர்புரம் மேம்பாலம் முதல் மறைமலை அடிகளார் பாலம் வரை 4350 முதல் 5825 மீட்டர் வரை (Reach-1)இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். எஸ். பி. பில்டர்ஸ்	7,48,07,759/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 13,97%	01.08.2018	2,47,68,829/-

3	**க.து.ந.க.எண்.பி1/640/3/2018** அடையாறு கால்வாயில் கோட்டூர்புரம் மேம்பாலம் முதல் மறைமலை அடிகளார் பாலம் வரை 5825 முதல் 7300 மீட்டர் வரை (Reach-2)இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். ஜி. கே. எண்டர்பிரைஸஸ்	7,48,23,963/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 13,99%	01.08.2018	1,21,46,048/-
4	**க.து.ந.க.எண்.பி1/640/4/2018** அடையாறு கால்வாயில் மறைமலை அடிகளார் பாலம் முதல் ஆலந்தூர் பாலம் வரை 7300 முதல் 8200 மீட்டர் வரை இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். எஸ். எம். கே. ண்ட்ராக்ட்டர்ஸ்	4,29,05,881/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 14,17%	01.08.2018	------
5	**க.து.ந.க.எண்.பி1/640/5/2018** அடையாறு கால்வாயில் ஆலந்தூர் பாலம் முதல் ஜாபர்கான் பேட்டை பாலம் வரை 8200 முதல் 9830 மீட்டர் வரை இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். மேனகா அண்ட் கம்பெனி	6,84,90,861/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 14,01%	01.08.2018	2,41,84,651/-
6	**க.து.ந.க.எண்.பி1/640/6/2018** அடையாறு கால்வாயில் ஜாபர்கான் பேட்டை பாலம் முதல் நந்தம்பாக்கம் பாலம் வரை 9830 முதல் 11265 மீட்டர் வரை(Reach 1) இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்டர்க்சர் பிரைவேட் லிமிட்டெட்	7,14,38,816/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 14,01%	01.08.2018	---------
7	**க.து.ந.க.எண்.பி1/640/7/2018** அடையாறு கால்வாயில் ஜாபர்கான் பேட்டை பாலம் முதல் நந்தம்பாக்கம் பாலம் வரை 11265 முதல் 12700 மீட்டர் வரை(Reach 2) இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். டி. எம். சுப்பிரமணியம் அண்ட் கம்பெனி	7,14,26,969/- 2017-18 அலுவலக விலை விகிதத்தை விட (+) 13,99%	01.08.2018	32,53,779/-

8	**க.து.ந.க.எண்.பி1/640/8/2018** அடையாறு கால்வாயில் நந்தம்பாக்கம் பாலம் முதல் ஆர்மி பிரிட்ஜ் cause way வரை 12700 முதல் 14450 மீட்டர் வரை இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்டர்க்சர் பிரைவேட் லிமிட்டெட்	8,56,29,636/- அலுவலக விலைவிகிதம்	01.08.2018	3,55,52,463/-
9	**க.து.ந.க.எண்.பி1/640/9/2018** அடையாறு கால்வாயில் ஆர்மி பிரிட்ஜ் cause way முதல் Airport Runway Bridge வரை 16750 முதல் 14450 மீட்டர் இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி	மெஸர்ஸ். தாமஸ் ஐயாதுரை இன்ப்ராஸ்ட்டர்க்சர் பிரைவேட் லிமிட்டெட்	10,37,81,860/- அலுவலக விலை விகிதம்	01.08.2018	5,53,05,953/-

இதில் அடையாறு ஆற்றின் சுற்று சுவர் அமைக்கும் பணியினை நிறைவேற்ற வேண்டிய பணி தளத்தில், பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால் நீர்வள ஆதார துறையின் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு தான் ஒப்பந்ததாரரால் பணியினை தொடர முடியும். மேலும், இப்பணிக்காக பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டியுள்ளதால் பணிகளை தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இந்த ஒப்பந்ததாரர்களின் பணிக்காலம் 29.02.2020 அன்று முடிவடைந்துள்ளதால் மேலும், பணியினை செயலாக்க மன்றத்தீர்மானம் எண். 712/2021, நாள். 16.09.2021 மன்றத்தீர்மானத்தின்படி 31.03.2022 வரை காலநீட்டிப்பு பெறப்பட்டுள்ளது

நீர்வளத்துறையின் மூலம் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்ட இடங்களில் நிரந்தர தடுப்பு வேலி அமைக்கும் பணி சுமார் 13.15 கி.மீ வரை முடிவடைந்து மீதமுள்ள வெவ்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகளை நீர்வளத்துறையின் மற்றும் வட்டாட்சியர் அலுவலக நில சர்வேயர் மூலம் நதியின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதால் இந்த பணியினை செயலாக்க 31.03.2023 வரை காலநீட்டிப்பு கோரி ஒப்பந்ததாரர்கள் 13.08.2022, 21.09.2022, 23.09.2022 மற்றும் 26.09.2022 ஆகிய நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்கள் .

மேற்சொன்ன பணியினை நிறைவேற்ற வேண்டி பணி தளத்தில், பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால் நீர்வளத்துறையின் மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பிறகு மேலும், வட்டாட்சியர் அலுவலக நில சர்வேயர் மூலம் நதியின் எல்லைகள் நிர்ணயம் செய்யப்பட்ட பிறகே, ஒப்பந்ததாரர்கள் பணியினை செயலாக்க வேண்டிய நிலை உள்ளதாலும் மற்றும் இப்பணிக்காக பல்வேறு இடங்களில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டியுள்ளதாலும் பணிகளை தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு 31.03.2023 வரை கால நீட்டிப்பு வழங்கலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, மேற்படி அடையாறு நதியின் இரண்டு புறங்களிலும் தடுப்பு வேலிகளை அமைக்க அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த பணிக்கு 01.04.2022 முதல் 31.03.2023 வரை கால நீட்டிப்பு வழங்க, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.012/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.012/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

செ.ந.சீ.அ.ந.க.எண்.சி1/ 0494 /2022.

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 31.12.2022 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:052/2023 **பொருள் எண்.52**

பெருநகர சென்னை மாநகராட்சி- மழைநீர் வடிகால் துறை(சென்னை நதிகள் புனரமைப்பு அறக்கட்டளை) - கூவம் நதியின் கரையோரத்தில் இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணி - திருவாளர்கள் R. கிருஷ்ண மூர்த்தி அண்ட் கோ அவர்களுக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது - பணியினை முடிக்க 01.04.2022 முதல் 31.03.2023 வரை கால நீட்டிப்பு வழங்க அனுமதி.

கூவம் நதி சுற்றுச் சூழல் சீரமைப்பு திட்டத்தின் கீழ், கூவம் நதிக்கரையில் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிக்கு அரசாணை(நிலை) எண்.9, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழங்கல்(MC1) துறை, நாள் 13.01.2015ல் சென்னை நதிகள் சீரமைப்பு பணிகளுக்காக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளைக்கு ரூ.45,80,00,000/- கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்துள்ளது-

இந்த திட்டத்தின் கீழ் பெரு நகர சென்னை மாநகராட்சியினால் கூவம் நதியின் இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணிகளை நிறைவேற்ற உரிய விதிமுறைகளை பின்பற்றி கட்டட துறையின் மூலம் திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்களுக்கு ரூ.40,54,55,200/-க்கு 07.10.2015 அன்று பணியாணை வழங்கப்பட்டது-

ஒப்பந்ததாரர் திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் 03.03.2016 அன்று பணியினை துவங்கி செயலாக்கி வந்த நிலையில் இப்பணியினை நிறைவேற்ற வேண்டிய அனேக இடங்களில் ஆக்கிரமிப்புகள் இருந்ததால் பணியினை தொடர்ந்து செய்ய இயலாத நிலை ஏற்பட்டதாலும், ஒவ்வொரு இடத்திலும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பின்னரே பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதாலும், கூவம் நதிக்கரையின் எல்லை பகுதியினை வட்டாட்சியர் அலுவலகம் மூலமாக நில அளவையாளரை கொண்டு எல்லைகளை நிர்ணயம் செய்து பின்னர் பொதுப்பணித்துறையின் மூலம் அந்த எல்லைகளை ஆராய்ந்து ஒப்புதல் அளித்த பின்னர் பணி மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டிருந்ததாலும் பொதுப்பணித்துறையின் மூலம் கூவத்தில் இருபுறமும் பல இடங்களில் வளைவு கரை(Bund) அமைக்கப்படவில்லை என்பதாலும், கரை ஒதுக்கிய பின்னரே நிரந்தர தடுப்பு வேலி அமைக்கும் பணியினை செயலாக்க இயலும் என்ற நிலை இருந்ததாலும், முகப்பேர், கோல்டன் ஜார்ஜ் நகரில் எட்டு வழக்குகள் நிலுவையில் உள்ள காரணத்தால் pile foundation பணிகள் முடிவடைந்து மற்ற பணிகள் நிலுவையில் இருந்தன என்பதாலும், கம்பர் நகர், ஓம் சக்தி நகர் ஆகிய இடங்களில் கரை அமைக்கும் பணியும் நிலுவையில் இருந்தன என்பதாலும், அப்பணி முடிந்தவுடன் சுற்றுசுவர் அமைக்கும் பணி துவங்க உள்ளது என்பதாலும், DPI வளாகம் மற்றும் கிரீம்ஸ் சாலை ஆகிய இடங்களில் பொது பணித்துறையின் மூலம் கரையின் உயரத்தின் அளவினை குறைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்பதாலும், இப்பணி முடிவடைந்தவுடன் சுற்றுச்சுவர் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதாலும், பணி மேற்கொள்ளப்பட வேண்டிய 23.92 கி.மீ. கூவம் நதிக்கரையில் 11 கி.மீ. நீளத்திற்கு பணிகள் நடைபெற்று வருவதாலும், மீதமுள்ள 12.92 கி.மீட்டர் நீளத்திற்கு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு கரை ஒதுக்கிய பின்னரே பணி மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாலும், இப்பணியினை குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க இயலாத நிலை இருந்ததால், சிறப்பு அதிகாரி மன்றத் தீர்மான எண்.660/2020, நாள்.18.09.2020ல் திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்களுக்கு 31.12.2020 வரை மேற்சொன்ன பணிக்கு ஒப்பந்த கால நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் பணியினை செயலாக்கி வந்த நிலையில் மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் 2020 வரையிலும் மற்றும் ஏப்ரல் முதல் மே 2021 வரையிலும், மத்திய மற்றும் மாநில அரசினால் அறிவிக்கப்பட்ட கோவிட் 19 முழு அடைப்பு பணித்தளத்தில் முழுமையாக பணி செயலாக்கப்படுவதற்கு தடையாக இருந்ததாலும்,

இந்த அடைப்பு பின்னர் தளர்த்தப்பட்டாலும், பல்வேறு பயண கட்டுப்பாடுகள் உள்ளூர் மற்றும் வேறு மாநிலத்திலிருந்து பணியாட்கள் மற்றும் தளவாடங்களை தருவிப்பதில் தடைகள் ஏற்பட்டன. இவ்வாறு பொருட்கள் தருவிப்பதில் தடைகள் இருந்ததால், சிமெண்ட், எம் சாண்ட் மற்றும் செங்கல் போன்ற பொருட்களுக்கு பெரிய அளவில் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், இந்நிலையில் ஏற்பட்ட பாதிப்பினால் வடஇந்தியாவிலிருந்து இங்கு வந்து பணிபுரியும் புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் தமிழக மாநிலத்திலிருந்தே தங்களின் சொந்த ஊருக்கு சென்று விட்டனர். இன்றைய நாள் வரையில் 60 சதவிகித தொழிலாளர்கள் மட்டுமே மீண்டும் பணிக்கு வந்துள்ளனர். இதனால் பணியினை செயலாக்க போதுமான அளவிற்கு தொழிலாளர் இன்மையும் தொழில் தெரிந்த திறமையான தொழிலாளர்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டதாலும்,மேலும், நவம்பர் மற்றும் டிசம்பர் 2020ல் தாக்கிய நிவார் புயல், பணியின் முன்னேற்றத்தில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தியது. சாதாரணமாக கட்டுமானப்பணிகளை மழைபெய்யும் போது மேற்கொள்ள இயலாது ஏனென்றால், சிமெண்ட் மழையின் போது தனது வலிமையை இழந்து விடும். மேலும், கூவம் நதியில் பணிதளமானது இறுக்கம் இல்லாத உதிரி மண்ணால் கட்டப்பட்ட கரைகளை கொண்டது என்பதால், மழைகாலத்தில் அது சகதியாக மாறி கரைகளில் எந்த வேலையும் எடுத்து செய்ய உகந்ததாக இருக்காது. ஏனென்றால் அந்த கரைகளின் மீது எந்த வாகனமும் செல்ல இயலாது என்பதாலும், தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தல் காரணமாக சுற்றுச்சுவரில் வர்ணம் பூசினால் அவைகள் தேர்தல் சுவரொட்டிகளால் நாசமடையக்கூடும் என்பதால் சுற்றுச்சுவருக்கு வர்ணம் பூச வேண்டாம் என்று எங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதாலும் இப்பணியினை 31.12.2020க்குள் முடிக்க இயலாத நிலை இருந்ததால் சிறப்பு அதிகாரி மன்றத்தீர்மான 098/2022, நாள்.21.01.2022ல் இந்த பணியினை செயலாக்க 31.03.2022 வரை ஒப்ப கால நீட்டிப்பு வழங்க மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

மேலும், திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் இரண்டாவது ஒப்பகால நீட்டிப்பு அளித்த நிலையில் இப்பணியினை செயலாக்கி வந்த நிலையில் மேலும் மண்டலம்-5 தீவுத்திடல் மற்றும் மண்டலம்-7 தாய் மூகாம்பிகை கல்லூரி பின்புறம் ஆகிய இரண்டு பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு அந்த இடத்தில் பணியினை தொடர அனுமதி அளித்துள்ளதாகவும், மேலும் சுற்றுச்சுவருக்கு வர்ணம் பூசும் பணியை மேற்கொள்ள அறிவுறுத்தலின்படி அதற்கான தீர்வு காணப்பட்டு தாங்கள் வர்ணம் பூசும் பணியினை பல்வேறு இடங்களில் மேற்கொண்டு டாம்ஸ் ரோடு, கொடிமர சாலை மற்றும் சிவாநந்தா சாலை ஆகிய பகுதிகளில் செயலாக்கி முடித்துள்ளோம்.

திருவாளர்கள். R.கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்களுக்கு இது வரையில் ரூ.11.69 கோடி 11 பகுதி பட்டிகளாக வழங்கப்பட்டுள்ளது- மேலும் இந்த ஒப்பந்ததாரரின் பணிக்காலம் *31.03.2022* அன்று முடிவடைந்துள்ளதால் இந்த பணியினை செயலாக்க 31.03.2023 வரை கால நீட்டிப்பு கோரி திருவாளர்கள் R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ 27.08.2022 நாளிட்ட கடிதத்தை அளித்துள்ளார்.

ஒப்பந்ததாரர் திருவளர்கள் R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்கள் தற்சமயம் கூவம் நதியில் நேப்பியர் பாலம் முதல் சேத்துப்பட்டு பாலம் வரையிலான பகுதியில் சுமார் 9.00 கி.மீ. நீளத்திற்கு கட்டுமான பணியினை விரைந்து முடித்து வருகிறார். மேலும், இப்பகுதியில் பல்வேறு இடங்களில் வர்ணம் பூசும் பணி மற்றும் சிங்கார சென்னை 2.0 சின்னம் பதிக்கும் பணி போன்றவற்றையும் முதன்மை செயலர்/ஆணையர் அவர்களின் உத்தரவின்படி மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில் ஒப்பந்ததாரருக்கு கால நீட்டிப்பு வழங்கப்படவில்லையெனில், தற்சமயம் மேற்கொண்டு வரும் பணிக்கான பட்டியல் வழங்கும் நிலையில் ஒப்ப விதிகளின்படி அபராதம் விதிக்க வேண்டிய நிலை எழும். அதன் காரணமாக ஒப்பந்ததாரர் பணியினை தொடராமல் தாமதப்படுத்தினால் அவர் மீது ஒப்ப விதிகளின்படி நடவடிக்கை மேற்கொண்டு மீதமுள்ள பணிகளை வேறு புதிய ஒப்பந்ததாரர் மூலமாக மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படும். இதனால் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு காலதாமதம் ஏற்படுவதுடன் நிதி சுமையும் ஏற்படுவதற்கான

வாய்ப்புள்ளது. ஏனெனில் திருவாளர்கள் R.கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ 2016-2017ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் பணி மேற்கொண்டு வருகிறார். தற்சமயம் புதிய ஒப்பந்தம் கோரி (2020-21ஆம் ஆண்டு விலைப்பட்டியலின்படி) பணி மேற்கொள்ளப்பட்டால் கூடுதலான நிதி தேவைப்படும்.

மேற்கண்ட சூழ்நிலையில் ஒப்பந்ததாரர் தனது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பணியின் தாமததிற்கான காரணங்களை கருத்தில் கொண்டு கூவம் நதியில் இரண்டு புறமும் நிரந்தர தடுப்பு வேலிகள் அமைக்கும் பணியினை நிறைவேற்றி வரும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். R. கிருஷ்ணமூர்த்தி அண்ட் கோ அவர்களுக்கு பணியினை முடிக்கும் பொருட்டு 01.04.2022 முதல் 31.03.2023 வரை கால நீட்டிப்பு வழங்க, நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.013/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".
>
> "25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.013/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

ம.நீ.வ.து.நக.எண்.பி3/2070/4-12/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:053/2023 **பொருள் எண்.53**

பெருநர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்- 12, 14 மற்றும் 15ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component/Phase-II) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணி -- சிப்பம்- 4 முதல் 12 வரை ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை வழங்க அனுமதி.

அரசாணை எண்.80, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MC-1), நாள்.23.02.2021ன்படி விரிவாக்கம் செய்யப்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி கோவளம் வடிநிலப்பகுதிகளில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க ரூ.1714 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

மேலும், கோவளம் வடிநிலப்பகுதியில் (M1&M2 Component) பணிகள் மேற்கொள்வதற்காக வடிவமைப்பு மற்றும் கலந்தாளுநர்களாக M/s. GITEC-IGIP India Pvt Ltd (JV), M/s. GITEC-IGIP GmbH (JV), M/s. Mukesh & Associates (JV) & M/s. NK Buildcon Pvt Ltd என்ற நிறுவனத்தை KfW (German Development Bank) வங்கி நியமித்துள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் முதற்கட்டமாக Phase-Iல் சிப்பம் -1 முதல் 3 வரை ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க வடிவமைப்பு அளிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இரண்டாம் கட்டமாக கோவளம் வடிநிலப்பகுதிகளில் (M1 & M2 Component/Phase–II) ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க வடிவமைப்பு அளித்து ரூ.447.03 கோடியில் சிப்பம் -4 முதல் 12 வரை மொத்தம் 9 சிப்பங்களாக தொகுத்து KfW வழிகாட்டுதல்களின்படி மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு 04.05.2022 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

இவ்வொப்பந்தப்புள்ளி 05.05.2022 அன்று ஆங்கில செய்தித்தாளான "தி இந்து", தமிழ் செய்தித்தாளான "தினத்தந்தி", மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் ஒப்ப அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதன் தொடர்பாக Pre bid meeting 24.05.2022அன்று நடைபெற்றது. அதில் ஒப்பந்ததாரர்கள் பணிகள் தொடர்பாக கேட்ட வினாக்களுக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். மேலும், நிர்வாக நலன் கருதி ஒப்பம் சமர்பிக்க வேண்டிய நாள் 10.06.2022லிருந்து 27.06.2022 என்றும், ஒப்ப திறப்பு நாள் 10.06.2022லிருந்து 27.06.2022 என்றும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து ஒப்ப இறுதி நாளான 27.06.2022 அன்று மாலை 3.30 மணி அளவில் 9 சிப்பங்களுக்கான தொழில்நுட்ப ஆவணங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டன. ஒப்பத்தில் கலந்துக் கொண்ட 20 ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், 15 ஒப்பந்ததாரர்கள் தகுதி வாய்ந்தவர்களாக தேர்வு செய்யப்பட்டனர். தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களின் விவரங்கள் KfW வங்கிக்கு ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டு, 04.10.2022 அன்று ஒப்புதலும், தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணமும் திறக்க KfWவின் அனுமதி பெறப்பட்டு, நிதி ஆவணம் 10.10.2022 அன்று ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்பத்தில் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் பட்டியல் மற்றும் அவர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

(அட்டவணை-I)

வ-எண்	கோப்பு எண். மற்றும் சிப்பம் எண்	ஒப்பத்தில் கலந்துக் கொண்ட ஒப்பந்ததாரர் பெயர்கள் திரு/திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை 2021-22 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல் (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2022-23 ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1.	பி3/2070-4/2022 சிப்பம்-4	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	63,26,34,206.29	75,19,68,691.00	(+)18.86%	(+)11.97%
		P&C ப்ராஜெக்ட் பிரைவேட் லிமிடெட்		79,53,25,456.00	(+)25.72%	(+)18.43%
2.	பி3/2070-5/2022 சிப்பம்-5	அன்னை இன்ஃப்ரா டெவலப்பர்ஸ் லிமிடெட்	47,75,90,993.64	56,95,14,368.00	(+)19.25%	(+)12.44%
		RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்		55,90,94,043.00	(+)17.07%	(+)10.38%
3	பி3/2070-6/2022 சிப்பம்-6	சன் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் - PSK (JV)	48,71,39,458.15	62,79,85,385.00	(+)28.91%	(+) 21.52%
		எம்.கவிதா & வேலன் பில்டர்ஸ் (JV)		57,59,44,444.44	(+)18.23%	(+)11.45%
		ஆர். ராமாராவ் - RVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (JV)		முன் வைப்பு தொகை சமர்ப்பிக்கவில்லை எனவே தகுதி பெறவில்லை		
4	பி3/2070-7/2022 சிப்பம்-7	விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்	37,30,21,383.08	ஒப்ப ஏற்பு திறனில் (Bid capacity) தகுதி பெறவில்லை		
		RVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்		43,60,36,792.00	(+)16.89%	(+)10.37%
5	பி3/2070-8/2022 சிப்பம்-8	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	53,89,62,086.50	63,09,44,562.00	(+)17.07%	(+)10.52%
		அன்னை இன்ஃப்ரா டெவலப்பர்ஸ் லிமிடெட்		64,34,70,377.00	(+)19.39%	(+)12.71%
6	பி3/2070-9/2022 சிப்பம்-9	குமார் பில்டர்ஸ்	58,06,40,496.64	66,70,15,368.00	(+)14.88%	(+)8.56%
		அன்னை இன்ஃப்ரா டெவலப்பர்ஸ் லிமிடெட்		70,05,83,698.00	(+)20.66%	(+)14.02%

7	பி3/2070-10/2022 சிப்பம்-10	ரெனாட்டஸ் ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	50,98,92,132.59	61,23,35,388.00	(+)20.09%	(+)13.16%
		சி.எம்.கே .ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்		58,53,32,483.00	(+)14.80%	(+)8.17%
		விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்		முன் வைப்பு தொகை சமர்ப்பிக்கவில்லை எனவே தகுதி பெறவில்லை		
		RVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் - ஆர். ராமாராவ் (JV)		முன் வைப்பு தொகை சமர்ப்பிக்கவில்லை எனவே தகுதி பெறவில்லை		
8	பி3/2070-11/2022 சிப்பம்-11	சன் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் - PSK (JV)	36,96,15,725.72	43,98,98,141.00	(+)19.01%	(+)12.42%
		எம்.கவிதா & வேலன் பில்டர்ஸ் (JV)		46,39,50,041.00	(+)25.52%	(+)18.57%
9	பி3/2070-12/2022 சிப்பம்-12	ஆர். ராமாராவ் - RVS கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் (JV)	36,52,49,725.21	42,65,55,156.00	(+)16.78%	(+)9.79%
		விஜய் கௌதம் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்		ஒப்ப ஏற்பு திறனில் (Bid capacity) தகுதி பெறவில்லை		

மேற்கண்ட 9 சிப்பங்களில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி விவரப்பட்டியல் மற்றும் ஒப்பந்தபுள்ளி தொகை கீழ்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(அட்டவணை-II)

வ.எண்.	கோப்பு எண். மற்றும் சிப்பம் எண்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள்	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை(12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2021-22 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி	ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் 2022-23 ஆண்டு அலுவலக விலை விவரப் பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	பி3/2070-4/2022 சிப்பம் –4	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	63,26,34,206.29	75,19,68,691.00	(+)18.86%	(+)11.97%
2	பி3/2070-5/2022 சிப்பம்-5	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	47,75,90,993.64	55,90,94,043.00	(+)17.07%	(+)10.38%
3	பி3/2070-6/2022 சிப்பம்-6	எம்.கவிதா & வேலன் பில்டர்ஸ் (JV)	48,71,39,458.15	57,59,44,444.44	(+)18.23%	(+)11.45%
4	பி3/2070-7/2022 சிப்பம்-7	RVS கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்	37,30,21,383.08	43,60,36,792.00	(+)16.89%	(+)10.37%

5	பி3/2070-8/2022 சிப்பம்-8	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	53,89,62,086.50	63,09,44,562.00	(+)17.07%	(+)10.52%
6	பி3/2070-9/2022 சிப்பம்-9	குமார் பில்டர்ஸ்	58,06,40,496.64	66,70,15,368.00	(+)14.88%	(+)8.56%
7	பி3/2070-10/2022 சிப்பம்-10	சி.எம்.கே ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	50,98,92,132.59	58,53,32,483.00	(+)14.80%	(+)8.17%
8	பி3/2070-11/2022 சிப்பம்-11	சன் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் - PSK (JV)	36,96,15,725.72	43,98,98,141.00	(+)19.01%	(+)12.42%
9	பி3/2070-12/2022 சிப்பம்-12	ஆர். ராமாராவ் - - RVS கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் (JV)	36,52,49,725.21	42,65,55,156.00	(+)16.78%	(+)9.79%

குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியானது 2021-22 ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் இப்பணிகளுக்கு ஒப்ப சதவீதம் கூடுதலாக இருப்பதை கருத்தில் கொண்டு அனைத்து ஒப்பந்ததாரர்களிடமும் விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்த KfW வங்கியிடம் கருத்து கேட்கப்பட்டு, 02.11.2022 அன்று விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்த KfW வங்கியின் தடையில்லா சான்றிதழ் (NOC) பெறப்பட்டது. குறைந்த ஒப்ப புள்ளிகள் அளித்த (L1) ஒப்பந்ததாரர்களிடம் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி திருவாளர்கள்.RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் மட்டும் விலைக் குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார், மற்ற 8 ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்யவில்லை. முதற்கட்ட பேச்சுவார்த்தைக்குபின் திருவாளர்கள்.RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட் அவர்கள் விலைக்குறைப்புக்கு பின் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-III)

வ.எண்.	கோப்பு எண். மற்றும் சிப்பம் எண்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்)	முதற் கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலை விவரப்பட்டியல்படி	பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2022-23 அலுவலக விலை விவரப் பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	பி3/2070-4/2022 சிப்பம் -4	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	63,26,34,206.29	74,78,27,971.00	(+)18.21%	(+)11.36%

முதற்கட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒரு ஒப்பந்ததாரர் மட்டும் விலைக்குறைப்பு அளித்துள்ளார். அவருடைய விலைக்குறைப்பு புள்ளியானது 2021-22ஆம் ஆண்டு அலுவலக விலை விவரப்பட்டியலுடன் ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் கூடுதலாக இருப்பதை கருத்தில் கொண்டு, மீண்டும் விலைக்குறைப்பு செய்ய அனைத்து L1 ஒப்பந்ததாரர்களிடமும் விலைக் குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. அதன்படி ஒப்பந்ததாரர்கள் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்குபின் ஒப்பந்ததாரர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது.

(அட்டவணை-IV)

வ.எண்.	கோப்பு எண். மற்றும் சிப்பம் எண்	குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திரு / திருவாளர்கள் (L1)	பணியின் அலுவலக தொகை (12 சதவீதம் GSTசேர்த்து) (ரூபாய்)	இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப தொகை	பேச்சுவார்த்தைக்குப் பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2021-22 அலுவலக விலை விவரப் பட்டியல்படி	பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்ப சதவீதம் 2022-23 அலுவலக விலை விவரப் பட்டியல்படி
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
1	பி3/2070-4/2022 சிப்பம்-4	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	63,26,34,206.29	70,50,75,128.30	(+)11.45%	(+)4.99%
2	பி3/2070-5/2022 சிப்பம்-5	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	47,75,90,993.64	53,17,38,859.70	(+)11.34%	(+)4.98%
3	பி3/2070-6/2022 சிப்பம்-6	எம்.கவிதா & வேலன் பில்டர்ஸ் (JV)	48,71,39,458.15	54,25,88,444.44	(+)11.38%	(+)4.99%
4	பி3/2070-7/2022 சிப்பம்-7	RVS கன்ஸ்ட்ரக் ஷன்ஸ்	37,30,21,383.08	41,47,61,710.00	(+)11.19%	(+)4.99%
5	பி3/2070-8/2022 சிப்பம்-8	RPP இன்ஃப்ரா ப்ராஜெக்ட்ஸ் லிமிடெட்	53,89,62,086.50	59,92,62,069.10	(+)11.19%	(+)4.97%
6	பி3/2070-9/2022 சிப்பம்-9	குமார் பில்டர்ஸ்	58,06,40,496.64	64,50,96,845.00	(+)11.10%	(+)4.99%
7	பி3/2070-10/2022 சிப்பம்-10	சி.எம்.கே ப்ராஜெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட்	50,98,92,132.59	56,80,83,133.00	(+)11.41%	(+)4.98%
8	பி3/2070-11/2022 சிப்பம்-11	சன் கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் - PSK (JV)	36,96,15,725.72	41,07,60,060.00	(+)11.13%	(+)4.98%
9	பி3/2070-12/2022 சிப்பம்-12	ஆர். ராமாராவ் - RVS கன்ஸ்ட்ரக் ஷன்ஸ் (JV)	36,52,49,725.21	40,79,06,676.00	(+)11.68%	(+)4.99%

இந்த ஒன்பது ஒப்பந்ததாரர்களில் ஒப்பந்த புள்ளி தொகை 2021-22 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+) 11.10 % முதல் (+) 11.68% வரை அதிகம் ஆகும் மற்றும் இது 2022-23 ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (+)4.97% முதல் (+)4.99% அதிகம் ஆகும்.

மேற்கண்ட ஒப்பந்ததாரர்கள் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாததாலும், 2021-22 ஆம் ஆண்டிற்கான தொழிலாளர் செலவு மற்றும் பொருள் செலவு 10% அதிகரிப்பைக் கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்டுள்ள ஒப்ப சதவீதங்கள் ஏற்க பரிந்துரை வேண்டி இந்த ஒன்பது சிப்பங்களுக்கான ஒப்பந்த புள்ளிகள் விவர அறிக்கை 13.01.2023 அன்று துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் தலைமையிலான ஒப்ப ஆய்வுக் குழுவிடம் (Tender Scrutiny Committee) சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

எனவே,.

1) சிப்பம்-4, 5, 6, 7, 8, 9, 10, 11 & 12ல் கோவளம் வடிநிலப்பகுதியில் (M1 & M2 Component, Phase-II) உள்ள பல்வேறு தெருக்களில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு மேற்கண்ட அட்டவணை- IVல் கலம் எண் 6ல் உள்ள ஒப்ப புள்ளி மற்றும் கலம் எண்.5ல் உள்ள ஒப்பத் தொகைக்கு (12% GST வரி சேர்த்து) பணியினை வழங்கவும்,

2) சிப்பம்-4 முதல் 12 வரையில், கோவளம் வடிநிலப்பகுதியில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்கும் திட்டத்தில் KfW வங்கி நிதியின்கீழ் ஒப்பந்ததார்களுக்கு பணிக்கான பட்டி தீர்வு செய்யவும், மேலும் நடைமுறையில் GST 18 சதவீதம் இருப்பதால் கூடுதலாக உள்ள GST 6 சதவீதம் ஒப்பந்ததாரர்களுக்கு பட்டித்தொகையில் சேர்த்து வழங்கவும்.

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.020/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.014/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

* * * * * *

மநீ.வ.து.ந.க.எண்.பி1/ 0111 /2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:054/2023 **பொருள் எண்.54**

பெருநகர சென்னை மாநகராட்சி – மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-10, பழைய கோட்டம்-132, புதிய கோட்டம்-135 - சிங்கார சென்னை 2.0 Phase - I, அசோக் நகர், 18வது நிழற்சாலை மழைநீர் வடிகால்வாய் பணி - கூடுதலாக அண்ணா பிரதான சாலையில் மழைநீர்வடிகால்வாய் கட்டும் பணி - திட்டமதிப்பீட்டில் உள்ள 18வது நிழற்சாலையில் கூடுதல் நீளம் கட்டும் பணிக்கு அனுமதி

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-10, பழைய கோட்டம்-132, புதிய கோட்டம்-135ல் மழைநீர் வடிகால் துறை மூலம் சிங்கார சென்னை 2.O Phase-1 திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி M/s. Pearl Engineers Construction co operative society pvt ltd நிறுவனம் மூலம் ரூ.7,72,32,524.60 மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது, அதில், இந்திய தொழில்நுட்பக்கழகம், சென்னையால் அளிக்கப்பட வடிவமைப்பு 25.05.2022 நாளிட்ட மதிப்பீட்டில் ஏற்கனவே ஒப்பம் கோரப்பட்ட 7 சாலைகளுடன் கூடுதலாக அண்ணா பிரதான சாலையில் மழைநீர்வடிகால்வாய் கட்டுவதற்கும் மற்றும் திட்டமதிப்பீட்டில் உள்ள 18வது நிழற்சாலையில் கூடுதல் நீளம் கட்டுவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இப்பரிந்துரையின் அடிப்படையில் இவ்விரண்டு பணிகளுக்கும் அனுமதி கேட்டு மண்டல அலுவலர்-10 அவர்கள் மூலம் 05.12.2022 நாளிட்ட குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. பணி மற்றும் மதிப்பீட்டு தொகையின் விவரம் பின்வருமாறு,

வ. எண்	கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய சாலையின் விவரம்	கூடுதலாக பணி மேற்கொள்ள வேண்டிய நீளம் (மீ)	அளவுகள் (மீ)	மதிப்பீட்டு தொகை (ரூ)
1	அண்ணா பிரதான சாலை	180	2.00 x 1.50	1,40,55,000.00
2	18வது நிழற்சாலை	84	1.20 x 1.20	52,45,000.00
				1,93,00,000.00

மேற்கண்ட அட்டவணையின் படி கூடுதலாக அண்ணா பிரதான சாலையில் 180.00மீ நீளம் மழைநீர்வடிகால்வாய் கட்டுவதற்கும் மற்றும் திட்டமதிப்பீட்டில் உள்ள 18வது நிழற்சாலையில் கூடுதலாக 84.00மீ நீளம் கட்டுவதற்கும் ரூ.1,93,00,000/- செலவாகும்.

மேற்குறிப்பிட்ட சாலையில் மழைநீர்வடிகால்வாய் கட்டுவதற்கு சிங்கார சென்னை 2.0, Phase-1 நிதியில் ஏற்கனவே ஒப்பம் கோரப்பட்டுள்ள அசோக் நகர், 18வது நிழற்சாலை ஒப்பத்தொகையான ரூ.7,72,32,524.60ஐ விட கூடுதலாக ரூ.1,93,00,000.00 செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இத்தொகை சிப்பத்தின் ஒப்பத்தொகையை விட 24.99% கூடுதலாகும்.

எனவே,

1) இந்திய தொழில்நுட்ப கழகம், சென்னை அளித்த வடிவமைப்பு பரிந்துரையின் படி, கூடுதலாக அண்ணா பிரதான சாலையில் மழைநீர் வடிகால் கட்டுவதற்கும் மற்றும் திட்ட மதிப்பீட்டில் உள்ள அசோக்நகர் 18வது நிழற்சாலையில் கூடுதல் நீளம் மழைநீர் வடிகால் அமைப்பதற்கு அனுமதியும்,

2) திருவாளர். Pearl Engineers Construction co operative society pvt ltd இதற்கான செலவீனமான ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.7,72,32,524.60ஐ விட கூடுதலாக ரூ.1,93,00,000/- அதாவது 24.99% அதிகம் ஒப்பந்ததாரருக்கு வழங்க அனுமதியும்,

3) மேற்குறிப்பிட்ட செலவீனமாகும் ரூ.1,93,00,000/- தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.021/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.015/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

மநீ.வ.து.ந.க.எண்/0943/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 19.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:055/2023 **பொருள் எண்.55**

பெருநகர சென்னை மாநகராட்சி - மழைநீர் வடிகால் துறை - மண்டலம்-13 - வார்டு - 176 - வெள்ள நிவாரண நிதியின் கீழ் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மேற்கொண்ட திருவாளர்கள். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடமிருந்து 2 தெருக்களுக்குண்டான பணி - சிங்கார சென்னை 2.0 நிதி மண்டலம் 13ல் நேதாஜி சாலையில் பணி மேற்கொண்ட திருவாளர். ஆர்.பி.பி இன்ப்ரா ப்ராஜக்ட் லிமிடெட் அவர்களிடமிருந்து 150 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி - இவ்விரண்டு பணிகளையும் மண்டலம் -13 சிங்கார சென்னை 2.0 Phase II சிப்பம் - 7 பணி மேற்கொண்டிருக்கும் திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13ல், AGS காலனி பள்ளி சாலை மற்றும் 6 தெருக்களில் மழைநீர் வடிகால் துறை மூலம் சிங்கார சென்னை 2.0 Phase-II திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணி திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் ரூ 5,17,64,060.07 /- மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,

இந்நிறுவனத்திற்கு இப்பணியுடன் மண்டலம்-13, வார்டு - 176 ல் உள்ள வெள்ள நிவாரண நிதியின் கீழ் பணி மேற்கொண்ட திருவாளர். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடமிருந்து பத்மாவதி நகர் 3வது தெருவில் 105 மீட்டருக்கும், எம்ஜிஆர் நகர் 12 வது மெயின் ரோடு 115 மீட்டருக்கும் துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 12.08.2022 தேதியிட்ட அனுமதி பெறப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

மேலும், கூடுதலாக சிங்கார சென்னை 2.0 நிதியில் சிப்பம் - 6 ன் ஒப்பந்ததாரரான திருவாளர்.M/s. RPP Infra Projects Ltd., அவர்களிடமிருந்து மண்டலம் - 13 வார்டு-175ல் உள்ள நேதாஜி சாலையின் மொத்த நீளமான 884 மீட்டரில் 467 மீட்டர் மட்டுமே Top Slab அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு மெத்தனமாக நடைபெற்று வந்ததால் விரைந்து முடிக்க ஏதுவாக மீதமுள்ள 417 மீட்டரில் இருந்து 150மீட்டர் நீளத்திற்கு மட்டும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு மண்டல அலுவலர் - 13 அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இவ்விரண்டு நிறுவனங்களின் பணி மற்றும் திட்ட மதிப்பீட்டின் விவரம்

(1) Dropped works details:-

Scheme	Package No	Name of the Contractor & Tender Pencentage	Name of the Location	Dropped Reasons	Length in(M)	Estimate Value in Lakhs (including GST)
Flood Relief Fund	28	M/s Shanmugavel Construction (+) 16.80%	Padmavathi Nagar 3rd Street	Slow work from Contractor	105	39.12
			MGR Nagar 12th Main Road	Slow work from Contractor	115	43.21
Singara Chennai 2.0	6	M/s RPP Infra Projects Ltd ., (+) 4.34%	Nethaji Road	Slow work from Contractor	150	61.00
				Total	370	143.33

(2) Additional work allotted details :-

Scheme	Package No	Name of the Contractor & Tender Pencentage	Name of the Location	Length in(M)	Estimate Value in Lakhs (including GST)
Singara Chennai 2.0	7	M/s Sathya Enterprises (+) 0.00030%	Padmavathi Nagar 3rd Street	105	33.50
			MGR Nagar 12th Main Road	115	37.00
			Nethaji Road	150	58.47
			Total	370	128.97

எனவே,

1) மண்டலம்-13, வார்டு - 176 ல் உள்ள வெள்ள நிவாரண நிதியின் கீழ் பணி மேற்கொண்ட திருவாளர். சண்முகவேல் கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடமிருந்து பத்மாவதி நகர் 3வது தெருவில் 105 மீட்டருக்கும், எம்ஜிஆர் நகர் 12 வது மெயின் ரோடு 115மீட்டருக்கும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு அனுமதியும்

2) சிங்கார சென்னை 2.0 நிதியில் சிப்பம் – 6 ன் ஒப்பந்ததாரரான திருவாளர் *M/s. RPP Infra Projects Ltd.*, நிறுவனத்திடமிருந்து மண்டலம் – 13 வார்டு-175ல் உள்ள நேதாஜி சாலையின் மொத்த நீளமான 884 மீட்டரில் 467 மீட்டர் மட்டுமே *Top Slab* அமைக்கும் பணி நடைபெற்று வந்ததால் பணியினை விரைந்து முடிக்க ஏதுவாக மீதமுள்ள 417 மீட்டரில் இருந்து 150மீட்டர் நீளத்திற்கு மட்டும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு அனுமதியும்,

3) திருவாளர். சத்தியா எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.5,17,64,060.07/- ஐ விட கூடுதலாக ரூ1,28,97,000/- அதாவது 24.92% அதிகம் ஒப்பந்ததாரருக்கு வழங்க அனுமதியும்,

4) மேற்குறிப்பிட்ட செலவீனமாகும் ரூ.1,28,97,000/- தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியில் மேற்கொள்ள அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"23.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.022/2023, நாள்.23.01.2023-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு(வ.வி.(ம)நி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"25.01.2023 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.016/2023 நாள்.25.01.2023ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது".

*** * * * * ***

க.து.ந.க.எண்.பி1/3307/2022

முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 20.01.2023 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்:056/2023 **பொருள் எண்.56**

ஒப்பம் - பெருநகர சென்னை மாநகராட்சி - கட்டடத்துறை மண்டலம்-02, வார்டு-22, தேவராஜன் தெருவில் உள்ள தொடக்க பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, கட்டடத்துறை, மண்டலம்-02, வார்டு-22, தேவராஜன் தெருவில் உள்ள தொடக்க பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டும் பணிக்கு முதன்மை செயலர்/ ஆணையர் அவர்களின் 17.10.2022 நாளிட்ட நிர்வாக அனுமதி பெற்று நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒப்பம் கோரப்பட்டுள்ளது. விவரம் பின்வருமாறு:

1	பணியின் பெயர்	மண்டலம்-02, வார்டு-22, தேவராஜன் தெருவில் உள்ள தொடக்க பள்ளி மற்றும் உயர்நிலை பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	தலைமை பொறியாளர்(NNT) அவர்களின் அனுமதி நாள். 14.10.2022
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-2
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2021 -2022ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 2,52,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ. 2,06,09,021.40
	(ஆ) எதிர்பாரா செலவு (2.5%)	ரூ. 4,69,174.24
	(இ) தரக்கட்டுப்பாடு (1.0%)	ரூ. 2,06,090.22
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் (1.0%)	ரூ. 2,06,090.22
	(உ) சரக்கு மற்றும் சேவை வரி 18%	ரூ. 37,09,623.86
	bkh¤j«	ரூ. 2,52,00,000.00
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1.பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர், நாள் 17.11.2022 2.டெக்கான கிரானிக்கல் நாள் 12.11.2022 3.முரசொலி நாள்: 12.11.2022
7	ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள்	12.12.2022
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	நமக்கு நாமே திட்டம் நிதி
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	நான்கு ஒப்பங்கள் இணையத்தளத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது
11	ஒப்பந்ததாரர் தகுதி வகுப்பு சான்று இணைத்துள்ளாரா-?	ஆம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 13.12.2022 அன்று நான்கு ஒப்பங்கள் பெறப்பட்டன. ஒப்பம் திறக்கப்பட்டு இந்த நான்கு ஒப்பந்ததாரர்களும் ஒப்ப நிபந்தனைகளுக்கு ஏற்ப தகுதி வாய்ந்தவர்கள் என்று அறியப்பட்டது.
ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம் பின் வருமாறு :

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்	2021-2022 பணியின் அலுவலக மதிப்பு (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	2021-2022ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி ஒப்பிடுகையில்
1	திருவாளர். அண்ணாமலை கன்ஸ்ட்ரக்ஸன்,	20609021.44	22669923.58	(+)10.00 % அதிகம்
2	திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன்,	20609021.44	20176231.99	(-)2.10% குறைவு
3	திருவாளர். எஸ்.வள்ளி	20609021.44	21019140.97	(+)1.99% அதிகம்
4.	திருவாளர். எஸ்.ஆர்.பி. கன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி,	20609021.44	20609021.44	0%

மேற்கண்ட ஒப்பந்ததாரர்களில் குறைந்த ஒப்ப புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களின் ஒப்பத் தொகை 2021-2022 ஆம் ஆண்டின் அலுவலக விலை பட்டியலின்படி பணியின் மதிப்பு தொகையான ரூ.2,06,09,021.44 யைவிட (-) 2.10% குறைவாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.2,01,76,231.99 ஆகும். ஒப்பந்ததாரருக்கு விலைக்குறைப்பு செய்ய கோரப்பட்டதில், திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன் அவர்கள் 05.01.2023 நாளிட்ட கடிதத்தில் விலைகுறைப்பு ஏதும் செய்ய இயலாது என தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்ப புள்ளி அளித்த திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களின் ஒப்பத் தொகை ரூ. 2,01,76,231.99 மற்றும் 18% சதவீத சரக்கு மற்றும் சேவை வரி ரூ. 36,31,722.00 ஐ சேர்த்து ஆக மொத்தம் ரூ.2,38,07,954/- க்கு (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தி எட்டு இலட்சத்து ஏழாயிரத்தி தொள்ளாயிரத்து ஐம்பத்தி நான்கு மட்டும்) இப்பணியை மேற்கொள்ள திருவாளர்.கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஸன் அவர்களுக்கு ஒப்பம் வழங்கலாம் என கருதப்படுகிறது .

மேலும், *CCMC ACT, 1919* பிரிவு *80*-ன் படி ரூபாய் ஒரு கோடிக்கு மேல் உள்ள ஒப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு உள்ளது.

